

ரகசியத்தின் அரூப நிழல்கள்

லஷ்மி சரவணகுமார்

https://telegram.me/aedahamlibrary

ரகசியத்தின் அரூப நிழல்கள்.

லஷ்மி சரவணகுமார்

https://telegram.me/aedahamlibrary

Copyright © 2019 by Lakshmi Saravanakumar

All rights reserved. No part of this publication may be reproduced, distributed, or transmitted in any form or by any means, including photocopying, recording, or other electronic or mechanical methods, without the prior written permission of the author, except in the case of brief quotations embodied in critical reviews and certain other noncommercial uses permitted by copyright law.

Email: lachudreams@gmail.com

https://telegram.me/aedahamlibrary

மரியாதைக்குரிய எழுத்தாளர் திலீப்குமாருக்கு.

https://telegram.me/aedahamlibrary

இச்சையின் வெவ்வேறு முகங்கள்.

மனிதர்களை கவனமாக அணுகுகிறேன், உரையாடுகிறேன். ஒரு கதை சொல்லியாய் அவர்களின் வாதைகளை உள்வாங்கிக் கொள்ள விழைகிற போதெல்லாம் மனித மனங்களுக்கு வயது வேறுபாடுகளின்றி உடல் எப்போதும் சிக்கலானதொன்றாகவே இருந்து வருகிறது. இச்சையை இனப்பெருக்கத்திற்கான ஒரு தேவை என்கிற அளவில் மட்டுமே வாழ்வில் கடைபிடித்து வரும் நம் சமூகத்தில் அது உருவாக்கும் அகச்சிக்கல்களை கொந்தளிப்புகளைக் குறித்து உரையாடக்கூடிய ஒருவரை பொது சமூகமும் அவர்களை குளிர்விப்பதற்காக மட்டுமே இலக்கியம் படைப்பவர்களும் தீண்டத்தகாதவனாகவே பார்ப்பார்கள். ஜி.நாகராஜனை அவர் காலத்தின் சாதனை என்று அடையாளப்படுத்துகிறவர்கள்கூட தன் காலத்தின் பிசிறுகளை எழுதுகிறவர்களைப் பொருட்படுத்துவதில்லை. ஒரு எழுத்தாளன் தன் காலத்தில் கொண்டாடப்படாமல் போகலாம், ஆனால் வாசிக்கப்படாமல் போகக்கூடாது.
இந்தக் கதைகள் வெளியானபோது எதிர்கொண்ட விமர்சனங்களும் கேள்விகளும் அனேகம். ரகசியத்தின் அரூப நிழல்கள் கதை சமீபத்திய வருடங்களில் அதிக சர்ச்சைகளை உருவாக்கின கதைகளில் ஒன்று. அந்தக் கதை எழுதியதற்காகவே சிலர் என்னுடனான நட்பை முறித்துக் கொண்டார்கள். அதே சமயம் எதிர்ப்பை மீறி பெருமளவில் அந்தக் கதை வாசிக்கப்பட்டதும் எனக்கு முக்கியமானது. போலவே, கம்பமத யானை சிறுகதையும் இப்படியாக அவளின் சில காதலர்கள் கதையும். ஒரு வகையில் இந்த மூன்று கதைகளுமே பெண்களின் இச்சைகளைக் குறித்தே பேசுகின்றன. இந்தக் கதைகளின் ஆண்கள் இந்தக் கதையில் உலவும் கதாப்பாத்திரங்கள் மட்டுந்தான். இந்தக் கதையின் உலகம், ஆதாரம் எல்லாமே பெண்கள் மட்டுமே. அதனாலேயே இந்தக் கதைகள் காமத்தை மையப்படுத்தி நான் எழுதிய மற்ற கதைகளில் இருந்து முற்றிலும் வேறுபடுகின்றன. ஒரு சிறு இடைவெளிக்குப்பின் இன்னும் சொல்லப் போனால் நூலாக வடிவம் பெறுவதற்கு முன்பாகவே இந்தக் கதைகளை கிண்டிலில் வெளியிடுவதில் எனக்கு கூடுதல் மகிழ்ச்சி.

லஷ்மி சரவணகுமார்
சென்னை.

https://telegram.me/aedahamlibrary

கம்பமத யானை. *

”எத்தனையளவு உள்ளே போகிறேனோ
அத்தனை பசுமை மலைகள்.”

டானடா சண்டூகா *(ஜென் கவிதைகள்)* – தமிழில் ஷங்கரராமசுப்பிரமணியன்.

கண்ணுக்கெட்டிய உயரம் வரை மலையை இருள் சூழ்ந்திருந்தது. பௌர்ணமி நிலவின் வெளிச்சத்தை குடித்துக் கிறங்கிப் போயிருந்த மந்தமான இருள். வண்டாரி, பழையூ,செம்பட்டி, அத்திபட்டி ஊர்களிலிருந்து துணைக்கு வந்திருந்த ஆட்களுடன் செல்வராஜும் ஜோதியும் மலையிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தார்கள். மஹாலிங்கத்தின் தரிசனத்திற்காக சாரை சாரையாய் மக்கள் தாணிப்பாறை வழியாய் வந்து கொண்டிருந்தாலும் சாப்டூர் சுற்றின கிராமத்து மக்களுக்கு இன்னும் இதுதான் குறுக்குப் பாதை. தாணிப்பாறையிலிருந்து செல்வதை விடவும் தூரம் குறைவுதான், ஆனால் ஏறி இறங்கக் கடினம். நிமிர்ந்து கொஞ்சமும் வளைவற்ற மலையில் ஏறும் போது வியர்த்து மூச்சு வாங்கும். உடலின் சக்தியையெல்லாம் திரட்டி நடந்தால் பாதி வழியில் சமயங்களில் திசை மிரண்டு போகவும் கூடும். இறங்கும் போது உடல் ஒருநிலையில் இருக்காது. கீழ் நோக்கி வேகமாகத் தள்ளுவதால் தலைசுற்றி மயக்கம் வரும். அனுபவஸ்தர்கள் இல்லாமல் சென்றால் ஆபத்து. ஆனால் ஊர்க்காரர்களுக்கு இந்தப் பாதையின் ஒவ்வொரு அங்குலமும் பிடிபட்டுவிட்டிருந்ததால் கண்ணைக் கட்டிவிட்டாலும் போய் வந்துவிடுவார்கள். வழிகள் மனிதர்களுக்கு பழக்கத்தின் நீட்சி.

விடிவதற்கான வெளிச்சம் வர இன்னும் அவகாசமிருந்தது. பழையூர் புளியந்தோப்பைத் தாண்டி ஓடையை நெருங்கியபோது மனித நடமாட்டம் கண்ட மயில்கள் இடைவெளியில்லாமல் அகவத் துவங்கின. கடந்த வாரம் பெய்திருந்த ஒற்றை மழையின் நீர் இன்னும் ஓடையில் ஓடிக் கொண்டிருந்ததால் மெல்லியதாய் நீரின் சலசலப்பு. கருப்புதான்

https://telegram.me/aedahamlibrary

எல்லோருக்கும் வழிகாட்டியாய் முன்னால் சென்று கொண்டிருந்தான். காடும் மலையுமே கெதியென வாழ்ந்து பழகியவனுக்கு பெயருக்கேத்தது போல் உடம்பு. ஆனால் மினுங்கி ஒளிரும் அபூர்வமான கறுப்பு. கையிலிருந்த டார்ச் விளக்கை அணைத்தவன் இருளினூடாக ஓடையின் சத்தத்தைக் கூர்ந்து கவனித்தான். யானையோ மானோ நரிகளோ நீர் அருந்தலாம் என்பது போல் சலசலப்பு. கருப்பு செல்வராஜின் தம்பி. காடும் இந்த ஊரும் போதுமென எந்த வேலைகளுக்கும் தன்னைப் பழக்கிக் கொள்ளாதவனுக்கு மதுரைக்கு அப்பால் ஊர்கள் இருக்கக் கூடுமென்கிற நம்பிக்கை இல்லை. எப்போதாவது பழங்காநத்தத்தில் இருக்கும் செல்வராஜின் வீட்டிற்குப் போய் வருவதால் மதுரை கண்ணால் கண்ட சாட்சி. காண முடியாத நிலங்கள் கதைகளில் மட்டுமே இயங்கக்கூடியவை என்று நம்புகிறவன்.

மலையிலிருந்து இறங்கியவர்களின் உடல் வியர்த்து மூச்சு இரைத்தபடியிருக்க, ஜோதி மட்டும் கொஞ்சமும் களைப்படையாதவளாய்த் தெரிந்தாள். நீண்டதூர மேய்ச்சலுக்கு பழக்கப்பட்ட காட்டுமாட்டைப் போல் யாரையும் சட்டை செய்யாமல் திமிறும் உடல். இந்த இருளில் அவளைப் பார்க்கையில் செல்வராஜுக்கு அச்சமாகக் கூட இருந்தது. சமீப நாட்களாக இருளில் அவள் அச்சத்திற்குரியவள். ”பொறுத்துப் போ மயினி, ஏன் வேக வேகமா நடக்கற?” வழி முழுக்க சொல்லியபடியே வந்த கருப்பின் பேச்சை அவள் சட்டை செய்யவே இல்லை. இப்பொழுதும் ஓடையில் மிருக அசைவு கேட்ட நின்றிருந்தவர்களை விட்டுவிட்டு முன்னால் நடந்த ஜோதியை கருப்பு கையைப் பிடித்து நிறுத்தினான். ஜோதியின் கையில் பாதிகூட இல்லாத மெலிந்த அவன் கையில் புரண்டிருந்த நரம்புகளின் வலு அவளை நிறுத்தப் போதுமானதாயில்லை. “மயினி யான தண்ணி குடிக்குது. செத்த பொறு.” காற்றின் ஓசையை தொந்தரவு செய்யாத மெல்லிய சத்தத்தில் சொல்லியவனைப் பார்த்துச் சிரித்தவள், “தெரியும் கருப்பு அதான் போறேன்.” தொடர்ந்து நடந்தாள். உடன் வந்திருந்த ஆட்களுக்கெல்லாம் சங்கடம், தொடர்ந்து செல்லவும் பயம். “அவள விட்றா, அடங்காப்பிடாரி முண்ட. சொன்னா கேக்க மாட்டா.” ஜோதிக்கு கேட்காத சத்தத்தில் செல்வராஜ் முனகினான். பழையூரின் காட்டுப் பகுதியில் முனி நாட்டம் அதிகமாகி இருப்பதான அச்சம் சுற்றி இருக்கும் ஊர்களுக்கெல்லாம் பரவியிருந்தது. உயிர் பலியெடுக்கக் கூடுமென்று எல்லோரும் நம்பினர். இரவில் தனித்து அலைகிறவர்கள் மீது முனி பெருநாட்டம் கொள்ளும். மரங்களின் அசைவும் இலைகளின் சலசலப்பும் முனிகளின் ஜடாமுடிகளாய் ஒருபுறம் அச்சுறுத்த, அசையும் யானையாய் இருளில் நளினமாக நடந்து சென்ற ஜோதி முனியின்

https://telegram.me/aedahamlibrary

உயிர்சாட்சியாய்த் தெரிந்தாள் அவர்களுக்கு.

https://telegram.me/aedahamlibrary

2. வேழம்

ஜோதியின் கணவன் என்பதைத் தாண்டி சுவராஸ்யமாக சொல்வதற்கு செல்வராஜைக் குறித்து எதுவுமில்லை. சுமாராக படித்து சரியான வயதில் சுமாரானதொரு வேலைக்கும் சென்றுவிட்டவனுக்கு அவள் நெருங்கிய உறவு. தன்னை விடவும் நான்கு இஞ்ச் உயரம் அதிகமிருந்தும் அவளையே திருமணம் செய்து கொள்ளவேண்டுமென பிடிவாதமாய் இருந்தான். செல்வராஜ் அவளைப் பார்க்கும் போதெல்லாம் பேரிளம் பருவத்திலிருக்கும் பெண்ணொருத்தியின் மீது கொள்ளும் கைக்கிளைக் காதல் கொண்டவனின் தவிப்பையே உணர்வான். இப்பொழுதும் கூட அவளுடன் கூடுகிற பொழுதுகளில் பதின் பருவத்து இளைஞனிடம் காணப்படும் பதட்டமே வெளிப்படும். கலெக்டர் அலுவலகத்தில் தனக்கிருந்த பாதுகாப்பான வேலை காரணமாகவும், அவள் மீது எந்தவிதத்திலும் உடல் ரீதியான வன்முறையை பிரயோகிக்கும் தைரியமற்றவன் என்ற நம்பிக்கையிலுமே அவள் தன்னைத் திருமணம் செய்து கொள்ள தயங்காமல் ஒப்புக் கொண்டாள் என்பதை இவன் நன்கு புரிந்து வைத்திருந்தான்.

இன்னும் வெளி உலகின் புழக்கங்களுக்கு அதிகம் பழகாத சாப்டூரிலிருந்து மதுரை கலெக்டர் அலுவலகத்திற்கு வேலைக்குச் சென்ற முதல் ஆள் இவன். ஒரு அக்கா ஒரு தம்பியென பெரிய குடும்பம். அத்திபட்டி போகும் வழியில் பத்துப் பதினைந்து ஏக்கர் வயலும், ஓடைக்கு முன்பாக மலையைப் பார்த்துச் செல்லும் பாதையில் தென்னந் தோப்புமாய் வருமானத்திற்கு குறைவில்லாத சொத்து. எத்தனை கடுமையான கோடையிலும் கூட நீர்வரத்து குறைந்து விவசாயம் நொடித்துப் போகும் நிலையில்லாமல் செழித்த ஊர். சூரிய அஸ்தமனத்திற்கு முன்பாகவே மலையிலிருந்து இறங்கி வரும் இந்தக் காற்றிற்கு பழக்கப்பட்ட ஒருவனுக்கு இந்த ஊரைவிட்டுச் செல்லும் மனம் வராது. உடலின் அத்தனை நரம்புகளுக்குள்ளும் புகுந்து சென்று கிளர்த்தும் தனித்துவம் அந்த காற்றுக்குண்டு. முதல் சில மாதங்கள் ஊரிலிருந்துதான் வேலைக்குப் போய் வந்தான். ”இம்புட்டுத் தூரம் தெனம் அலைஞ்சா உடம்பு கெட்டுப் போயிரும்டா. பேசாம மதுரைலயே ஒரு வீடப் பாரு.” என அவன் அய்யாதான் எடுத்துச் சொன்னார். செல்வராஜ் ஊரிலிருந்து விலகி இருக்க தயங்கியதற்கான இன்னொரு காரணம் , தம்பி கருப்பு. மனம் போன போக்கில் சுற்றிக் கொண்டிருக்கும் அவனை எப்படியாவது சரி செய்து தன்னைப் போல் நல்ல வேலைக்கு அனுப்ப வேண்டுமென்பது இவன் விருப்பம். “வேல

https://telegram.me/aedahamlibrary

வெட்டிக்குப் போயிதான் கஞ்சி குடிக்கனும்னு நம்ம குடும்பத்துக்கு தல எழுத்து இல்லியேண்ணே. காடு கர இருக்குல்ல. இதுல வர்ற காசு போதாதா? என்னய இப்டியே விட்றுண்ணே.” அவன் பிடிவாதமாக மறுத்தான்.

பழங்காநத்தத்தில் அவர்களிருந்த வீதி நெரிசலானது. அதிகமும் இளைஞர்கள் நிரம்பிய அந்த வீதியின் கடைசி வீடு செல்வராஜுக்கு. பார்த்த முதல் தருணத்திலிருந்தே அன்பைப் பகிர்ந்து கொள்ளும் பாசக்காரர்களாகவே இங்கும் மனிதர்கள் இருந்தனர். மதுரையே கொஞ்சம் பெரிய கிராமமாகத்தான் செல்வராஜுக்குத் தோணும். கிழக்கு பார்த்த வாசல் வெச்ச விசாலமான வீடு, ரெண்டு பேருக்கு அது ரொம்பவே அதிகம் என்றாலும் தன் மனைவி நினைத்த மாதிரி வீட்டை அலங்கரித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக வேண்டிய எல்லாவற்றையும் வாங்கிப் போட்டிருந்தான். ஒவ்வொரு அறைக்கும் தனித்தனி நிறத்தில் பெயிண்ட் கூட அடித்திருந்தார்கள். அவளுக்குப் பிடிக்குமேயென பெரிய மீன் தொட்டியும் வண்ண மீன்களும் வாங்கிக் குடுத்திருந்தான். ஒவ்வொரு குட்டி மீனுக்கும் தனித்தனியாய் பெயர் வைத்து அடையாளம் மாறாமல் அவள் கூப்பிடுவதைப் பார்க்க ஆச்சர்யமாய் இருக்கும். “எல்லா மீனும் ஒரே மாதிரிதான் இருக்கு ஒனக்கு மட்டும் எப்பிடிடி அடையாளம் தெரியுது?” வியப்போடு கேட்பான். “இங்க வா.” என கையைப் புடித்து இழுத்துக் கொண்டு போய் மீன் தொட்டியின் பக்கமாக உட்காருவாள். “ஓய் லொஜக் இங்க வா...” என மென்மையாய் கண்ணாடியாய்த் தட்டினாள் ஒரு மீன் ஆசையாக ஓடிவரும். அவளின் கைகளில் முத்தமிட்டுச் செல்லும். திரும்பி அவனைப் பார்த்து சிரிப்பாள். “பகல் முழுக்க இதுங்க கூடத்தான பேசிட்டு இருக்கேன். அதனால நான் என்ன சொன்னாலும் இதுங்களுக்கு புரியும்.” அவளுக்கு மரம் செடி கொடியுடன் கூட பேசும் வல்லமை இருக்குமோ என நினைத்துக் கொள்வான்.

புருஷன் பொண்டாட்டி இரண்டு பேராக இருப்பதால் சுற்றி இருக்கும் எல்லோருமே அவர்களோடு தாயாய் பிள்ளையாய் பழகினார்கள். இத்தனை இருந்தும் செல்வராஜுக்கு இருந்த ஒரே குறை, குழந்தையில்லை என்பதுதான். காலை குளித்துவிட்டு வாசலில் தலை உலர்த்தும் ஜோதியைப் பார்க்கையில் தெய்வாம்சம் நிறைந்து வழியும். ‘இந்த மகாலட்சுமிக்கா புள்ள இல்ல’ என பக்கத்து வீட்டுப் பெண்கள் மருகுவார்கள். ஆனால் ஒருவரும் முகத்திற்கு நேராக அதைக் கேட்பதில்லை. சின்னஞ் சிறுசுக தான கொஞ்ச நா போனா சரியாப் போகுமென தங்களுக்குத்தானே சமாதானம் செய்து கொண்டார்கள்.

https://telegram.me/aedahamlibrary

புதிதாக எதிர்கொள்பவர்கள் சமயங்களில் 'இத்தன வருஷமாகியும் இன்னுமா குழந்த இல்ல?' என்றுக் கேட்கும் போதுதான் அவனுக்கு சுருக்கென்று இருக்கும். தன் ஆண்மையின் மீதும், ஜோதியின் தாய்மை மீது முகம் தெரியாதவர்கள் எல்லாம் கல் எறிவதை அவனால் சகித்துக் கொள்ள முடியாது.

தன்னளவில் எந்தக் குறைகளும் இல்லை என செல்வராஜ் உறுதியாய் நம்பினான். மற்ற விஷயங்களில் கூட இதுவரை இரண்டு பேருக்குள்ளும் இணக்கமாகவே இருந்திருக்கிறது. நெருங்கிய நண்பர்கள் சொன்ன எல்லா மருத்துவர்களையும் ஒருமுறையேனும் சென்று சந்தித்தார்கள். முதல் இரண்டு முறை அவனுக்காக வந்த ஜோதி அடுத்தடுத்து அவன் கூப்பிட்டபோது எரிச்சல் பட்டாள். "எதுக்கு இப்டி வாரத்துக்கு ஒரு டாக்டர்னு இழுத்துட்டுப் போற, ஒன்னு ஒரே டாக்டர் கிட்ட கூட்டிட்டுப் போ. இல்லியா விட்று. இப்போ கொழந்த இல்லன்னா என்ன? நாம சந்தோசமாத்தான இருக்கோம்." இத்தனை சீக்கிரம் மறுத்துவிட்டாளே என செல்வத்துக்கு முகம் வாடிப்போனது. அவனை அப்படி பார்க்க சகிக்காமல் "சரி சொன்னா கேக்கவா போற, உன் இஷ்டம் போலச் செய்யி." என மருத்துவமனைக்கு செல்ல ஒத்துக் கொண்டாள். மறுபடியும் முதலில் இருந்து பரிசோதனைகள், எந்தெந்த நாட்களில் உறவு கொள்ள வேண்டும், எவ்வாறு உடலைப் பராமாறிக்க வேண்டும் என்பதோடு கூடுதலாக யோகா குறித்த இலவச விளம்பரங்கள்.

மருத்துவம் சரியான தீர்வை தரவில்லை என்றானபோது அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் பிரார்த்தனையை நோக்கி அவர்களின் கவனத்தை திருப்பச் சொன்னார்கள். எதிர் வீட்டு சுந்தரி அக்காவிற்கு சாமி இறங்கும். வெள்ளிக்கிழமைகளில் அதனிடம் குறி கேட்க வெளியூர்களில் இருந்தெல்லாம் ஆட்கள் வருவார்கள். அந்தக்காதான் முதலில் சொன்னது, "செல்வம் உனக்கு நம்பிக்க இருக்கான்னு தெரியல, ஆனா நம்மள மீறி சில சக்தி இருக்கு. மனுஷன் கைவிட்டாலும் சாமி கைவிடாது. உனக்கு சாப்டூர் தான சொந்த ஊரு. மஹாலிங்கத்தோட காலடியில இருக்க. நீ கேட்டு உனக்கு வரம் தராம போயிருமா? ஒவ்வொரு பௌர்ணமிக்கும் அந்தப் புள்ளையை கூட்டிட்டு மஹாலிங்கம் கோயிலுக்குப் போயிட்டு வா, எல்லாம் சரியாப் போகும்." அந்த வார்த்தைகளை கேட்டபோதே அவனுக்குள் ஒரு நிறைவு. நேர்த்திக் கடனாகத்தான் கடந்த ஒரு வருசமாக பௌர்ணமி நாட்களில் செல்வராஜ் தன் மனைவியோடு மலையேறிக் கொண்டிருக்கிறான். மஹாலிங்கத்திடம் வேண்டிய வரம் விரைந்து கிடைக்கும் என

https://telegram.me/aedahamlibrary

ஊர்க்காரர்கள் சொல்வதுண்டு. பிழைக்கச் சென்று குடில் தேடும் எல்லா ஊர்களும் குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னால் சொந்த ஊராகிப் போனாலும் கும்பிடும் சாமியென்னவோ பிறந்த ஊரை விட்டு நகர்ந்து வருவதாக இல்லை. வேண்டுதல் ஒரு காரணமாய்ப் போனது, ஆறுதல் தேடி சொந்தங்களை வந்து பார்த்துவிட்டுப் போக.

3. பிடி

திரும்பிய பக்கமெல்லாம் வைத்தியர்களின் முக ஜாடை நிரம்பிய ஊர் ஜோதிக்கு. முடக்கு வாத வியாதிகளுக்கு மிகச் சிறப்பான நாட்டு வைத்தியம் செய்யும் அந்த ஊரைத் தேடி ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கில் ஆட்கள் வந்தபடியே இருந்தார்கள். சுருளி மலையடிவாரத்தின் அத்தனை மகத்துவங்களையும் உள்வாங்கி செழித்திருந்தது பூசலாம்பட்டி. ஜோதியின் அப்பாவும் வைத்தியர் தான். மனிதனின் எலும்புகளையும் நரம்புகளையும் வாழ்க்கை முழுக்க அணுகி மனிதர்கள் எலும்பும் நரம்புமாகவே அவருக்குத் தெரிவார்கள். கை உடைந்து, கால் உடைந்து சிகிச்சைக்கு வருகிறவர்களின் விலகிய எலும்பைத் தேடி கூட்டி வைத்துக் கட்டுகையில் அவர்களின் அலறல் வீதி முழுக்க எதிரொலிக்கும். மனிதர்கள் வலியில் அலறுவதை சிறு வயதிலிருந்தே பார்த்துப் பழகியவளுக்கு அலறல்கள் ஒரு வயதுக்குப் பின் மரத்துப் போயிருந்தன. பாசிப்பயறு மாவையும், முட்டையின் மஞ்சள் கருவையும் கலந்து கட்டுப்போட அவர்கள் தயாரிக்கும் கலவையின் மணத்திற்கு ஓரிரு நாட்கள் பழகினாலே நாசித் துவராங்களில் மட்டுமல்லாமல் நவ துவாரங்களும் நாற்றத்தைப் பொருட்படுத்தாது. ஆனாலும் ஜோதி விதிவிலக்கு. அவள் காட்டு மலர்களை நிறத்தைக் கொண்டும் மணத்தைக் கொண்டும் வெகு எளிதாக பிரித்துப் பார்க்கப் பழகியிருந்தாள்.

மூன்று பெண் பிள்ளைகளுக்குப் பின் பிறந்த கடைசிக் குழந்தை என்பதால் இவளின் மீது எல்லோருக்கும் அதீத அன்பு. ஆனாலும் ஜோதியின் அய்யாவிற்கு ஒரு வருத்தமிருந்தது. பதினான்கு வயதாகியும் ஜோதி பூக்காமலிருந்தாள். மற்ற பெண் பிள்ளைகளை விடவும் கூடுதல் உயரம். வீட்டிலிருந்து தெருமுனைக்கு நாலு எட்டுகளில் ஓடிவிடும் அவளுக்கு அவளின் பாவாடைகள் எப்போதும் கெண்டைக்கால் வரைதான் போதுமானதாய் இருக்கும். “ஏய் கழுத இத்தன வயசாகிடுச்சு இன்னும் குதிச்சிக்கிட்டு இருக்க. ஒரு இடத்துல அடங்கி இருக்க மாட்டியா?’ என அப்பத்தா மட்டுந்தான் இவள் மீது எரிந்து விழும். அதற்கு கவலையெல்லாம் இன்னும் அவள் பூக்கவில்லை என்பதில்.

https://telegram.me/aedahamlibrary

காளியம்மன் திருவிழாவிற்காக மூணாறிலிருந்து யானையும் செண்டை மேளமும் கொண்டு வந்திருந்தார்கள். திருவிழா நாளில் செண்டை மேளம் ஊரையே பிளந்து கொண்டிருக்க அலங்கரிக்கப்பட்ட யானை ஊர் நடுவே பிரம்மாண்டமாய் வலம் வந்து கொண்டிருந்தது. சாமி யானை என்பதால் எல்லோரும் தொட்டுக் கும்பிட்டார்கள். ஜோதிக்கு யானைகள் எப்போதும் ஆச்சர்யம். அடுத்தொரு பிறப்பென்றால் யானையாகவே பிறக்க வேண்டுமென நினைப்பாள். தன்னைத் தவிர உலகில் எதையும் பொருட்படுத்தாத அந்த பிரம்மாண்ட உருவம் பாகனின் சத்தியத்திற்கு கட்டுப்பட்டு சாந்தமாக நடப்பதைப் பார்க்க ஆச்சர்யமும் வியப்புமாய் இருக்கும். அதனாலேயே யானை வரும் நாட்கள் அவளுக்கு முக்கியமானவை. அந்த வருடம் வந்திருந்த யானை இதற்கு முன்பு வந்திருந்த யானைகளை விட பிரம்மாண்டமாய் இருந்தது. அதன் நீண்ட தந்தங்களை கண்ணுறும் எவர் ஒருவரும் மயங்கிப் போய்விடக் கூடும். யானையின் பிரத்யேக அழகு அதன் தந்தங்கள். ஊதா நிற பட்டுப் பாவடையும் தாவனியும் அணிந்திருந்த அவளுக்கு அய்யா தேடி பிடித்து காளியம்மன் சாமிக்கு அணிவித்திருந்த அதே மூக்கு வளையத்தை வாங்கித் தந்திருந்தார். கூட்டத்தை விலக்கி யானை வரும் திசையில் எதிர் நின்றவள் அசைந்து வரும் அதன் ஒவ்வொரு நடையிலும் உலகை மறந்து போயிருந்தாள். கூட்டத்தில் எவரையுமே கவனிக்காமல் வந்த யானை சரியாக இவளுக்கு அருகில் வந்தபோது இவளின் கண்களை ஊடுருவிப் பார்த்தது. அசாதாரணமான பார்வை. சில நொடிகள் தொடர்ந்த அந்தப் பார்வையில் இவளுமே கண்ணை அசைக்கவில்லை. அருகில் நின்று கொண்டிருந்த பெரிய அக்கா 'ஏய் ஜோதி யான கண்ண அப்பிடி பாக்கக் கூடாதுடி, புத்தி பேதலிச்சுப் போகும்' என சொன்னதுகூட இவளின் காதுகளில் விழுந்திருக்கவில்லை. அப்படியே மயங்கிப் போய் நின்றவளின் தலைமீது யானை தன் துதிக்கையை வைத்து ஆசிர்வதித்தது. கரிய நிறக் குன்று சலனமில்லாமல் தன்னைக் கடந்து செல்வதைப் போல் உணர்ந்தாள். உடல் சிலிர்த்து கண்கள் நிலைக்குத்திப் போயிருக்க அப்படியே மயங்கிப் போனாள்.

கண் விழித்துப் பார்த்தபோது வீட்டின் முற்றத்தில் கிடந்த கயிற்றுக் கட்டிலில் தான் படுத்திருக்கிறோம் என்று தெரிந்தது. சுற்றிலும் அக்காக்ககளும் அய்யாவும் அமர்ந்திருந்தார்கள். அப்பத்தா அவள் தலையில் ஓங்கி குட்டியது. 'முட்டாச் சிறுக்கி யானய உத்துப் பாக்கக் கூடாதுன்னு எத்தனவாட்டி சொல்லி இருக்கேன்.' என கோவமாகத் திட்டினாள். "பிள்ள பயந்து போயி படுத்திருக்கு நீ பேசாம இருத்தா' என அய்யா தான் அப்பத்தாவை அரற்றி அனுப்பி வைத்தார். உடலெங்கும்

https://telegram.me/aedahamlibrary

கொதிக்க, உள்ளுக்குள் குளிர் நடுக்கமெடுத்தது. எதையோ பேச நினைத்தாள் முடியவில்லை. "நீ பேசாம படுத்து தூங்குத்தா.' என ஆறுதலாய் அவள் தலையைத் தடவிக் கொடுத்தார். கண்கள் விரிந்த நிலையிலேயே ஜோதி உறங்கிப் போனாள். நான்கு நாட்கள் காய்ச்சல் குணமான அதிகாலை வேளையில் ஜோதி ருதுவெய்தியிருந்தாள்.

குறும்புத்தனங்களும் உற்சாகமும் குறைந்து சடாரென பெரிய மனுஷியைப் போன்ற தோற்றம் அவளிடம். அக்காக்கள் எல்லோருக்கும் அவளைப் பார்க்க ஒரே நேரத்தில் பொறாமையாகவும் பெருமையாகவும் இருக்கும். ருதுவெய்திய சில நாட்கள் அத்தனை தேஜஸோடு இருந்தாள். செல்வராஜ் அப்போதுதான் இவளை முதல் முறையாய்ப் பார்த்திருந்தான். தன்னை அவன் பார்த்த முதல் தருணத்திலேயே அவளுக்குத் தெரிந்திருந்தது இவன் தன்னைத் தேடி ஒருநாள் வரக்கூடுமென. அய்யா வாங்கிக் குடுத்த மூக்கு வளையம் இப்பொழுதுதான் ஜோதிக்கு அத்தனை பொருத்தமாய் இருந்தது. வைத்தியத்திற்கு வரும் ஆட்களுக்கெல்லாம் இவள் முகத்தை ஒருமுறை பார்த்தாலே நோய் குணமாகிப் போகுமெனத் தோன்றும். வயது வித்தியாசமில்லாமல் எல்லோரையும் வசீகரிக்கும் அபூர்வ கண்கள். வேறு யாரையும் விட தான் விசேசமானவள், வலிமையானவள் என்பதை திடமாய் நம்பினாள். பருவத்திலிருக்கும் ஒரு பெண் யானைக்கு இந்தக் காட்டின் இளவரசி நானே என்கிற மிதப்பு எத்தனை இருக்குமோ அத்தனை மிதப்பு ஜோதிக்கு. அய்யாவுக்கு அவளை வீட்டை விட்டு அனுப்பவே தயக்கம், ஊரில் எல்லோரின் கண்களும் தன் பிள்ளையின் மீதுதான் என்பதை சடவாகச் சொல்லுவார். அப்பத்தா அவளுக்குச் சுத்திப் போடாத நாளில்லை. அக்காக்கள் திருமணம் முடிந்து போன வேகத்திலேயே இவளைப் பெண் கேட்டும் நிறைய பேர் வந்தார்கள். அய்யாவுக்கு செல்வராஜின் அம்மா தங்கச்சி முறை என்பதால் மகள் நெருங்கின சொந்தத்திற்குள்ளேயே இருக்கட்டுமென இவனுக்கு கட்டிக் குடுக்க சம்மதித்தார்.

பெரும் வனத்தை வேட்டையாடும் வேடுவன் போல் ஒவ்வொரு நாளும் செல்வராஜ் அவளோடு கூடுவான். வெளியில் பார்க்கும் எவருக்கும் அவனுடலில் காமத்தின் வீர்யமிக்க சுகந்தங்கள் இருப்பது தெரியாது. அவளே முதல் சில நாட்கள் வியந்து தான் போனாள். "ஏன் மாமா இப்பிடி காணாதத கண்ட மாதிரி பாயுற, நான் எங்கியும் ஓடிப் போக மாட்டேன். கொஞ்சம் நிதானமா இரேன்" அவனை ஆற்றுப்படுத்த முயன்று ஒவ்வொரு முறையும் தோற்றுப் போவாள். முதல் மாதத்தின் முடிவிலேயே உறவினர்கள் தெரிந்தவர்கள் எல்லாம்

https://telegram.me/aedahamlibrary

‘எதும் விசேஷமா?’ எனக் கேட்கத் துவங்கிவிட்டார்கள். ‘இல்லங்க சும்மாதான் இருக்கேன்.’ என சொல்வதற்கு ஜோதி சங்கடப்படுவதைப் பார்த்துவிட்டு செல்வராஜ் தான் எல்லோருக்கும் பொதுவாக “நாந்தான் கொஞ்ச நாள் போகட்டும்னு சொல்லி இருக்கேன். சின்னப் பிள்ளதான என்ன அவசரம்?” என சமாளித்தான். சில மாதங்கள் வருடம் கடந்து அடுத்தடுத்து இரண்டு மூன்று வருடங்களையும் கடந்த போது அவளின் மீது உறவினர்கள் எல்லோருக்கும் ஒருவித எரிச்சல் வந்தது. ‘பிள்ள வாட்ட சாட்டமா மூக்கு முளியுமா இருந்தா போதுமா? வாரிசுன்னு ஒன்னப் பெத்துக் குடுத்தா தான முழு பொம்பள.” என செல்வராஜின் அம்மா ஒருமுறை எல்லோரின் காதுபடவே சொன்ன நாளில் இருந்துதான் செல்வராஜ் அவளை ஊருக்கு கூட்டிச் செல்வதைக் குறைத்துக் கொண்டான்.

ஜோதி சொற்களல் புண்பட்டிருந்தாள் ஆனால் அதை யாரிடமும் காட்டிக் கொள்ளவில்லை. யானையின் பொறுமை பாகனின் கண்களில் இருக்கிறது. செல்வராஜின் கண்களில் தன் மீதிருந்த அளப்பெரிய காதலை உணர்ந்ததால் ஜோதிக்கு மதம் பிடிக்கவில்லை. யானைகளின் மீது அவளுக்கிருக்கும் அலாதியான ப்ரியம் தெரிந்திருந்ததால் ஒருநாள் யானை முடியில் செய்த மோதிரம் ஒன்றை வாங்கி வந்து தந்தான். தன் இடது கை மோதிர விரலில் அணிந்து கொண்டபோது ஜோதியின் விரல்களுக்கு அந்த மோதிரம் அவ்வளவு பொருத்தமாய் இருந்தது. கருத்த உறுதியான யானையின் அந்த சின்னஞ்சிறிய மயிர் அவள் உடலை உரசிக் கொண்டிருந்த ஒவ்வொரு நொடியிலும் அவள் சந்தோசத்தின் உச்சத்தில் லயித்துப் போயிருந்தாள். அதனாலேயே செல்வராஜ் மருத்துவர்களைப் பார்க்கலாமென அவளிடம் கேட்டபோது சந்தோசமாக சம்மதித்தாள். ”உனக்கு இஷ்டம்னா மட்டும் போலாம் ஜோதி. இல்லன்னா வேணாம்” என பக்குவமாய் அவன் சொன்னபோது தன்னைக் கையாளத் தெரிந்த பாகனாகவே செல்வராஜைப் பார்த்தாள். ஆனால் கட்டி வைக்கப்பட்ட யானைகள் மட்டுந்தானே பாகன்களுக்கு கட்டுப்படுகின்றன. ஜோதி கட்டி வைக்கப்பட்டதாய் காட்டிக் கொள்ளும் பெண் யானை. தன் இணையைக் கண்டு கொள்ளும் எந்த நொடியிலும் இவனைத் தூக்கி வீசியெறியத் தயங்காத மிருக குணமொன்று அவளிடம் இருப்பதை அவனால் ஒருபோதும் கண்டுகொள்ள முடிந்ததில்லை.

மருத்துவமனையின் மருந்து வீச்சமும், பரிசோதனைகளும் அவளை எரிச்சலூட்டின. காட்டின் மூலிகைகளுக்கும் அப்பாவின் முரட்டு வைத்திய முறைகளுக்கும் பழக்கப்பட்டுப்போன அவளுக்கு

https://telegram.me/aedahamlibrary

ஆங்கில மருந்தில் போதுமான நம்பிக்கை வந்திருக்கவில்லை. அய்யாவேதான் சமாதானப்படுத்தினார். "மாப்ள சொல்றதக் கேளும்மா. உன் நல்லதுக்குத்தான சொல்றாப்ள" என அவர் மருகுவதைப் பார்க்க சங்கடமாய் இருந்ததால் மனசில்லாமல் ஒவ்வொரு முறையும் அவனோடு மருத்துவமனைக்குச் செல்வாள். குழந்தை பிறக்கும் வரையிலும் தன் முயற்சியிலிருந்து பின் வாங்குகுவதாய்த் தெரியவில்லை, அவன் போக்கிலேயே விட்டுவிடுவோமென இவள் நினைத்துக் கொண்டிருந்த போதுதான் ஒருமுறை பெண் மருத்துவர் இவளிடம் தனியாகப் பேசும் போது "அவருக்கு உயிர் அணுக்கள் விந்துல குறைவா இருக்கும்மா. இவ்ளோ வருஷம் ட்ரீட்மெண்ட் எடுத்துக்கிட்டதுலயே அதிகமாகி இருக்கனும். ஆனா இதுவர ஆகலைன்னா ஆச்சர்யமா இருக்கு. ம்ம்ம். உங்கள முயற்சி பண்ணிப் பாக்க வேணாம்னு சொல்லல. ஆனா இன்னொரு வாய்ப்பு இருக்கு. அதுக்கு முயற்சி பண்ணி பாக்கலாம்?" என மெதுவாக விஷயத்தைத் துவக்கினாள். "எனக்கு பெருசா விஷயம் தெரியாது டாக்டர். எதுவா இருந்தாலும் புரியற மாதிரி சொல்லுங்க." என சிரித்தபடியே ஜோதி சொன்னாள். "உன்னோட கருமுட்டைகள் ரொம்ப ஆரோக்கியமா இருக்கு. நீங்க ஏன் வேற ஒருத்தர் கிட்ட விந்துதானம் வாங்கி குழந்த பெத்துக்கக் கூடாது?" ஒவ்வொரு வார்த்தையையும் அந்த டாக்டர் தயங்கித் தயங்கித்தான் சொன்னாள். ஜோதிக்கு என்னவோ போலாகிவிட்டது. "ச்ச ச்ச என்னங்க இப்பிடிலாம் பேசறீங்க. அந்த மனுஷனுக்குத் தெரிஞ்சா ரொம்ப சங்கடப்படுவாரு. வேணாம் டாக்டர்." அவசரமாய் மறுத்தாள். "இன்னிக்கு இதெல்லாம் ரொம்ப சகஜம்மா. நிறைய பேர் இப்பிடி பெத்துக்கறாங்க. இதுல தப்பு ஒன்னுமில்லையே." இவளை எப்படியும் சம்மதிக்க வைத்துவிடுவதென அந்த டாக்டர் உறுதியாய் இருக்க, பதிலுக்கு மறுப்பதில் இவளும் உறுதியாய் இருந்தாள். சோர்ந்து போன டாக்டர் "சரிம்மா நீ யோசிச்சு சொல்லு. தேவப்பட்டா உன் புருஷன் கிட்டயும் பேசிப்பாரு." என முடித்துக் கொண்டார்.

வீடு வந்ததிலிருந்து ஜோதிக்கு அது குறித்த சிந்தனையே ஓடிக் கொண்டிருந்தாலும் செல்வராஜிடம் கேட்டால் கண்டிப்பாக வருத்தப்படுவான் என நினைத்தாள். குழந்தையின் காரணமாய் தன்னை யாரும் காயப்படுத்திடக் கூடாதென அவன் உறுதியாய் இருந்ததைப் போலவே அவனும் காயப்பட்டுவிடக் கூடாதென ஜோதி உறுதியாய் இருந்தாள். தன் பெண்ணுடலை ஆக்ரமிக்கும் ஒவ்வொரு முறையும் நான் அசாத்தியமானதொரு ஆண்மகன் என்ற உணர்வுகளையே அவன் முகத்தில் இத்தனை வருடங்களாக பார்த்திருந்ததால் ஓரளவு அவனை

https://telegram.me/aedahamlibrary

நன்றாகவே புரிந்து வைத்திருந்தாள். ஆனாலும் குழந்தை பெற்றுக் கொள்வதுதான் எத்தனை சந்தோசம்? தன்னைப் போலவே பெரிய பெரிய கைகளும் கால்களும் உருண்டை முழிக் கண்களும் தடித்த உதடுகளுமாய் இரண்டு குழந்தைகள். வலிமையான குட்டியானைகளைப் போல் அவர்கள் வளர்வதைப் பார்க்க எத்தனை மகிழ்ச்சியாய் இருக்கும்? நினைத்த போதே அவளுக்கு மார் வீங்கி முட்டியது. இந்த விருப்பத்தை தனக்குள்ளேயே வைத்துதான் சந்தோசப்பட்டுக் கொள்ள முடியுமா? இரவுகளில் உறங்கமுடியாமல் தவித்தாள். ஒவ்வொரு முறையும் புதிய மருத்துவமனைக்குச் செல்லும் போதெல்லாம் இன்னும் கொஞ்ச நாள் முயற்சி பண்ணிப் பாப்பமே ஜோதி என்றுதான் சொல்லுவானே தவிர தன்னிடம் குறையிருக்கிறது என்பதை அவன் இத்தனை நாட்கள் வெளிப்படுத்தி இருக்கவில்லை, ஆக இந்த விஷயத்திற்கு உடன்பட மாட்டான் என்பது அவளுக்கு தெளிவாக விளங்கியது. இரவுகளில் தன்னை இறுக அணைத்து உறங்கும் செல்வராஜே அந்த நீலநிற இரவு விளக்கின் வெளிச்சத்தில் ஒரு குழந்தையாகத்தான் தெரிவான்.

மருத்துவமனை முயற்சிகள் முடிந்து ஆன்மீக வழிகளின் பக்கமாய் அவன் திரும்பியபோது ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் சதுரகிரி மலையேறப் போகிறோம் என்கிற எண்ணமே அவளுக்கு உற்சாகம் தந்தது. குடும்பம் குழந்தை என்பதற்கு அப்பாலும் ஒரு பெண் சந்தோசம் கொள்ள எத்தனை விஷயங்களிருக்கின்றன. காட்டுவழிப் பயணம் அவளுக்குப் புதிதல்ல. கன்னகி கோவிலுக்கு பல வருடங்கள் நடந்து பழகியவள். இரவில் காடு பல்லாயிரம் கண் கொண்டு விழித்திருக்கையில் ஒரு மனிதன் எந்த ரகசியங்களும் இல்லாமல் பயணிக்க முடியும். காட்டின் முன்னால் பொய்யாய் எந்த ஒன்றையும் செய்ய முடியாது. அதனாலேயே கடவுளின் மீது அவள் கூடுதல் நம்பிக்கை வைத்தாள். அவனை விடவும் பௌர்ணமி நாட்களில் ஊருக்கு வந்து செல்வதில் அவளுக்கு அலாதியான விருப்பம். இந்த மலைக்காகவும் காட்டிற்காகவுமே இந்த ஊரின் மீது சொல்லொண்ணா பிரேமை வளர்ந்தது ஒவ்வொரு நாளும். கருப்புதான் ஒவ்வொரு முறையும் அவர்களுக்கு வழிகாட்டியாய் உடன் வருவான். காடு துவங்கும் வரை உடன் வருகிறவர்கள் குறித்து இருக்கும் சிந்தனையெல்லாம் காடு துவங்கிய நொடியிலேயே அவளுக்கு மறைந்து போய்விடும். ஊரின் வீதிகளில் திருவிழாக்களில் பார்த்துப் பழகிய யானையை ஒரு அதிகாலையில் முதல் முறையாக காட்டில் வைத்துப் பார்த்தபோது அவளின் காதுகள் விடைத்துக் கொண்டன. ஆம் ஒற்றை யானை. காட்டில் யார் ஒருவராலும் வீழ்த்திவிட முடியாத

https://telegram.me/aedahamlibrary

பிரம்மாண்டமான யானை. தனக்கருகில் மனிதர்கள் இருக்கிறார்கள் என்பதை பொருட்படுத்தாத அந்த அபூர்வ மிருகத்தை மெய் மறந்து பார்த்தாள். யானைக்கும் அவளுக்குமான பழைய கதைகள் எல்லாவற்றையும் அறிந்திருந்த செல்வராஜ் உடன் வந்த ஆட்களோடு சேர்ந்து வம்பாக இழுத்துக் கொண்டு வந்தான்.

ஊர் வந்தபிறகு எப்போதும் போல் இயல்பாகிவிட்ட ஜோதி ”எனக்கென்னவோ மஹாலிங்கத்தோட அருளால நம்மளுக்கு சீக்கிரமே புள்ள பொறந்திரும்னு தோணுது மாமா” என நம்பிக்கையாகச் சொன்னாள். இந்த வார்த்தைகளுக்காகவே செல்வராஜ் இன்னும் இரண்டு முறை மலையேறி வரவும் தயாராய் இருந்தான். அதன் பிறகு பௌர்ணமி நாட்களை அவர்கள் தவறவிடுவதில்லை. காட்டில் உலவும் தருணங்களில் தன் சுயம் கண்டுகொண்ட பூரிப்பில் இருந்தவளுக்கு, இன்னொரு முறை அந்த மருத்துவர் தன்னை சந்திக்க வரும்படி அழைத்தபோது என்னவோ போலிருந்தது. ஜோதி மறுத்தும், மருத்துவர் இரண்டொரு முறை திரும்ப திரும்ப அழைத்ததால் கடைசியாக ஒருமுறை சந்தித்து வரலாமெனச் சென்றாள். “டாக்டர் நான் நல்லா யோசிச்சு பாத்துட்டேன். நீங்க சொன்னது சரியா வராது. என்னய விட்றுங்க.” என உறுதியாய் மறுத்தாள். அந்த டாக்டர் சிரித்தபடி “நீ அதுக்கு ஒத்துக்க மாட்டன்னு எனக்குத் தெரியும்மா.. ஆனா உன்னால வேற ஒன்னு செய்ய முடியும். அதுக்குத்தான் வரச் சொன்னேன்.” சொன்னாள். ஜோதிக்கு இந்த புதிய கோரிக்கை என்னவாய் இருக்குமென்கிற தயக்கம். “நீ பயப்படற மாதிரி ஒன்னும் இல்லம்மா. எப்பிடி ஆண்களுக்கு உயிரணுக்கள் குறைவா இருக்கோ அதே மாதிரி சில பெண்களுக்கு கருமுட்டைகள் ரொம்ப குறைவா இருக்கும். ரெண்டு பேருக்கும் ஆரோக்கியமா இருந்தாதான் ஒரு குழந்தை உருவாகும். அப்பிடி கருமுட்டை குறைவா இருக்க பெண்களுக்கு உன்ன மாதிரி ஆரோக்கியமா இருக்க பெண்கள் கருமுட்டைய தானம் பண்ணலாம். உனக்கு இது சம்மதம்னா மட்டுந்தான் இதுவும்.” தனது இந்த கோரிக்கையை நிச்சயம் அவள் மறுக்கமாட்டாளென டாக்டர் நம்பினார். ஜோதி அமைதியாக யோசித்தாள். தன்னால் ஆரோக்கியமானதொரு குழந்தை உருவாக முடியுமென்றால் அது யாருக்கு கிடைத்தால் தான் என்ன? குறைந்த பட்சம் எங்கோ தனது உயிரின் ஒரு பகுதி புத்தம் புதிய ஜீவனாய் வளருமென நினைத்த போதே முரட்டுக் கைகளும் கால்களும் உருண்டைக் கண்களும் கொண்ட அந்த வினோதக் குழந்தையின் முகம் நினைவிற்கு வந்தது. சிரித்தபடியே ஜோதி சம்மதித்தாள்.

முதல் முறையாக கருமுட்டை தானம் செய்துவிட்டு வீடு

https://telegram.me/aedahamlibrary

திரும்பிய தினத்தில் ஜோதிக்கு இனம் புரியாத சந்தோசம், அவர்கள் தந்த தொகையைக் கூட வாங்கிக் கொள்ள மறுத்துவிட்டாள். தன் கனவு எங்கோ யாருக்கோ நிஜமானதாய் இருக்கப் போகிறது. சந்தோசத்தைப் பகிர்ந்து கொள்வது என்பதன் புதிய அர்த்தமாய் தனது செயல் தோன்றியது. ஆனால் அவள் செல்வராஜிடம் இதைச் சொல்லியிருக்கவில்லை. தனக்கேயான இந்த ரகசிய உலகிற்கு வெளியிலேயே அவனை வைத்திருக்க விரும்பினாள். அவனுக்கு உரிமையே இல்லாத ஒன்றில் உரிமை கொண்டாடும் எண்ணம் ஒருநாளும் அவனுக்கு வந்துவிடக் கூடாதென்கிற எச்சரிக்கையும் அதை மறைக்க ஒரு காரணம். மூன்று மாதங்களுக்குப் பிறகு இவளே மருத்துவரை அழைத்து திரும்பவும் எப்போது வந்து தானம் செய்யட்டுமெனக் கேட்டாள். “நீ நெனைக்கிற மாதிரி அடிக்கடி வந்தெல்லாம் டொனெட் பண்ணிட முடியாது ஜோதி. உடம்பு கெட்டுப் போயிடும். தேவைப்படும் போது நானே கூப்பிடுவேன் சரியா?” என டாக்டர் சொன்னதைக் கேட்க இவளுக்கு ஏமாற்றமாய் இருந்தது. ஒவ்வொரு மாதமும் வீணாகத்தானே போகிறது, யாருக்கேனும் பயன்பட்டால் என்னவென்று நினைத்தற்குப் பின்னால் ஒவ்வொரு மாதமும் யாரோ ஒருவரின் மூலமாய் தனது புதிய கரு வளரட்டுமே என்கிற பேராசை. இந்தப் புதிய சந்தோசத்திற்குப் பின்னால் செல்வத்தோடு கூடும்போதெல்லாம் அவன் தன்னை எதிர்கொள்ள முடியாமல் அச்சம் கொள்வதை கவனித்தாள். இத்தனை காலம் அவளை ஆக்ரமித்திருந்தவனுக்கு இப்பொழுதுதான் அவளது பலம் புரிந்தது.

முதல் முறை காட்டில் அந்த யானையைக் கண்டதற்குப் பின்பாகத்தான் தனக்கு இப்படியானதொரு சந்தோசம் கிடைத்திருக்கிறதென ஜோதி நம்பினாள். கருமுட்டைகளை தானம் செய்யத் துவங்கிய பிறகு ஒவ்வொரு முறையும் மலையேறும் போதும் அவள் மனம் காட்டில் அந்த யானையைத் தேடி ஏமாறும் .ஒரேயொரு முறை அதனருகில் நின்று கண்ணோடு கண் பார்த்து நன்றி சொல்ல வேண்டும். அல்லது அதன் துதிக்கையை இறுக அணைத்து முத்தமிட்டால் போதும். ‘யானையின் கண்களை நேர்கொண்டு பார்த்தால் புத்தி பேதலித்துப் போகுமென அக்காவும் அப்பத்தாவும் சொன்னவையெல்லாம் எத்தனை பொய்களென்பதை பின்னொருநாள் அவர்களுக்கு சொல்லியே ஆகவேண்டுமென நினைத்துக் கொள்வாள். அந்த மலையும், மரங்களும் மஹாலிங்கமும் அங்கேயேதான் இருந்தார்கள். அந்த யானை மட்டும் திரும்பவும் அவளின் கண்களில் பட்டிருக்கவில்லை.

https://telegram.me/aedahamlibrary

4. *களிறின் நிழலில் கனிதல்.*

காற்றின் ஒலியென சொல்ல முடியாத பேரோசை வெளியெங்கும் சூழ்ந்திருந்தது. பல்லாயிரம் குதிரைகளின் குளம்பொலியாய் இருக்கலாம். யானைக் கூட்டங்களின் பிளிறலாய் இருக்கலாம். எதுவானாலும் அசாதாரணத்தின் கொந்தளிப்பு அந்த இரைச்சல். மஹாலிங்கத்தை தரிசித்து விட்டு வரும் வழியில் இதென்ன முனியின் அலம்பலா? அச்சத்தில் கருப்புவுக்கு மூத்திரம் முட்டி வயிறு வலி கண்டது. அருகிலிருந்த அடர்ந்த மாமரத்தை ஒட்டி சிறுநீர் கழிக்க ஒதுங்கினான். தரையெங்கும் படர்ந்திருந்த மாமரத்திலிருந்து காட்டமான மா வாசணை. தனித்திருப்பதான அச்சத்தில் கால்கள் நடுங்கின போது இரைச்சலின் சத்தம் அதிகமானது. சிறுநீர் முன்னும் பின்னுமாய் தடுமாறி அவன் கால்களை நனைத்த போது கருப்புவுக்கு மூத்திரம் நின்று போனது. முனியின் மீதிருந்த அச்சம் ஒரு நொடி தன் மதினியின் நினைவுகளாய் மாற, அவள் திரும்பி வருகிறாளாவென எட்டிப் பார்த்தான் . அந்தப் பாதையில் அவளின் நிழல் மட்டுமே இடைவெளியின்றி படர்ந்திருந்தது. செல்வராஜும் மற்ற ஆட்களும் இன்னும் அச்சம் விலகாமல் அதேயிடத்தில் நின்று கொண்டிருந்தார்கள். யானையின் பிளிறலும், நீரை ஆவேசமாக அது வாரி இரைக்கும் சத்தமும் சீரான இடைவெளியில் கேட்கத் துவங்கியபோது எல்லோருக்குள்ளும் ஒரு நடுக்கம்.

“அண்ணே நீயும் நானும் மட்டும் ஓட வரைக்கும் போயி என்னன்னு பாப்பமா? ஒன்னு கெடக்க ஒன்னு ஆயிரப் போகுது?” திரும்பி வந்த கருப்பு செல்வராஜிடம் சொன்னபோது மற்றவர்களும் அவனை ஆமோதித்தனர். “ஏப்பா நாங்க சொல்ற வரைக்கும் யாரும் எங்கியும் நகராதிக.” கருப்பு அவர்களின் பதிலுக்கு காத்திராமல் வேகமாக நடக்க செல்வராஜும் அவனைத் தொடர்ந்தான். விடியலுக்கான வெளிச்சம் மெது மெதுவாய் வானில் நிரம்பிக் கொண்டிருக்க இரண்டு பேரும் ஓடையின் சத்தத்தை கேட்க முடிகிற நெருக்கத்திற்கு வந்துவிட்டிருந்தனர். தூரத்திலிருந்தே ஓடையின் தெற்கு பக்கமாய் அசையாமல் ஒரு முரட்டு யானை குனிந்து நீர் அருந்திக் கொண்டிருப்பதை இருவரும் கவனித்தார்கள். எப்போதும் ஓடைக் கரையிலிருந்தே நீர் அருந்தும் மிருகங்களைப் போல் இல்லாமல் இந்த யானை நீருக்குள் இறங்கியிருந்தது. யானையின் இரண்டு கால்களும் நீரில் பாதி மூழ்கியிருக்க அவ்வப்போது யானை துதிக்கையால் நீரை வாரி இரைத்தது. ஆனால் இந்த ஜோதி எங்கு போனாள் ? இருவரும் இன்னும் சில அடிகள் முன்னால் நடந்தனர். இப்பொழுது வெளிச்சம்

https://telegram.me/aedahamlibrary

யானையின் உடலும் அதன் நீர் படர்ந்த நீண்ட வாலும் தெரியும் அளவிற்கு தெளிவாகி இருக்க யானையின் தந்தம் இருக்குமிடத்திலிருந்து இரண்டு மனிதக் கால்கள் மட்டும் அதன் இரு பக்க காதுகளையும் நீரோடு வருடிக் கொண்டிருப்பதைக் கண்டு உறைந்துபோயினர். அந்தக் கால்களில் அச்சமோ நடுக்கமோ இல்லை. யானையின் கால்களைப் போலவே உறுதி. கருப்புவின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டு செல்வராஜ் இன்னும் சில அடிகள் முன்னேறியபோது யானை உற்சாகமாக தன் உடலை வேறு பக்கங்களில் அசைத்தது. அதிகாலையின் வெளிச்சமும் நீர்மையும் பட்டு பொன்னிறத்தில் மினுங்கும் அதன் தந்தத்தின் மேல் அதே நிறத்தில் சின்னதொரு உடையுமில்லாமல் ஜ்வலித்தது ஜோதியின் உடல். யானையின் முன் நெற்றியில் முகம் சாய்த்து தந்தத்தில் வலுவாக உட்கார்ந்திருந்தவளை தனக்கே தனக்கான உடமையைப் போல் துதிக்கையால் அது இறுக அணைத்திருந்தது. தன்னுடலில் ஒவ்வொரு பாகத்தையும் அந்த யானைக்கென அவள் தாரை வார்த்திருப்பதை துதிக்கையில் படர்ந்திருந்த ஸ்தனங்களும், தந்தங்களில் பெரு விருப்போடு அமர்ந்திருந்த நிதம்பமும் தெளிவாய் உணர்த்தியது. கழுத்திலிருந்து நீண்டு விரிந்திருந்த ஜோதியின் நீள் கூந்தல் நீர்ப்பாம்புகளாய் அலைய விடியலைக் காண துணிவில்லாத அச்சத்தோடு சகோதரர்கள் இருவரும் வந்த வழியிலேயே வேகமாய்த் திரும்பி நடந்தனர்.

- நாலாயிர திவ்வியப் பிரபந்த பாடல் ஒன்றிலிருந்து எடுத்தாளப்பட்டது.

https://telegram.me/aedahamlibrary

ரகசியத்தின் அரூப நிழல்கள்.

ஒரு நிமிடம் பொறுங்கள்.

இந்தக் கதையில் வரும் வினோத் ஒருவேளை உங்களுக்கு அறிமுகமானவனாய் இருக்கலாம். முதல் பக்கத்திலோ அல்லது நான்காவது பக்கத்திலோ அவனை அடையாளம் கண்டு கொள்ள முடிந்தால் பதட்டப்படாமல் பாதியில் நிறுத்தாமல் முழுவதும் வாசிக்க முயற்சி செய்யுங்கள். அவன் உங்களிடம் பகிர்ந்து கொள்ள நினைப்பது தனிமனித உடல் இச்சைகளை அல்ல. காமத்தின் சுவிசேஷத்தை.

https://telegram.me/aedahamlibrary

Story of a male whore…..

Whore? இந்த வார்த்தை எத்தனை அபத்தமானது தெரியுமா? உடல் என்பது பிரார்த்தனைக்கானது, சமயங்களில் ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து பிரார்த்திக்க, இன்னும் சில சமயங்களில் ஒரு ஆணும் சில பெண்களும் அல்லது சில ஆண்களும் சில பெண்களுமென தேவை எதுவோ அதுவாக கொண்டாடுவது. அதிகாரத்தின் வழியாய் தனிமனித விருப்பங்களை ஒடுக்க நினைக்கும் சர்வாதிகார மனம் கொண்டவர்களை வேண்டுமானால் இப்படி சொல்லலாம்,

https://telegram.me/aedahamlibrary

whore. அந்த இணையத் தளத்தில் முகம் மட்டும் மறைக்கப்பட்ட இவன் படத்திற்குக் கீழ் தன்னை இப்படி அறிமுகம் செய்திருந்தான்.

Hi I am foot fetish slave. Looking for a mistress who wants me to be her slave dog. This relation is full of submission and domination with privacy and 100% safety.

My services are

Foot worship

Foot licking

Toe nails eating

Femdom

And etc….. you can make me your slave dog. You can use me In anyway u want.

-Pinky.

இணையத்தின் வழியாய் எல்லாவற்றையும் நுகரப் பழகியிருக்கும் சமூகத்தில் உடல் தேவதைகளின் புதிய ருசிகளை அறிமுகப்படுத்தும் ஏராளமான இணையதளங்களில் வெவ்வேறான அடையாளத்தோடு அவன் தன்னை பதிவு செய்திருந்தான். தனது சேவைக்கென சின்னஞ்சிறிய தொகையை மட்டுமே பெற்றுக்கொள்ளும் அவன் அதை கூட்டுப்பிரார்த்தனை என்றுதான் எப்போதும் சொல்வது வழக்கம்.

இருளின் ரகசிய பாதைகளுக்குப் பழகின அவன் வெளிச்சத்தின்

https://telegram.me/aedahamlibrary

அவசியமின்றி கதவு திறந்து வெளியேறியபோது அப்பார்ட்மெண்ட்டில் அந்த வீட்டைத் தவிர்த்து எல்லோரும் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தனர். நிசப்தம் அப்பெருநகரின் ரகசிய மனிதர்களுக்கான அந்தரங்க பார்வையாளனாய் அடர்ந்திருந்தது. சுனிதா இவனுக்கு முன்பதிவு செய்துவைத்திருந்த வாகனம் நின்ற இடத்தை கவனித்தான். கைவிடப்பட்டவனுக்கான தேவதூதன் போல் அமைதியாய் தெருவிளக்கின் மஞ்சளான வெளிச்சத்திற்குள் நின்றிருந்தது. பாதி உறக்கத்தோடு புன்னகைத்த ஓட்டுனருக்கு இவன் முகத்திலிருந்த அசாத்தியமான மலர்ச்சி ஆச்சர்யமளித்திருக்கக் கூடும். முன்சீட்டில் அமர்ந்து கொண்டதும் கண்கள் அனிச்சையாய் அவள் வீட்டு ஜன்னலுக்கு செல்ல சுனிதா அந்த விடையனுப்புதலுக்காக காத்திருப்பதைப் பார்த்தான். மெலிதாக சிரித்தான். அவள் சிரிப்பதன் தடங்களை தெளிவாகக் காண முடிந்தது. வெளிச்சத்தில் எத்தனை அருகில் பார்த்தாலும் தூரத்தில் சிரிக்கும் ஒரு பெண்ணைப் பார்த்தலென்பது மகோன்னதமான விஷயம், சில இரவுகளை அர்த்தமாக்குபவை இப்படியான புன்னகைதான். இன்னும் சில மணி நேரங்களில் அவளின் கணவன் ஊரிலிருந்து திரும்பக் கூடுமென்பதால் இத்தனை நேரம் வீட்டில் இவன் இருந்ததற்கான தடயங்கள் அவ்வளவையும் அவள் இப்பொழுதே சரிசெய்தாக வேண்டும். வண்டி கிளம்பின சில நொடிகளில் இரவு முழுக்க விழித்திருந்த அசதியில் வினோத் கண்களை மூடித் தூங்கினான்.

நரம்புகள் சுகித்தலுக்குப் பிறகான புத்தெழுச்சியில் தன்னருகில் படுத்திருந்தவளை சீண்டி விளையாடத் தூண்டியது. வியர்த்து கொஞ்சமாய் உப்பேறிப்போன சுனிதாவின் நடு முதுகிலிருந்து கழுத்து வரையிலும் பின் கழுத்திலிருந்து இடைக்குக் கீழ்ப்பகுதி வரையிலுமாய் நாவால் முத்தமிட்டான். நான்காவது புணர்ச்சிக்குத் தன்னை தூண்டுகிறானென்பதைப் புரிந்து கொண்டவள் சுதாரித்து அதிலிருந்து துண்டித்துக் கொண்டாள். “போதும்டா ப்ளீஸ்..” அவள் சொற்களிலிருந்த களைப்பையும் அச்சத்தையும் பொறுக்காமல் ஏமாற்றத்தோடு அவன் ஒதுங்கிப் படுத்தான். இன்னும் சில நிமிடங்களில் இங்கிருந்து கிளம்ப வேண்டுமென்கிற யதார்த்தம் உரைக்க இரவு விளக்கின் வெளிச்சத்தில் தனது உடைகளைத் தேடி எடுத்தான். கழிவறையிலிருந்து வெளியேறியவள் பின்னாலிருந்து அணைத்துக் கொண்டாள். அவனை விடவும் இரண்டு இஞ்ச் அதிக உயரமான அவள் மூச்சுக் காற்றில் இன்னும் விஸ்கியின் நறுமணம் மிச்சமிருந்தது. ஆடையில்லாத இரண்டு உடல்களிலும் கூடுதலுக்கான சூடு பெருகிவழிய அவன் வலது தோள்ப்பட்டையில் பற்தடங்கள்

https://telegram.me/aedahamlibrary

பதியும்படி கடித்தாள். திரும்பி அவள் இடையோடு சேர்த்தணைத்து மூர்க்கமாக முத்தமிட்டான். மொபைலில் வைத்திருந்த அலாரம் அவர்கள் இருவரும் பிரிவதற்கான நேரத்தை நினைவுறுத்தி அலற சிரித்தபடி அவனை விலக்கினாள். உடைகளை அணிந்து கொண்டு கிளம்பியவனிடம் என்றைக்குமில்லாமல் இன்று சில ஆயிரங்களைக் கொடுத்தாள். "நான் எல்லார் கிட்டயும் பணம் வாங்கறதில்ல சுனிதா.. நம்மளுக்குள்ள இதென்ன புதுப் பழக்கம்?" தவிர்க்க விரும்பும் சில உணர்ச்சிகளை அவன் முன்னால் அடையாளங் காட்டிக் கொள்ளாமல் "சொல்லிப் புரிய வைக்க முடியாது வினோத், எனக்கு உன்னோட அன்பு வேணும். உடல் வேணும். ஆனா காதல் என்னய தொந்தரவு செய்து. உன்ன எனக்கானவனா வெச்சுக்கனும்னு கேக்கத் தோணுது. அபத்தமா இருக்குல்ல. நாம எவ்வளவோ பேசி இருக்கோம். எல்லா சந்தோசங்களும் தற்காலிகமானது நம் உடல்களைத் தவிர்த்துன்னு. ஆனா இப்போல்லாம் ஒவ்வொரு முறையும் உன்னோட இருந்துட்டு திரும்பவும் நீ எப்ப வருவன்னு காத்திருக்கிறது அவஸ்தையா இருக்கு. அதான்.." பதில் சொல்ல முடியாமல் வினோத் அவள் உடலெங்கும் தன் கண்களை அலையவிட்டான். அவனது கண்களை எதிர்கொள்ள முடியாமல் எழுந்து போய் விளக்கை அணைத்தாள். சமீபமாய் அவள் கூடுதல் அன்போடு செய்யும் ஒவ்வொன்றும் இருவருக்குமான ப்ரியத்தின் நெருக்கத்தில் தான் என்று நினைத்திருந்தான். ஆனால் அப்படி இல்லை. சிலமுறை இவனது உடலெங்கும் தயிரால் பூசி ஊற வைத்து நிதானமாக அவள் குளிப்பாட்டுகையில் ஒருவித பிரார்த்தனையை உணர்ந்தான். தன்னையும் தனது உடலையும் அவள் என்னவாகக் கொண்டாடுகிறாள் என்பது அச்சமாக இருந்தாலும் அந்தரங்கமாய் அந்த அன்பு அவனை அற்புதமானவனென உணரவைத்தது. எப்போதும் பெண்கள் சூழ வாழும் இந்த சில வருடங்களில் யாரோவொரு பெண் இப்படியானதொரு அற்புதத்தை செய்கிறாள் தான். ஆனால் அற்புதங்கள் எந்தவொரு மனிதனுக்கும் வாழ்க்கை முழுவதுற்குமாக விதிக்கப்பட்டதில்லை தானே.

பெண்கள் இல்லாத ஒரு நாள் எத்தனை துயரமானதென்பதை வாழ்வை பெண்களோடு மட்டுமே கழிக்க விரும்பி அதற்காகவே தன்னை மாற்றிக் கொண்ட மனிதன் மட்டுமே அறிவான். வினோத் தனக்கு இந்த பிரபஞ்சம் எத்தனை குழப்பமானதென்கிற அச்சம் வருகிற போதெல்லாம் தற்காலிகமாகவேனும் எல்லாவித அச்சங்களில் இருந்தும் மீள பெண்களிடம் தான் தஞ்சமடைகிறான். ஒரு பெண்ணோடு இருக்கும் பொழுதில் தான் அதீத பாதுகாப்பில் இருக்கும் உணர்வு ஏற்படும். நிகழ் காலமென்னும் விடுவிக்க முடியாத புதிரை உடலின்

https://telegram.me/aedahamlibrary

துணையோடு கடந்து செல்லும் ஒரு மனிதன் கையில் எதுவுமில்லாமல் போனாலும் எத்தனை சுதந்திரமானவன் என்பதை அவனோடு பயணிக்கும் பெண்கள் மட்டுமே அறிவார்கள். வினோத் நம்பிக்கைகளையும் சொற்களையும் அற்புதங்களாய் நம்புகிறவன். நீதிக் கதைகளிடம் வாழ்வை நம்பி ஒப்பிடைக்கும் கடைசித் தலைமுறையின் குழந்தை. வாழ்வின் நீதி அதை பிசிறில்லாமல் அனுபவித்து வாழ்வது மட்டுந்தான்.

பேசவும் எழுதவும் பழகிய வயதில் திருப்பரங்குன்றம் சைவப் பள்ளியில் ஆன்மீகக் கல்விக்காக சேர்க்கப்பட்டவன் அந்த இடத்தில் பிடிப்பில்லாமலேயே இருந்தான். அறிவின் நிமித்தமாக மனித சமூகத்தின் மீது செலுத்தப்படும் எல்லாவிதமான வன்முறைகளையும் வெவ்வேறு வடிவங்களில் அந்தக் கல்வி அவனுக்கு சொல்லிக் கொடுத்தது. அதிகாலை குளியலுக்குப் பிறகு வகுப்பு, பிறகு சிறிது கோவில் மடத்து வேலை. மீண்டும் வகுப்பு, கொஞ்சம் உணவு பின் கோவில் மடப்பள்ளி வேலை. சந்தோசத்தின் சிறகுகள் ஆகாயம் முழுக்க விரிந்து பறக்கத் தூண்டும் வயதில் தன்னையொத்த சிறுவர்கள் குன்றத்து வீதிகளில் குதூகலமாய் சுற்றி வருகையில் தான் மட்டும் ஏன் இப்படி துன்புறவேண்டுமென்கிற தவிப்பு அவனுக்கு.

கடவுளை அடைவதற்கான பிரார்த்தனைகள் மனிதனின் ஆதி நம்பிக்கைகளுக்கு எதிரானதாக இருந்ததை இந்த முட்டாள்த்தனமான வழிபாடுகள் அவனுக்குப் புரிய வைத்தன. ஒரு பிற்பகல் நடை சாத்திய பிறகு குருகுலத்திலிருந்த சீடன் ஒருவன் தெப்பகுளத்தில் அந்த கசகசப்பான வெயில் வேளையில் தனியாய் துணி துவைத்துக் கொண்டிருந்த பெண்ணின் ஒற்றை மார்பை பிடித்து கசக்கி விட்டு ஓடிவந்துவிட்டான். அவள் யாரிடமும் புகார் அளிக்கவில்லை. திட்டவில்லை. பல நாட்கள் தூரத்திலிருந்து தன்னுடலைக் கவனித்து ஏங்கிய அவனால் அதிகபட்சமாய் செய்ய முடிந்தது இவ்வளவுதானா என அவனுக்காக பரிதாபப்பட்டாள். அடுத்த சில நாட்கள் அவன் வரவில்லை. பின்னொரு நாள் வந்தபோது அவள் முன்னை விடவும் தன் உடலின் பெரும்பகுதி அவனுக்குத் தெரியும்படி துணி துவைத்துக் கொண்டிருந்தாள். தனது எந்தவொரு சைகையும் அவனை அச்சப்படுத்திவிடக் கூடுமென்கிற எச்சரிக்கையில் முடிந்தவரை இயல்பாக இருந்தாள். உடலெங்கும் வியர்த்து பிசுபிசுக்க தன் காவி வேஷ்டியை விலக்கி மண்டபத்தின் தூண் மறைவில் சுயமைதுனம் செய்து கொள்ளத் துவங்கினான். மனதெங்கும் கொதித்த தகிப்பு கைகளை ஆக்ரோஷமாக இயங்கச் செய்தது. சில நிமிடங்களில் தன்

https://telegram.me/aedahamlibrary

தொடைகளின் வழி ஒரு பெண்ணின் கை நழுவி வருவதை உணர்ந்து பதட்டமானான். அவள் கையில் இன்னும் சோப்பின் நுரைகூட விலகியிருக்கவில்லை. அவனது மூர்க்கத்தை அடக்கி நிதானமாக்கி மெதுவாக தன் கைகளால் இயக்கினாள். பிரபஞ்சமே அவன் உடலோடு கலந்து போன பூரிப்பில் கண் மூடி ரசித்தவன் மெதுவாக அவள் உடலைத் தீண்ட கைகளை நீட்ட ஒரேயொரு விரல் படுவதற்கு முன்பாகவே ஸ்கலிதம் கண்டான்.

அன்றைய தினம் அவன் மீது விசாரணை நடத்தப்பட்டதோடு மடத்தை விட்டும் நீக்கப்பட்டான். எது ஒழுக்கமென புரிந்து கொள்ள முடியாத முதியவர்கள் உடலையும் இச்சையையும் பாவமென்றார்கள். இச்சைகளுக்கு இடமில்லாத இந்த வாழ்க்கையில் பிரார்த்தனைகளும் வழிபாடும் எதை நமக்கு கொண்டு வந்து தரப்போகிறது. கடவுளின் பெயரால் உடலைப் பாவமென நிர்ப்பந்தித்த அந்த கல்விமுறை வினோத்திற்கு கூடுதாலன நெருக்கடியாய் இருந்தது. பெருஞ்சிறகுகள் முளைத்து அந்த சின்னஞ்சிறிய கூண்டுக்குள்ளிருந்து பறந்து போக விரும்பியவனை நீண்ட கால நோய் ஆசிர்வதித்தது. மீண்டும் வீடு வந்த போது தான் பொதுசமூகத்தின் நம்பிக்கைகளுக்கு எதிராக வாழ விதிக்கப்பட்டவன் என்பதைப் புரிந்து கொண்டான். வீட்டிலிருந்தவர்கள் அவனிடம் எதிர்பார்த்த எதையும் அவன் செய்யவில்லை. அப்பா வீட்டில் நாள்தோறும் பூசைகளை செய்யச் சொன்னதற்கு "வழிபாடென்பது ஒரு மனிதன் தனக்குத் தானே அந்தரங்கமாக செய்து கொள்வது அப்பா. யாரும் யாருக்காகவும் பிரார்த்திக்க முடியாது. சொல்லப் போனால் மனிதன் தனக்காக பிரார்த்திப்பதே கூட முட்டாள்த்தனமானதுதான்." என விரக்தியாய் சொன்னான். யாருடைய விருப்பங்களுக்காகவும் அவன் வாழப்போவதில்லை என்பதைப் புரிந்து கொண்ட குடும்பத்தினர் தங்களது உணவை அனாவசியமாய் பங்குபோட்டுக் கொள்ளும் வேற்று மனிதனாகவே அவனைப் பார்த்தனர். கல்விக்கூடம் கற்றுக் கொடுத்ததைக் கொண்டு தன் வாழ்வை இதற்கு மேல் பார்த்துக் கொள்ள முடியுமென்கிற நம்பிக்கை வந்த நாளில் கொஞ்சம் பழைய உருப்படிகளோடு சொந்த ஊரை என்றெறைக்குமாய் துறந்தான்.

2

ஹோட்டல் கலிஃபோர்னியா இரண்டாவது முறை அந்த பாரில் ஒலித்தபோது அங்கிருந்த வாடிகையாளர்கள் எரிச்சலானார்கள். அந்தக் கூட்டத்திற்கு கொஞ்சமும் தொடர்பில்லாத ஒருவனாய் தனித்துக் குடித்துக் கொண்டிருந்த அவனது அழைப்பேசி ரகசியமானதொரு

https://telegram.me/aedahamlibrary

அழைப்பிற்காய் காத்திருந்தது. வோட்காவின் நறுமணத்தோடு முத்தமிடும் அவள் காத்திருக்கச் சொல்லியிருக்கிறாள். எப்போது வேண்டுமானாலும் அழைக்கக் கூடும். ஒரு பெண்ணின் அழைப்பிற்கான காத்திருப்பில் நிதானமாய் குடிப்பது சவாலான காரியம். மயங்கும் போதையில் ஒரு பெண்ணை நெருங்கும் போது பலசமயம் இவனுக்கு அழவே தோன்றும். யாராவது ஒருத்தி தன்னை சுருட்டி தனது சின்னஞ்சிறிய கருப்பைக்குள் என்றென்றைக்குமாய் வைத்துக் கொள்ள மாட்டாளாவென தவிப்பாய் இருக்கும். ஒரு பெண்ணின் உடலுக்குள் யுகம் யுகமாய் பிறக்காத சிசுவாய் இருந்துவிடுதல் எத்தனை ஆசிர்வதமானது. கடவுளிடம் கேட்பதற்கு எப்போதுமிருக்கும் ஒரேயொரு கோரிக்கை அதுதான், ஒருபோதும் அவர் அவன் மீது கருணை கொள்ளப்போவதில்லை என்பதால் அபூர்வமாய் போதை முற்றும் நாட்களில் தனக்கு விருப்பமான யாராவதொரு பெண்ணிடம் சொல்வான். கருப்பைகள் குழந்தைகளுக்கானவை மட்டுமே அதில் எந்தவொரு காதலனுக்கும் இடமில்லை என்பதைப் புரிந்து கொண்டிருக்கும் அவனின் காதலிகள் கருணையே இன்றி நிராகரிப்பார்கள். அவன் ஒரு சிசுவை கேட்கவில்லை, தானே சிசுவாக வேண்டுமென்னும் அச்சத்திற்குரிய விருப்பம் கொண்டிருக்கிறான். அதனாலேயே பெரும்பாலான பெண்கள் அவனோடு உடலை மட்டுமே பகிர்ந்து கொள்கிறார்கள். சுனிதா எப்போதும் சொல்வாள். “நான் புரிந்து கொள்ள விரும்பும் உண்மைக்கும் நீ உணர்த்த விரும்பும் உண்மைக்கும் இடையிலான மிக நீண்ட தூரத்தை ஒவ்வொரு முறையும் ஈடு செய்து கடக்க வைப்பது நாம் பகிர்ந்து கொள்ளும் சின்னஞ்சிறு பொய்கள் தான்.”

இப்பொழுதும் மனம் சுனிதாவைக் குறித்த யோசனையில் தான் லயித்திருந்தது. தனக்கானவள் என அர்த்தமேயில்லாமல் நினைத்து சிரித்துக் கொண்டான். இந்த எண்ணம் தொடர்ந்தால் இந்த இரவு வீணாகிவிடுமென முடிவுசெய்து மதுக்கூடத்திலிருந்து வெளியேறி மூன்று சக்கர வாகனமொன்றை அமர்த்திக் கொண்டான். தன் உடலில் துர்நாற்றமெதுவும் இல்லை என்பதை உறுதி செய்து கொள்ளத் தவறவில்லை. ”ஓகே. நான் ரெடி சீக்கிரம் வந்துடு.” அர்ச்சனாவின் உரையாடல் எப்போதும் சிக்கனமானது. ஒவ்வொருமுறையும் தன்னை இப்படி காத்திருக்க சொன்னதற்காய் அவள் மன்னிப்பு கூட கேட்பதில்லை. சில மாதங்களுக்கு முன் அவளை ஒருதலையாய் காதலித்தான், ஆனால் சொல்ல அச்சம். அவளைப் பொறுத்தவரை அவளுக்குத் தேவை தனது ஆணைகளுக்குக் கீழ்ப்படியும் ஒருவன். இச்சையை இரண்டாம் பட்சமாய் நினைக்குமவள் அவளின் தேவைகள்

https://telegram.me/aedahamlibrary

ஒவ்வொரு முறையும் வினோதமானது.

பிரபல ஆங்கில தினசரி ஒன்றின் தலைமைப் பொறுப்பிலிருந்த அர்ச்சனா வதைபடுதலின் வழியாய் உடலைக் கொண்டாடும் புதிய உலகை அவனுக்கு அறிமுகப்படுத்தினாள். புதிய குற்றங்களை சாகசங்களைத் தொடர்ந்து காட்சிப்படுத்துவதை வெற்றியின் அடையாளமாய்க் கண்டு பழகியதால் அந்த ருசி வாழ்விற்கும் தேவையாய் இருந்தது. ரப்பர் பொம்மைகள், டில்டோக்கள் எல்லாம் காலவதியாகிப் போன இந்தக் காலத்தில் உலக யுத்தத்தின் மிச்ச வன்முறைகளை பொருளாதார வீழ்ச்சிகுப் பிறகான வளரும் நாடுகளின் இழிவுகளை எல்லாம் வதைப்பதின் வழியாக மட்டுமே புரிந்து கொள்ள முடியும். இந்த தேசத்தின் அரசியல் குழப்பங்கள், தனி மனித துயரங்கள், அடுத்த நாளுக்கான தலைப்பு செய்தி, அவ்வளவும் அம்மணமான பின் மறந்து போவது ஒருவித ஆச்சர்யம் தான். உடலென்பது கேளிக்கை, துயரத்தின் முடிக்கப்பெறாத ஓவியம், தனிமனிதன் எப்போதும் ஓய்ந்து போகாத சுவாரஸ்யங்களைக் கொண்டிருக்கும் விளையாட்டு.

முதல் சந்திப்பின் போது எடுத்த மாத்திரத்தில் இவனைத் தனது படுக்கையறைக்குள் அனுமதிக்கவில்லை. பதிமூன்றாவது மாடியிலிருந்த அவளது ஃப்ளாட்டின் ஹாலில் சுத்தமான தரையை மூடி மறைத்திருந்த கார்ப்பெட்டில் ஆங்காங்கே வைக்கப்பட்ட போன்சாய் செடிகளைப் பார்த்தபடி நின்றவனுக்கு அருந்த ஆரஞ்சு பழச்சாறைக் கொடுத்தாள். தேவாலயத்திற்குச் செல்லும் ஒருவனிடம் இருக்கும் பணிவு அவனிடம். “கேஷ்வலா இருக்கலாம் வினோத்... வினோத் தான உண்மையான பேர்...” அவனுக்கு இருக்கையைக் காட்டிவிட்டு எதிரில் அமர்ந்தாள். லீவைஸ் ஷார்ட்ஸும், ஸ்லீவ் லெஸ் டாப்ஸும் அணிந்த

https://telegram.me/aedahamlibrary

முப்பத்தைந்தை தாண்டிய அவளது கண் கண்ணாடி மியா கலிஃபாவை நினைவு படுத்த, மென்மையாய் சிரித்தான். “என்ன எதோ சொல்ல வர்ற மாதிரி தெரியுது…” “ஸ்பெக்ஸ் மியாவ நினைவு படுத்துது… அதான் சிரிச்சேன்..” தனக்கு அருக்கிலிருந்த சின்ன தலையனையை எடுத்து அவன் மீது எரிந்தவள் “ஸ்பெக்ஸ் ஃபெட்டிஷ்” என சிரித்தாள். நீண்ட நேர உரையாடலுக்குப் பின் படுக்கையறைக்குள் நுழைந்தவளை பின்னாலிருந்து அணைத்து முத்தமிட்டான். மெல்ல விலக்கியவள் “நான் உன்ன அதுக்கு கூப்டல… கொஞ்சம் வெய்ட் பண்ணு…” தனது கட்டிலுக்கு கீழிருந்து ஒரு சிவப்பு நிற வைல்ட்க்ராஃப்ட் பயணப்பையை எடுத்தாள். படுக்கையறையில் கண்களை உறுத்தாத சிவப்பு நிற வெளிச்சம். கட்டிலின் தலை மாட்டில் மட்டும் பொருத்தமே இல்லாமல் இருபுறமும் நீலநிறத்தில் இரண்டு சின்னஞ்சிறிய விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. சின்னதும் பெரியதுமாய் சில flodgers, vampire gloves, clamps, ball gog என அவன் இதுவரை பார்த்திராத பொருட்களை மெத்தையின் மீது வைத்தவள் திரும்பி இவனைப் பார்க்க, “BDSM?” என சந்தேகமாகக் கேட்டான். “ம்ம்.. இதுக்கு முன்ன ட்ரை பண்ணி இருக்கியா?” ஆர்வமாகக் கேட்டாள். “இல்ல கேள்விப்பட்டிருக்கேன். Fifty shades of gray படம் பாத்திருக்கேன்..” தயக்கத்தோடு சொன்னான். “shit… அந்தப் படம் ஒரு நான்சென்ஸ்… நான் சொல்லித் தர்றேன். ஆனா எப்பவாச்சும் நேரங் கெடச்சா ரோலாண்ட் ரெப்பரோட படம் பாரு…” மெதுவாக தனது உடைகளைக் களைந்தபடியே சொன்னாள்.

அந்த வீட்டில் சிவப்பு நிறம் ஆக்ரமித்திருந்ததை மெத்தையில் படுத்திருக்கும் போதுதான் கவனித்தான். ஹாலில் இருந்த ஷோஃபா, தரை விரிப்பு, இந்த மிருதுவான படுக்கையின் படுக்கை விரிப்பு, இவன் கைகளை கட்டிலின் தலை பக்க விளிம்போடு கட்டியிருந்த மெல்லிய துணி அவ்வளவும். உள்ளாடைகளோடு அவனை நெருங்கியவள் கழுத்திலிருந்து முத்தமிடத் துவங்க “நீங்க சேடிஸ்ட்டா…?” குனிந்து அவளைப் பார்க்க முடியாமல் கேட்டான். “ஒரு வகைல நாம எல்லோருமே சேடிஸ்ட்தான்… சேடிஸம் அருவருப்பு இல்ல. ஒரு ஆர்ட். துரதிர்ஸ்டவசமா இங்க பலர் அத மேலோட்டமா புரிஞ்சுக்கிட்டு இருக்காங்க” அவன் கண்களைப் பார்த்து பதில் சொல்லியபடி படுக்கையின் ஓரத்திலிருந்த ரப்பர் paddle ஐ எடுத்து அவன் பின்புறத்தில் அடித்தாள். முதல் முறையாக உடலின் அத்தனை நரம்புகளும் சடாரென விழித்தெழுந்தது அவனுக்குள். “இந்த கேம் ல முதல் விதி… நான் சொல்லாம நீ பேசக் கூடாது…” இன்னொரு முறை அடித்தாள். அவனுக்கு வலியில் கண்களில் இருந்து தானாக நீர் கசிந்தாலும் புதுவிதமான ஒரு பரவசத்தில் சரியெனத் தலையாட்டினான்.

https://telegram.me/aedahamlibrary

இறுகக் கட்டப்பட்ட கைகளில் இப்போது வலியில்லை, மரங்களடர்ந்த இருண்ட பள்ளத்தாக்கில் தன்னந்தனியாய் தியானிக்கையில் மட்டுமே பெற முடிந்த அமைதி அவன் மனமெங்கும். பெருங்காற்றில் அசைவுறும் மூங்கில் வனமாய் அவளின் அசைவுகள் ஒவ்வொன்றின் போதும் இரைச்சலோடு சுவாசித்தான். யாருமே கண்டறியாத உடலின் ரகசிய இசையை அவள் தீர தீர அந்த இரவில் மீட்டிக் கொண்டிருந்தாள். முதல் முறையான விளையாட்டென்பதால் அவன் வாங்கிய தண்டனைகளின் எண்ணிக்கை அதிகமானதாய் இருந்தது, விரகத்தின் சுவாரஸ்யத்தை அவனது ஒவ்வொரு வலியிலும் அனுபவித்தவள் தப்பித்தலுக்காக துடித்துக் கொண்டிருந்த அவனது கால் தொடைகளில் முத்தமிட்டபின் கைகளை அவிழ்த்து விட்டாள். குழந்தையாகி அவள் பாதத்தைக் கட்டிக் கொண்டான். வலியென்று சொல்ல முடியாத அவனின் கண்ணீர் அவளது பாதங்களை நனைத்தது. அந்த இரவு விடிந்தபோது ஜன்னல் வெளியே தெரிந்த உலகை புதிதாகப் பிறந்த குழந்தையின் கண்களோடு பார்த்தான்.

இன்று அவனை அழைக்கும் போதே தெளிவாக சொல்லிவிட்டாள் “உன்னோட இன்னொருத்தரும் இருப்பாரு. நாம மூணு பேர். உனக்கு ஓகேவா?” இதற்குமுன் ஒரு ஆணின் முன்னால் நிர்வாணமாய் இருந்திராத வினோத்திற்கு சங்கடமாக இருந்தாலும் அவளென்பதால் மறுக்காமல் சம்மதித்தான். வழமையாக தரும் பணத்தை விடவும் இரு மடங்கு அதிகமாக தருவதாக வாக்களித்தபோது தன்னை இத்தனைப் பொருட்படுத்துவதற்காக சந்தோசப்பட்டான். வதைபடும் கனங்களில் ஒரு பெண்ணிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதை அவளிடம் கற்றுக் கொண்டாலும் அதன் அதிகபட்ச சாத்தியங்களை வேறு சில பெண்களிடம்தான் அவனால் பரீட்சித்துப் பார்க்க முடிந்தது. பெண்கள் தனித்துவமானவர்கள், இருளுக்கும் ரகசியத்திற்குமான அந்தரங்கத்தைப் போல் அற்புதமானவர்கள். அந்த புதிய மனிதன் இவனை விடவும் உயரமாகவும், வலிமையானவனாகவும் இருந்த போதும் மிதமான ஒரு பெண்மைத்தனம் அவனது பாவனைகளில் வெளிப்பட்டது.

படுக்கையின் இரண்டு பக்கங்களில் எதிரெதிராய் இருவரும் கைகள் கட்டப்பட்டு படுத்திருந்தனர். அர்ச்சனா மிக நிதானமாகவே துவங்கினாள். அடையாளங்காணமுடியாத நெருக்கடி அவளின் முகத்தில். பங்குச் சந்தையில் அவளுக்கு பெருத்த நஷ்டமாயிருக்கலாம், சரியான தலைப்பு செய்தி கிடைக்காத சங்கடமாயிருக்கலாம், குறைந்தபட்சம் அவளது சமையலறைக்குள் கரப்பான் பூச்சிகள் புகுந்து

https://telegram.me/aedahamlibrary

விட்ட எரிச்சலாவது இருக்க வேண்டும். வினோத் தாபத்தை மீறி "என்னாச்சு அர்ச்சனா? ஏன் இவ்ளோ மூர்க்கம்?" அவளது காதுகளில் முனகினான். "த்தா.. எத்தனவாட்டி டா உனக்கு சொல்லிக் குடுப்பேன். பாடு..." paddle ஆல் மூர்க்கமாக அடித்தாள். இதுவரையில்லாத வன்முறை அது. அவள் ஒருபோதும் கெட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தியதில்லை. கைகளை விடுவித்துக் கொண்டு எழுந்து செல்ல விரும்பியவனின் பின்புறத்தில் முன்னை விடவும் மூர்க்கமாக அடிக்க, வலியில் சுருண்டு படுத்தான். அருகிலிருந்த புதிய மனிதனின் கைகளை அவிழ்த்துவிட்டவள் "அவனுக்கு blow job பண்ணிவிடு.." ஆவேசமாக உத்தரவிட்டபின் அங்கிருந்து வெளியேறி மதுவோடு திரும்பினாள். அந்த அறையிலிருந்த 50 இஞ்ச் சோனி டிவி ஒளிர வினோத்தும் இன்னொருவனும் நடப்பது புரியாமல் பார்த்தனர். சில நொடிகளுக்குப்பின் பாதியிலிருந்து ஒரு கலவரக் காட்சி ஓடத் துவங்கியது. சிரியாவின் மீது வெடித்த குண்டுகளும் அதனால் ரத்தக் காயமுற்று உடல் பாகங்களை இழந்தவர்களின் கதறலும் குரூரமான காட்சித் துண்டுகளாய் ஓட இவர்கள் இருவரும் அச்சத்தோடு பார்த்தனர். Paddle ஆல் அந்த புதிய மனிதனை ஓங்கி அடித்தவள் "நான் உன்ன நிறுத்த சொன்னனா நாயே.." அலறினாள். அவன் கட்டளையைப் பெற்றுக் கொண்டு மீண்டும் விட்ட இடத்திலிருந்து ஆவேசமாகத் துவங்கினான்... மதுவருந்தியபடியே தொலைக்காட்சியையும் இவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தவள் நெருங்கி வந்து இருவரையும் முத்தமிட்டாள் "நீங்க ரெண்டு பேரும் எனக்கு ஸ்லேவ்ஸ்.. என்னோட நாய்ங்க.. அப்டித்தான..." இருவரும் ஒரே நேரத்தில் "எஸ் கமாண்டர்..." என்றனர். இருவரையும் அடித்தாள். வினோதிற்கு அந்தக் கனம் அருவருப்பா, காமமா என எதுவும் விளங்காமல் இதுவெல்லாம் எப்போது முடியுமென மனம் பரபரத்தது. தனது உடைகளைக் களைந்து இருவரையும் நெருங்கிய அர்ச்சனா வினோத்தின் மேல் படர்ந்தாள். "என்னோட ஸ்லேவ், என்னோட ஏஞ்சல், என்னோட தேவதூதன் எல்லாம்டா நீ..." வேறு யாரும் ஒருபோதும் தரமுடியாத காதலோடு அவனோடு கூட இன்னொருவன் தனது கட்டளைக்காக காத்திருந்தபடி ஒதுங்கி நின்றான். வினோத் இந்த புணர்ச்சிக்காகத்தான் இந்த பிறப்போ என கலங்கி மயங்க அர்ச்சனா திரும்பி இன்னொருவனிடம் "beat me.." என கட்டளையிட்டாள். அந்த மனிதன் சீரான இடைவெளியில் அவளை அடிக்கத் துவங்க தொலைக்காட்சியில் ஓடிக் கொண்டிருந்த யுத்தக் காட்சிகள் முடிந்து ஓஷோவின் தந்த்ரா இசை மெதுவாக ஒலிக்கத் துவங்கியது. அர்ச்சனா களைத்து வினோத்தின் மேல் படுத்து உறங்கினாள். அவனால் அவளை விலக்கவே முடியவில்லை.

https://telegram.me/aedahamlibrary

காலை அந்த புதிய மனிதன் கிளம்பிச் சென்றபின் இருவருக்குமான உணவு தயாரித்தாள். உடலெங்கும் ரணமும் களிப்பும் சேர்ந்த களைப்பில் வினோத் அவளது கவுச்சில் படுத்திருந்தான். அவன் முதுகில் முத்தமிட்டபோது ஒருவித காதலை அவளிடம் உணர்ந்தான். "பேசாம என் கூடயே இருந்திடேண்டா..." இந்த வார்த்தைகளை அவளிடம் எதிர்பார்த்திருக்கவில்லை. சிரித்தான். "இல்ல அர்ச்சனா, சரியா வராது. நமக்கான வெளி தனித்தனியானது. பக்கத்துலயே இருக்கறது நம்ம ரெண்டு பேருக்கும் நல்லதில்ல." அவளை தன் உடலெங்கும் முத்தமிட அனுமதித்தான். "உன்ன மாதிரி பசங்க ஒரு கிஃப்ட் டா... வெளில சாதாரணமா ஆம்பளத் தேவிடியான்னு சொல்லிருவானுங்க. ஆனா பெண்களோட உலகத்துல ஒருத்தன் குழப்பமே இல்லாம வாழ்றது எவ்ளோ கஷ்டம் தெரியுமா? யாருக்காகவும் லைஃப் ஸ்டைல மாத்திக்காத... எனக்கு ஆசயாத்தான் இருக்கு உன்னய என்னோடயே வெச்சுக்க... நீதான் முடியாதுங்கறியே.." கடைசியாக ஒருமுறை ஆழமாக முத்தமிட்டு எழுந்தாள். இரவுகளில் அவளிடமிருக்கும் மூர்க்கமெல்லாம் தீர்ந்து உறங்கியெழுந்த குழந்தையாய்ப் பார்த்தான்.

3

வினோத்தின் வேதாகமத்தில் பொருந்தாத ஓர் பகுதி.

மாலதியை உங்களில் பலரும் நேசிக்கக் கூடும். அவள் குரல் அப்படி. முருகனை நினைத்து உருகிப் பாடுகையில் குரலில் பக்தி நித்ய ஜீவனாய் கசிந்து வெளிப்படுவதைக் கேட்கலாம். இசையின் ரத்தமும் சதையுமான ஜீவனவள். பெசண்ட் நகர் கடற்கரையை ஒட்டின பிரம்மாண்டமான வீடு. தோட்டமும், தோட்டக்காரர்களும் தவிர்த்து குடும்பத்தினர் என சொல்லிக் கொள்ளத்தக்க எல்லோரும் மாயவரத்தில் இருக்க பாடல் பதிவுகளுக்காகவும் கச்சேரிகளின் போதும் தங்கவென்றே இந்த வீட்டை வாங்கியிருந்தாள். போகன் வில்லா மரங்கள் நிறைந்த அந்த சாலையில் இவள் வீடு தியானமடம் போலிருக்கும். முன் வாசலில் அலங்கரிக்கப்பட்ட கூண்டுகளுக்குள் நிறைய பறவைகளை வளர்த்தாள். மிக அரிதான blue and yellow macaw வகை கிளிகளை அவற்றின் அற்புதமான குரலுக்காகவே வாங்கி வைத்திருந்தாள். அந்த வீட்டில் அவளின் ஆதுரமிக்க துணைவர்கள் இவர்கள் தான்.

மானஸி என்னும் பெயரில் தான் இணையத்தில் இவனுக்கு அறிமுகமானாள். Loccante தளத்திலிருந்த இவனது சுய விவரக்குறிப்பில்

https://telegram.me/aedahamlibrary

தகவல்கள் அவ்வளவும் உண்மைதானா என ஒருமுறைக்கு இருமுறை சரி பார்த்துக் கொண்டாள். ஆனாலும் நம்பிக்கை வராமல் நேரில் சந்திப்பதற்கு முன்னால் ஒருமுறை ஸ்கைப்பில் பேச அழைத்தாள். வினோத்திற்கு இதுமாதிரியான நீண்ட விளையாட்டுகளில் எல்லாம் ஆர்வமில்லை. வருமானம் குறைவென்பதோடு பெரும்பாலான பெண்களும் செக்ஸைப் பற்றி எதுவும் தெரியாதவர்களாகவே இருப்பார்கள். “come on asshole lick my cunt.. oh fuck…. … don’t stop… don’t stop… ahhh .. ahh…” என அவர்களின் அலறலுக்குப் பதிலாக எழும்பாத உணர்ச்சியை எழும்பியது போன்ற ஒரு நாடகத்தை நிகழ்த்தி பதிலுக்கு இவனும் “come babe.. fuck me… fuck me hard… yah that’s right.. go on baby… fuck me ahh ahh…” காமத்தின் அலறலை வெளிப்படுத்த வேண்டும். சிலருக்கு பத்திலிருந்து பதினைந்து நிமிடங்களுக்குள் முடிந்து விடும். சில பெண்கள் நாற்பது நிமிடங்கள் வரை வியர்க்க வியர்க்க அவனோடு காட்சி வழியே கூடிக் களிப்பார்கள். தனது வாழ்வாதார தேவைகளுக்கும், உடலைப் பராமரிக்க தேவையான அழகு சாதன மற்றும் ஆரோக்கியப் பொருட்களை வாங்கவும் அவன் நிறையவே உழைக்க வேண்டியிருந்தது.

https://telegram.me/aedahamlibrary

மானஸி என்னும் பெயர் போலியாகத் தெரிந்ததால் அவளின் மீது வினோத்திற்கு பெரிதாக ஆர்வம் ஏற்பட்டிருக்கவில்லை. வழக்கமாக வீடியோ கால்கள் பேசுவதற்கு முன்னால் கொஞ்சம் உடற்பயிற்சி செய்வான். தனது உடலைப் பார்க்கும் பெண்ணுக்கு எந்த விதத்திலும் ஏமாற்றமிருக்க கூடாதென்கிற கவனம். அன்றைய தினமிருந்த களைப்பில் முகத்தை மட்டும் கழுவி விட்டு வெகு இயல்பாக உடைகளைக் களைந்து உட்கார்ந்தான். உள்ளாடை மட்டுமே அணிந்திருந்த இவனைப் பார்த்து அதிர்ச்சியானவள் “ச்சே ச்சே என்னது இது? மொதல்ல துணிய மாட்டிக்கிட்டு வா...” அருவருப்போடு வெளிப்பட்ட போதும் அந்தக் குரல் மகோன்னதமானதாய் இருக்க அவளின் மீது புரிந்து கொள்ள முடியாத ஆர்வமெழுந்தது. நடிகை ட்ரூ பேரி மோரின் அழகான முகத்தை மாஸ்க்காக அணிந்து, தனது அசல் முகத்தை மறைத்திருந்தாள். இயல்பாக அவனைக் குறித்த அடிப்படை விஷயங்களைத் தெரிந்து கொள்ள விரும்பியவளாக பேசினாள். அவளிடம் இச்சைகளைத் தாண்டி தனக்கு ஆதாரமான ஒருவனைத்

https://telegram.me/aedahamlibrary

தேடும் தவிப்பிருந்தது. “இதப் பேசறதுக்கு நீங்க நார்மலா என்னோடஃபேஸ்புக் ஐடி ல சாட் பண்ணி இருக்கலாமே. பே பண்ணி நேரம் செலவழிக்கனுமா?” கேலியாகக் கேட்டான். ”வாஸ்தவந்தான். ஆனா ஃபேஸ்புக் ல நீங்க என்னோட பேசனும்னு நிர்ப்பந்தம் இல்ல. இங்க நீங்க பேசித்தான ஆகனும்..” அவள் சொற்கள் ஒவ்வொன்றும் பிரபஞ்சத்தின் அபூர்வ சத்தங்கள் அவ்வளவையும் பிரதிபலித்தது. இவள் முகம் எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும், தன் வாழ்நாளில் இவளிலும் ஓர் பேரழகியை ஒருபோதும் தன்னால் காணமுடியாதென உறுதியாக நம்பினான். அவளுக்கு அவனது வெளிக்காட்ட விரும்பாத கூச்சமும் எளிமையும் பிடித்திருந்தது. தன்னளவில் யாருடனும் நெருங்கிப் பழகமுடியாமல் தனித்திருக்கும் ஒருவனாகவே அவனைக் கருதியவள் அவனை சந்திப்பதால் பிரச்சனையில்லை என முடிவு செய்தாள். அனுமதிக்கப்பட்ட நேரம் முடியும் தருவாயில் “சரி எனக்கு நீ ஓகே. இந்த வீக் எண்ட் உன்னோட நேரம் எனக்கு கிடைக்குமா?” அவன் தொழிலை இத்தனை மரியாதையோடு நடத்தியவர்கள் மிகக் குறைவு. அவளது ஒவ்வொரு செயலிலும் ஒழுங்கும் திருத்தமும் இருந்ததால் அவளுடனான இரவிற்காக இந்த சில நிமிடங்களில் ஏங்கிப்போயிருந்தான். “கண்டிப்பா எப்போன்னு சொல்லுங்க. அவசியம் சந்திக்கலாம்.” அவள் தனது முகவரியைத் தந்து வர வேண்டிய நேரத்தையும் குறிப்பிட்டிருந்தாள். இணைப்பைத் துண்டிக்கப் போவதற்கு முன் அவசரமாக வினோத் “ஒரே ஒரு தடவ உங்களோட முகத்தப் பாக்கலாமா?” என மனம் பதைபதைக்க கேட்டான். சத்தமாக சிரித்தவள் “இந்த முகத்துக்கான தேவை இல்லாமத்தான இவ்ளோ நேரம் பேசினோம். முகந்தான் அடையாளமா மாறிடுது வினோத். அந்த அடையாளந்தான் சாதாரண எல்லா விஷயங்களையும் அபூர்வமாவோ இழிவாவோ மாத்திடுது. இப்ப போட்டிருக்கற இந்த மாஸ்க் ல ஒரு பன்றியோட படம் இருந்திருந்தா நீ இவ்ளோ நேரம் பேசி இருப்பியா?” அவளது கேள்விகளுக்கு அவனிடம் பதில்களில்லை. “சரிங்க நாம நேர்ல பேசலாம்..” சங்கடத்தோடு தேய்ந்தது அவன் குரல்.

பிரபஞ்சத்தை இரண்டாய்ப் பிளந்து மோகிக்க தந்தது போல் கொதித்து நின்றான் மாலதியுடனான சந்திப்பு நிகழ்ந்த நாளில். அசாத்தியமான சுழல் ஒன்றுக்குள் புகுந்து கொண்ட பரவசம். மயிர்க்கால்களின் அடியாழம் வரை ஆர்வமும் தாபமும் தெறிக்க நின்றவனைப் பார்க்க சந்தோசமாய் இருந்தது.
வழிபாட்டிற்குரியதென்பதாலேயே இங்கு பெண் சிலைகளின் உடல் வனப்பு ரசிக்கப்படவே இல்லை. இயற்கையின் மகத்தான கொடை அவள். விளைந்து நின்ற அவளின் இளமை வனப்பை அருகி சுவைக்க

https://telegram.me/aedahamlibrary

நாவில் அக்னி நீர் சுரந்து அவனை தாகம் கொள்ளச் செய்தது. வகைப்படுத்த முடியாத வசீகர வனம் அந்த படுக்கையறை, ஒளியின் அபூர்வமான மகரந்தம் நிறைந்த சுவர்களில் அவளது ஆளுயர புகைப்படங்கள். திசையெங்கும் மாலதி நிறைந்திருந்த அந்த உலகிற்குள் நுழைந்த நிமிடத்திலிருந்து மதுவருந்தும் நினைவுகூட எழவில்லை "ஆண்கள் மேல அவ்ளோ அச்சமா மாலதி?" அந்தக் கேள்வியை எதிர்பார்த்திருந்தாள். "இல்ல வினோத், காதல். ஆண்கள் மேல அளவில்லாத காதல். சொன்னா சிரிப்பா கூட இருக்கும் உலகத்துல இருக்க அத்தன ஆண்களையும் படுக்கை ல சந்திக்கனும்னு கொந்தளிப்பான காதல் இருக்கு. ஆனா ஒரு பெண்ணோட இத்தனை தீவிரமான காதல எதிர்கொள்ள தொண்ணூற்றி ஒன்பது சதவிகித ஆண்கள் தயாரா இல்ல. மிச்சமிருக்கற ஒரு சதவிகித ஆண்கள தேடிக் கண்டுபிடிக்க கஷ்டமா இருக்கு. அதனால தான் ஒருத்தன் எல்லா வகைலயும் சரியானவனா இருக்கானான்னு பாக்க வேண்டியிருக்கு." அவள் சொற்களில் ஆழமான விரகத்தை உணர்ந்திருக்க முடியவில்லை. சின்ன அதிர்வோ சலனமோ கூட இல்லாமலே தான் பேசினாள். "மாலதிக்கா காதலர்கள் கிடைக்க மாட்டாங்க?. ஆச்சர்யமா இருக்கு." உரையாடலில் உணவை மீறின சுவாரஸ்யம். "நீ இன்னும் புரிஞ்சுக்கல வினோத். எனக்கு தேவை ஒரு காதலனோ கணவனோ இல்ல, என்னோட கட்டளைகளுக்கு கீழ்ப்படியற ஒருத்தன். மஸ்குலினிட்டியோட மொத்த உருவமான ஒருத்தன் ஒரு பெண்ணோட ஆளுமைக்குக் கீழ வரும்போது மகத்தானவனா ஆகறான். அப்படியொரு மகத்தானவன தான் தேடறேன்."

வரலாற்றின் கனவுகளுக்குள் துயில்வதற்கான அவர்களின் பயணம் சமையலறையிலிருந்து துவங்கியது. இன்னும் சில நிமிடங்கள் கட்டுப்படுத்தினால் உடல் வெடித்துவிடுமென தகித்துக் கிடந்தவன் சமயலறையின் கதவில் சாய்த்து பிரபஞ்சத்தின் அத்தனை பெண்களுக்குமான காதலோடு முத்தமிட்டான். இதழ்களை நிதானமாய்ப் பிரித்து அனுமதித்தவள் தன் பற்களையும் நாவையும் சுவைக்கத் தந்தாள். அவள் சொற்களின் குரலின் கனவுகளின் அத்தனை சுவையையும் சுரந்த நாக்கை முத்தமிட்டு தீர்த்தால் போதுமா? அந்தக் கனவுகளில் நுழைந்து செல்வதற்கான சாவியல்லவா இது? பற்களால் வலிக்காமல் கடித்தான். அவளையே தின்றுவிடத் துடிக்கும் மூர்க்கம் இந்த நாவை எப்படி விட்டுவைக்கும். அவளுக்கு உடல் வெப்பத்தில் கசகசக்க தன்னிலிருந்து விலக்க முயன்றாள். அவன் சிறு துளி கூட நகர்வதாயில்லை. அவன் பின்புறத்தில் ஓங்கி அடிக்க, சடாரென யதார்த்தத்திற்கு திரும்பி கொஞ்சமாய்ப் பிரிந்தான். "என்ன அவசரம்,

https://telegram.me/aedahamlibrary

முழு இரவும் இருக்கு.. வா.. ” அவன் கைகளைப் பிடித்துக் கொண்டாள். தோள்களில் வழிந்திருந்த வியர்வையை காதலோடு மேலேறும் நாய்க்குட்டியாய் நக்கிக் கொடுத்தான். இந்த விளையாட்டுகள் விரகத்திற்குப் பதிலாய் கூச்சத்தையே அவளிடம் ஏற்படுத்தியது.

ஆலயங்களில் மெல்லிய ஒலியில் கடவுளைத் துதிக்க ஒலிக்குமே ஓங்காரம் அப்படியான ஒரு மதுரக் குரல் அவளின் படுக்கையறையிலிருந்த ஸ்பீக்கர்களில் ஒலிக்கத் துவங்கியது. அவளே பாடின பக்தி பாடல்களின் தொகுப்பு. தன்னோடு இருப்பவனின் வழிபாட்டிற்குரிய தெய்வம் தானாக மட்டுமே இருக்க வேண்டுமென்கிற கர்வத்தை அவளின் நிர்வாணத்தில்தான் கண்டுகொண்டான். படுக்கைக்கு மேல் தொங்கிக் கொண்டிருந்த ட்ரீம் கேட்ச்சர் அவர்கள் இருவருக்குமான மகோன்னதமான கனவுகளை மட்டுமே அந்த இரவு தருவதென உறுதியோடு நிதானமாக அசைந்தபடி இருந்தது. வேறு யாராலும் நீந்த முடியாத அக்னி குளத்திற்குள் அனுமதிப்பது போல் அவனை அழைத்தாள். ஸர்ப்பங்களின் நஞ்சு நிரம்பிய நாவைப் போல் தீவிரமாயிருந்தன அவளின் கண்கள். எல்லாம் துவங்குவதற்கு முன்பாகவே பெரும் தொகையை அவன் சேவைக்கான கூலியாய்க் கொடுத்தாள். “பாதியில போயிடமாட்டேன் மாலதி, அப்றமா வாங்கிக்கறேன்.” மறுத்தவனிடம் நிர்ப்பந்தித்துக் கொடுத்தாள்.

ஆழ் கடலில் இரு பெரும் அலைகள் மோதிச் சிதறத் தயாராவது போல் இருவரும் கலவி கொள்ளத் துவங்கினர். தன் உடலின் ஒவ்வொரு செல்லில் இருக்கும் நறுமணத்தையும் முழுவதுமாய் அவன் நுகரத் தூண்டியவள் அவன் அக்குள் வியர்வைக்குள் தன்னை சரணடையத் தந்தாள். இத்தனை காலம் தான் கற்றுக் கொண்ட அத்தனையையும் இவள் ஒருத்தியிடம் தந்துவிடும் பிரயத்தனத்தில் ஆவேசமாக இயங்கியவனை அவளுக்கு ரொம்பவே பிடித்துப் போனது. பல நாட்களுக்குப் பிறகான இந்தக் கலவி ஒருவித ஆசிர்வாதம். நகங்களால் அவன் முதுகில் கீறி குருதி கசியச் செய்ய வியர்வையின் உப்பும் குருதியும் தந்த எரிச்சல் அவள் குறி தேடி அவனைச் சுவைக்கச் சொன்னது. நெருப்பு மலர்களின் குவியலுக்குள் முகம் புதைத்து நுகர்ந்து சுவைக்கத் துவங்கின சில நொடிகளுக்குப் பின் “ண்ணா...” என முனகினாள். அந்த வார்த்தைகளை முதல் முறை அவன் கேட்கத் தவறினாலும் “எவ்ளோ காலம்ணா நான் காத்துட்டு இருப்பேன்.. நீ வேணும்ணா..,” இந்தமுறை சத்தமாகவே அரற்றினாள். அவன் எதுவும் புரியாமல் விலகி “அண்ணாவா?” மூச்சு வாங்க அவள் கண்களுக்குள் ரகசியம் தேடி நின்றான். “பாதில நிறுத்தாதண்ணா.. ப்ளீஸ்ண்ணா...

https://telegram.me/aedahamlibrary

செய்ண்ணா..” என அவன் தலையைப் பிடித்து மீண்டும் தன் பக்கம் இழுத்தாள். அவசரமாக தன்னை அவளிடமிருந்து விலக்கிக் கொண்டவன் “என்ன நடக்குதுன்னு புரியல?” பதட்டத்தோடு கேட்டான். அவளுக்கு மூச்சு வாங்கியது. “எதுக்கு புரிஞ்சுக்கனும். பணம் தர்றேன்... சொல்றத செய்..” முதல் முறையாக அவள் முகம் கொஞ்சம் கோரமாய் மாறியது. அவள் மீதான பித்தை அழிக்கவும் முடியாமல் ஒன்று கலந்து கூடவும் முடியாமல் தவிப்பாய் இருந்தது. “எனக்குத் தங்கச்சிகளோடு படுத்து பழக்கமில்ல . நான் இன்செஸ்ட் இல்ல.” அவனை இழுத்து கீழே தள்ளியவள் மேலேறி உடலெங்கும் தன் நாக்கால் தூண்டினாள். “நான் இன்செஸ்ட் தான் வினோத் அதுல என்ன பிரச்சன? நீ உடம்ப விக்கறவந்தான. பணம் குடுக்கறது யாரா இருந்தா என்ன?” முகத்தைப் பார்க்காமல் கால் விரல்களில் முத்தமிட்டாள். “வெறுமனே பணத்துக்காக இத நான் பண்ணல மாலதி. எனக்கு ஒவ்வொரு பெண்ணோடயும் இருக்க காதல் முக்கியம்... அப்றந்தான் பணம்..” அவளுக்கு எரிச்சலானது. விலகி அவன் அருகில் உட்கார்ந்தவள் “புல்ஷிட்...” என புலம்பினாள். துடித்துக் கொண்டிருந்த உயிர் நரம்பை பாதியில் அறுத்துவிட்ட பதை பதைப்பு அவள் உடலில். தன்னை நெருங்கி வருகிற எல்லோரும் தயங்கி தப்பித்து ஓடும் அதே இடத்தில் இவனும் சிக்கிக் கொள்ளவான் என அவள் எதிர்பார்த்திருக்கவில்லை. கபோர்டிலிருந்து ஒயின் பாட்டிலை எடுத்தவள் கோப்பை கூட தேவையற்றவளாய் அப்படியே குடித்தாள். அவனுக்கு சங்கடமாகிப் போனது. வினோதின் பக்கமாகத் திரும்பிக் கூட பார்த்திருக்கவில்லை. நெய்யால் பிணைந்து செய்த அந்த உடலில் இன்னும் நறுமணம் பெருகி வழிந்தபடியே இருக்க அறுபட்ட இடத்தை சரிசெய்துவிடும் பொருட்டு முத்தமிட்டான். அசைந்து அவனிடம் ஒயின் பாட்டிலைக் குடுத்தாள். சில மிடறுகள் குடித்தான். இருவரும் பேசிக் கொள்ளாமலேயே முத்தமிட்டார்கள். தாமதிக்க விரும்பாமல் தன் மேலேற்றி அவளைப் புணரத் தூண்டினான். சந்திர கிரகணத்தின் போது மட்டுமே தெரியும் நிலாவின் அபூர்வமான சொரூபமாய் அவன் மீது படர்ந்தவள் நிதானமாக இயங்கத் துவங்கினாள். எல்லாம் சரியாகி அவன் முழுவதுமாக அவளோடு கரைந்த கனத்தில் “அண்ணா... லவ்யூண்ணா... லவ் யூண்ணா..ண்ணா..” என மீண்டும் அவன் காதுகளுக்குள் அவள் சொற்கள் எதிரொலிக்க பதட்டத்தோடு கண்களைத் திறந்து பார்த்த போது பூப்பெய்தாத சிறுமியொருத்தி தன் மீது இயங்குவதாகத் தெரிய பதற்றத்தில் உடலைத் தளரவிட்டான். எதுவும் செய்யமுடியாமல் அவளை வெறித்துப் பார்த்தான். “இந்த பிரபஞ்சத்துல எதாச்சும் ஒரு மூலைக்கு என்னய கூட்டிட்டுப்

https://telegram.me/aedahamlibrary

போயிடுண்ணா. பாக்கற எல்லா ஆம்பள கிட்டயும் உன் சாயலத்தான் தேடறேன், நீ ஒரு தேவதூதண்ணா.. தேவதூதன்...” நிறுத்தாமல் அரற்ற மெல்ல அவன் குறி மீண்டும் சுருங்கியது. தனது உடலுக்குள் புகுந்த நெருப்புக்கட்டி சடாரென உருகி கரைந்த ஏமாற்றத்தில் வினோத்தைப் பார்த்தவள் ஓங்கி அறைந்தாள். நிறுத்தவே இல்லை. தனக்குள்ளிருக்கும் வன்மம் தீர தீர அறைந்தாள். அவன் எதிர்வினைகளின்றி அப்படியே கிடந்தான்.

“ஏண்டா உறவுமுறைகள புடிச்சு தொங்கிட்டு இருக்கீங்க. எல்லாம் உடம்பு தான. என்னோட இந்த உடல் பருவமெய்தின நாள் ல இருந்து அணுகின ஆண் என்னோட அண்ணாதான். வயசு வர்ற வரைக்கும் எம்மேல இருந்த மயக்கம் எல்லாம் நான் வளரும் போது தங்கச்சியா தெரிஞ்சதும் அவனுக்குப் போயிடுச்சு. ரெண்டு பேரும் ஒரே அம்மாவுக்கு பொறந்தோம் ஒன்னாவே வளந்தோம் சொல்லப் போனா அவனுக்கும் எனக்கும் ஒரே முக ஜாட. என்னோட ஒருபாதி உடல் அவன். என்னோட இன்னொரு பாதியோட நான் கரையறதுல என்ன தப்பு? ஏன் யாருக்கும் இது புரியல.” அவளது கோபம் இப்பொழுது அழுகையாய் மாற சமாதானப்படுத்தத் தெரியாமல் அவள் தலையைக் கோதினான். “நம்மளோட பிரத்யேகமான விருப்பங்கள் சில சமயம் நம்மள சிதைச்சிடும் மாலதி. நீ இந்த உலகமே கொண்டாடற ஆர்டிஸ்ட். இந்த ஒரு விஷயத்தால உலகத்துக்கிட்ட இருந்து துண்டிச்சுக்காத..” திரும்பி அவனை முறைத்தவள் “என்னோட இந்த குமுறலும் தாபமும் தான் என்னோட சங்கீதம் வினோத். என் அண்ணனோட தான் நான் உறவு வெச்சுக்குவேன்னு சொல்ல நான் ஏன் வெக்கப்படனும்? அதையெல்லாம் விட்டுட்டு வர்ற எந்த சந்தோசமும் எனக்கு வேணாம்..” நிதானம் கொள்ள முடியாமல் பேசியவளின் உடல் துடித்துக் கொண்டிருந்தது. தனது தோளில் சாய்த்துக் கொண்டான். “ப்ளீஸ் வினோத் பாதில போயிடாத, இவ்ளோ வருஷத்துல நீ ஒருத்தன் தான் என் அண்ணனோட சாயல்லயும் தேஜஸ்லயும் கொஞ்சம் ஒத்துப் போன. ஏமாத்திடாத வினோத்..” கதறலாகக் கேட்டாள்.

இரண்டு பேரும் எவ்வளவு முயன்றும் அவர்கள் நினைத்த எதுவும் நடந்திருக்கவில்லை. தான் கொண்டாடி பூஜிக்க நினைத்த ஒருத்தியோடு கூடவே முடியாமல் போகுமளவிற்கு ஆகிவிட்ட ஏமாற்றத்தில் அவனுக்கும் தன் மீதே வெறுப்பு. எவ்வளவு முயன்றும் அண்ணா என அவள் கூப்பிடுவதை சகித்துக் கொண்டு அவனால் இயங்க முடியவில்லை. அவன் குறியையும் குதத்தையும் நாவின் கடைசித் துளி வெப்பம் தீரும் வரை சுவைத்தாள். அவன்

https://telegram.me/aedahamlibrary

சமநிலையிலேயே இருக்க, இனி எதுவும் நடக்கப் போவதில்லையென ஒதுங்கி படுத்துக் கொண்டாள். பசியில் அழும் குழந்தை போல் தலையணைக்குள் முகம் புதைத்துக் கொண்டவள் நீண்ட நேரமாய் “ண்ணா அண்ணா என்று அரற்றுவது மட்டும் கேட்டுக் கொண்டே இருந்தது.” விடிவதற்கு முன்பாக உடைகளை மாற்றிக் கொண்டு அவன் கிளம்பிய போது தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருந்த ட்ரீம் கேட்ச்சர் துர்கனவை பரிசளித்த திருப்தியில் உற்சாகமாய் அசைந்து கொண்டிருந்தது.

https://telegram.me/aedahamlibrary

சபிக்கப்பட்ட வாழ்வின் அழியாத ரணங்களை ஒருவன் அலைச்சலின் வழியாய்க் கடந்து செல்லவேண்டியிருக்கிறது. கோடை ஆக்ரமிக்கும் வறண்ட நிலங்களின் இரவு நேரங்களில் குட்டையான முள் மரங்களுக்கு நடுவில் நீளும் தார்ச்சாலைகள், ஒரு மனிதன் கடந்த காலத்தில் எதிர்கொண்ட துர் சகுணங்கள் அவ்வளவையும் சரிசெய்யக் கூடியவை. நாடோடிகள் ரோகிகள் தெருவோரப் பாடகர்களென தேசமெங்கும் சுற்றியலையும் ஏராளமானவர்களுடன் சில நாட்கள் சுற்றக் கிளம்பினான். சொல்லப் போனால் நம்பிக்கைகள் கைவிட்ட ஏமாற்றம் அவனுக்குள். உடலென்பது கொண்டாட மட்டுமே என நம்பிக்கொண்டிருந்தவனை சுப்பு லஷ்மி சிதைத்துப் போட்டாள். ஒரேயொரு சொல் தன்னை பலவீனமாக்கக் கூடுமென்கிற நிதர்சனம் புரிந்து போது இன்னும் தான் உறவுகளுக்காக ஏங்குகிற மனிதன் தானோ என சந்தேகமும் வேதனையும் எழுந்தது வினோத்திற்கு. உறவுகள் மனிதனை பலவீனமாக்குகின்றன. சம்பாதிக்கவும், பொருள் சேர்க்கவும், தன்னைச் சுற்றியிருக்கும் சிலரை குறித்து மட்டுமே எப்போதும் சிந்திக்கச் செய்யவும் பழக்குகின்றன. அதனால் தான் எல்லாவற்றிலிருந்தும் துண்டித்துக் கொள்ள விரும்பினான்.

கடவுளை நம்புவதற்கும் வழிபாட்டிற்கும் ஆன்மீகத்திற்குமான குழப்பமான வெளிகளுக்குள் பயணித்த போது மீண்டும் சைவ மடத்து கடந்த கால நாட்கள் நினைவுக்கு வந்தன. கடவுளை நம்புவதென்பது தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்வது, ஆனால் பயணத்தின் வழியும், தெருவோரப் பாடகர்களின் இசையின் வழியும் அவன் புரிந்து கொண்ட ஒன்றை ஆன்மீகமாய் இருக்கலாமென நம்பினான். ஆன்மாவின் அடியாளம் வரை ஊடுருவிச் சென்ற அவர்களின் குரலில் சுப்புவின் குரலில் இருக்கும் ஒழுங்கோ கவர்ச்சியோ வசீகரமோ எதுவுமில்லை. பாறைகள் அதிரும் போது கசியும் கண்ணீரின் ஆன்மா மட்டும் இருந்தது. பெரும் மலைகள் சரியும் போது அவற்றின் ஆன்மா சின்னஞ்சிறிய மரத்தின் நிழல் வேண்டி கெஞ்சுவது போல் ஆதரவின் நிழலுக்காய் தவித்த அவனுக்குத் துணையாய் இருந்தவர்கள் அந்த பாடகர்களும் பக்கீர்களும் தான். சின்னஞ்சிறிய கிராமங்களில் இருக்கும் தர்காக்களில் பாடப்பட்ட ஹுவ்வாலிப் பாடல்கள் பரந்த இந்த உலகில் நகமளவிற்குக் கூட எதுவும் தனக்கு தேவையானதில்லை என்பதை புரிய வைத்தது. எல்லாவற்றின் மீதும் பற்று கொள்ளவும் எல்லாவற்றிலிருந்தும் துண்டித்துக் கொள்ளவும் தயாரான நாளில் தன்னால் மீண்டும் தனது இயல்பிற்குத் திரும்ப முடியுமென நம்பினான்.

https://telegram.me/aedahamlibrary

பயணத்தில் இன்னும் சில தூரம் மிச்சமிருக்க எங்கெங்கோ அலைந்து மதுரா வந்து சேர்ந்தான். வரலாறும் புனைவும் ஒருசேர செழித்த நகரம். மதங்களும் நம்பிக்கைகளும் அந்த நகரை புனிதப்படுத்தியபடியே இருந்தாலும் மனிதர்கள் தங்களின் இருப்பின் மூலமாகவும் வழிபாட்டின் மூலமாகவும் ஜீவன் கெடாமல் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இரவில் யமுனை நதி ஒரு யோகியின் ஆழ்ந்த தியானத்தைக் கொண்டிருந்தது. நதிகள் வழிபாட்டிற்கான ஜீவன் மிக்க அடையாளமாய் கொண்டாடப்படும் தேசத்தில் மனிதன் எந்த ஊருக்கு சென்றாலும் நீரைக் கண்டதும் முதலில் கொஞ்சத்தை அள்ளி தலையில் தெளித்துக் கொள்வதை தன்னைத் தூய்மைப்படுத்தும் என்னும் நம்பிக்கையிலேயே செய்கிறான். விஷ்ராம் காட்டில் சுருங்கலான வெள்ளை நிற சட்டையும் பழைய கருப்பு நிற வேஷ்டியும் அணிந்தபடி யமுனையை இதற்கு முன் தான் பார்த்த வெவ்வேறு நதிகளோடு ஒப்பிட்டுப் பார்த்தான். நீர் ஒன்றே போல் இன்னொரு இடத்தில் ஒருபோதும் இருப்பதில்லை. எதையும் தேடாமல் அலைகிறவனுக்குத்தான் எல்லாம் கிடைக்கும் போல, அவன் தற்காலிகமாக சில நினைவுகளில் இருந்து துண்டித்துக் கொள்ள கிளம்பி இப்பொழுது தன்னை பிரபஞ்சத்தின் இயக்கமிக்கதொரு துளியாய் புரிந்துகொண்டிருந்தான். இதற்கு முன் உறங்காத இரவுகளில் இருந்து இந்த சில நாட்களின் இரவுகள் வேறுபட்டிருந்தன. உடல் பசிக்கேற்றவாறு தன்னை சமன்படுத்திக் கொள்ளும் வலிமையை அடைந்திருந்தது. இருளின் ரகசியமே மனிதன் எல்லாவற்றின் மீதும் ஆசை கொள்வதும் பின் அதனை அடைவதற்கென தன்னைத் தயார் செய்து கொள்வதும் தான். வினோத் எல்லாவற்றின் மீதும் ஆசை கொண்டிருந்தாலும் பற்றில்லாதவனாய் இருந்தான். ஊர் திரும்பும் பக்குவம் வந்திருந்தது. யமுனையை பல நூற்றாண்டுகள் தவம் புரியும் முதிர் கன்னியாக நினைத்துக் கொண்டு நீரில் இறங்கிய போது அவ்வளவு நேரமும் சூழ்ந்திருந்த குளிர் விலகி கதகதப்பு கூடியது. நதியென்னும் ஆதி உடலில் மெல்ல மெல்ல படர்ந்தவனின் குறி நீண்ட நாட்களுக்குப்பின் புணர்ச்சிக்குத் தயாராக கண்களை மூடிக் கொண்டு இதுவரையிலுமான தன் தோழிகளை நினைத்துக் கொண்டான், ஆக இறுதியாய் சுப்புலஷ்மி அண்ணா என அலறியது கூட காதில் எதிரொலிக்காமல் இல்லை. உடல் நிதானமாய் நீரோடு கலந்து அந்த பின்னிரவில் ஸ்கலிதம் கண்டான்.

https://telegram.me/aedahamlibrary

ஈரம் உலவர்வதற்கு முன்பான உடலோடு அறை நோக்கித் திரும்பியவன் அந்த அதிகாலையில் வெள்ளை உடையோடு தூசியடர்ந்த வீதியில் வெவ்வேறு வயதிலிருக்கும் பெண்கள் எதிரில் வருவதைப் பார்த்தான். ஆண்களை அதிகமும் எதிர்கொண்டு பார்த்திராத அவர்கள் கிருஷ்ணருக்கென்று எல்லோராலும் கைவிடப்பட்டவர்கள், சொல்லப் போனால் கிருஷ்ணராலும் கூட. அரை வயிற்று உணவு, தாகத்திற்கு மட்டுமே நீர், உலகத்தின் கண்களில் இருந்து துண்டித்துக் கொள்வதன் வழி இச்சைகளில் இருந்து என்றென்றைக்குமாய் காத்துக் கொள்ளலாமென புராணமும் முன்னோர்களும் கற்றுக்கொடுத்த நம்பிக்கைகள் எத்தனை போலியானவை என்பதை நாற்பதைத் தாண்டியும் தேஜஸோடு மிளிரும் இந்தப் பெண்களைக் காணும் போது புரிந்து கொள்ள முடியும். பசி தான் இச்சைகளின் தோற்றுவாய், உடல் எரிந்து தன்னைத் தானே திண்ணப் பழகிய பின் உணவின் மீதிருக்கும் இச்சை எல்லாவற்றின் பக்கமாகவும் திரும்புகிறது. கணவன் இறந்த பின் கைவிடப்படும் பெண் கடவுளை துதிக்க மட்டுமே விதிக்கப்பட்டவள் என்பதை இன்னும் நம்பும் இந்துக்கள் கிருஷ்ணனின் சொந்த நிலத்தில் விட்டுச் செல்கின்றனர்.

https://telegram.me/aedahamlibrary

இச்சைகளின் கேவல் நிரம்பிய அசுரத்தனமான இந்நகரில் அதிகாலைகளில் தங்கள் உடலை நீரால் சுத்தம் செய்து கொள்ள வரும் பெண்களிடம் காண்பதை இங்கு வந்து செல்லும் யாரும் பிறரிடம் சொல்வதில்லை. தலை மழிக்கப்பட்டு, வெள்ளை நிற சேலையில் ஆறுதலான மனிதர்களின் அருகாமைக்காக ஏங்கும் அப்பெண்களின் கண்கள் ஒரு வேட்டை மிருகத்தின் தீவிரம் கொண்டவை.

இன்னும் புற உலகின் இயக்கம் பெரிய அளவில் துவங்கி இருக்கவில்லை. தூரத்திலிருந்து வந்த சைக்கிள் காரன் அருகில் வந்ததும் ஒருமுறை மணியடித்தான், “ஸார் சாயா?” வினோத் பதிலே சொல்லாமல் கடந்து செல்ல அந்த வீதியின் மையத்தில் வைக்கப்பட்டிருந்த குப்பைத் தொட்டிக்குப் பின்னால் குள்ளமான ஒரு பெண் நிற்பதைப் பார்க்க முடிந்தது. அவளின் கண்கள் இவன் உடலைத் துளைத்து வெளியேறியதால் தான் திரும்பி கவனித்தான். அந்தப் பார்வையில் ஒரு அழைப்பும் தேவையை பூர்த்தி செய்து கொள்ளும் தவிப்புமிருந்தது. ஊர் திரும்புகிற நாளில் இப்படியானதொரு கலவி அவனுக்கு கொஞ்சமும் தேவையில்லை. ஆனால் இதற்கு முன்பு ஒருபோதும் இதுமாதிரியான சூழலில் இப்படியான நகரத்தில் இப்படியானதொரு பெண்ணோடு கலவி கொண்டதில்லை என்னும் ஆர்வம் அவளிடம் நெருங்கிச் செல்லச் சொன்னது. அருகில் சென்றதும் எரிநட்சத்திரம் ஒன்று விழுந்ததைப் போல் மென்மையாய்ச் சிரித்தாள். வசீகரமான பல் வரிசை. இன்ன வயதென்று சொல்ல முடியாத தோற்றம். ஒருவேளை இரண்டாயிரம் வயதாகக் கூட இருக்கலாம், அல்லது இருபது வயதாகவும் இருக்கலாம். காலங்களைக் கடந்த உடல். உரையாடுவதற்கான அவசியங்களின்றி அவனிலும் உறுதியான கைகளால் இறுக்கி அணைத்தாள். மூச்சு விட இயலாமல் நெளிந்தவனின் ஈர உடலில் முத்தமிட்டுத் தூண்டியவளோடு பேச விரும்பியவன் பெயரைக் கேட்டான். “காளி” என்றாள் ஒற்றை வார்த்தையில். காளியின் மிருதுவாமன் சதைகள் படைத்தலுக்கென உருவானதாய் ஜொலிக்க அதன் ரம்மியத்தில் அந்த இருட்டிலும் மயங்கிப் போனான். அகன்று பெரிய கண்கள். இந்த நிலத்தைச் சேர்ந்தவளென அறுதியிட்டுச் சொல்ல முடியாத வனப்பு. அபூர்வமான பெண்களில் அபூர்வம் இவள். அவளிடம் பேச அவனுக்கு நிறைய இருந்தது, ஆனால் கேட்கும் அவகாசமில்லாதவளாய் அவனோடு கூடினாள். ”இந்த ஊர் இந்த மடம் எல்லாத்தையும் தூக்கிப் போட்டுட்டு எங்கியாச்சும் போயிடலாமே?’” உடலின் தகிப்பை அவனுக்குள் கடத்தியபடியே “ஒரே ஒரு நாள் என்னய அணுகற உனக்கு என்னோட இருப்ப உன்னால புரிஞ்சுக்கவே முடியாது. என்ன மாதிரி எங்க இருக்க எல்லோருக்குமே குடும்பங்களோட வாழ்றதுதான் சாகற வரைக்குமான

https://telegram.me/aedahamlibrary

கனவா இருக்கு. ஆனா புனிதங்கள நம்பற குடும்பத்துக்குள்ள ஒரு விதவை வாழ்றது சாபம். எங்களுக்குன்னு ஒரு உடல் இருக்கு, பசி, ஆசை கனவுகள் இது எதையும் அவங்க மதிக்கிறதில்ல. குடும்பத்துல யாரும் பேசாம தனியா கெடக்கறதுக்கு இது பரவால்ல. கடவுளை துதிக்கிறதும் துதிக்கற மாதிரி நடிக்கிறதும் ஒருவித ஆறுதல் தான்." அவள் லாவகமாய் அவனுக்குள் கரைந்து கொண்டிருக்க, "இல்லம்மா நீ ஏன் யாரயாச்சும் கல்யாணம் கட்டிக்க கூடாது?" மனிதன் அடியாழத்திலிருந்து அக்கறையோடே கேட்டான். முழு உடைகளையும் அவிழ்த்துப் போட்டுவிட்டு அவனை வெளிச்சத்திற்கு இழுத்து வந்தவள் கண்களைப் பார்த்துக் கேட்டாள் "என்னய நல்லா பாரு, நீ கல்யாணம் பண்ணிக்க முடியுமா என்னய?" உடலெங்கும் காயத்தின் தழும்புகள். தன்னைத் தானே வதைத்துக் கொண்டதின் அனேக அடையாளங்களை காண முடிந்தது. அவனுக்கு துளிர்த்த காமம் வடிந்துவிடுவதைப் போலிருக்க மீண்டும் இருளுக்குள் இழுத்து வந்தாள். "எனக்கு இன்றைக்குக் கிடைத்திருப்பது சில நிமிடங்கள் தான், வீணடிக்காதே" என முனகினாள். உலகின் ரகசிய கண்கள் தங்களை கண்கானிக்கும் என்கிற கவலைகளை எல்லாம் பொருட்படுத்தாமல் இருவரும் மூர்க்கமாக ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டனர். காளி தன் நூறு கைகளால் அவனை அணைத்து தனது ஆதி பரப்பிற்குள் அவனை நீந்தச்ச் செய்தாள். யுத்தத்தின் ராட்சச அம்புகளை சலிக்காமல் எய்துவிடும் முனைப்போடும் வினோதமானதொரு காதலோடும் அவளோடு கூடியவன் எல்லாம் முடிந்து விலகிய போது விடியலுக்கு இன்னும் சில நிமிடங்களே மிஞ்சியிருந்தன. விரகத்தின் ரத்த சிவப்பான நாவினால் அவள் தொடர்ந்து முத்தமிட்டபடியே இருந்தாள்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு கிடைத்த கலவியில் அவள் லயித்துப் போயிருந்தாள். இனி எப்போது நிகழுமெனத் தெரியாத ஒன்றிற்காக ஒவ்வொரு நிமிடமும் தவித்துக் கிடக்க வேண்டும். முரடனோ, கிழவனோ, ரோகியோ, எவனாவது ஒருவன். ஆண்மையின் சின்னஞ்சிறிய மிளிர்தலோடு தன்னை அணுகும் நாள் என்பது அபூர்வமானதே. அவன் தனது பணப்பையிலிருந்து கொஞ்சம் பணம் எடுத்து அவளிடம் கொடுத்தபோது, சிரித்தபடியே மறுத்துவிட்டாள். வெறுங்கையோடு அவளை அனுப்ப மனமில்லாமல் யோசித்தவன் தனது மொபைலை கொடுத்தான். "நம்மைச் சூழ்ந்த மனிதர்கள் எல்லோரும் ஏதோவொரு வகையில் கைவிடப்பட்டவர்கள்தான். இந்த வாழ்வை நீ வாழ்வதற்கான திறவு கோலாய் இதை பயன்படுத்தலாம், அல்லது எப்போதும் காளியாகவே இருந்தால் போதுமானது என நினைத்து தூக்கிப் போட்டுவிட்டு கடந்தும் செல்லலாம், உன்னுடைய

https://telegram.me/aedahamlibrary

விருப்பம்.” விடையனுப்புதலுக்காய் காத்திருக்கும் தொனியில் சொன்னான். அவன் இடது மார்பில் அழுத்தமாய்க் கடித்து பற் தடங்களை உருவாக்கியவள் அந்த மொபைலை தனது உடைக்குள் மறைத்து வைத்துக் கொண்டு அங்கிருந்து விலகிச் சென்றாள்.

https://telegram.me/aedahamlibrary

இப்படியாக அவளின் சில காதலர்கள்.

1

இன்ன நிறமெனத் தெரியாமல் மங்கிப்போன சுவர்களுடைய இந்த குடியிருப்பில் ஒவ்வொரு தொகுப்பிலும் இருபத்து நான்கு வீடுகள். மொத்தம் பணிரெண்டு தொகுப்புகள். மனிதர்கள் உறங்குவதற்கும் சமைப்பதற்கும் குளிப்பதற்கும் அளவெடுத்து கட்டப்பட்ட அறைகள். படுக்கையறையின் சுவற்றிலிருந்து விலகினதும் கழிவறையின் சுவரில் முட்டிக் கொள்ள வேண்டும், அத்தனை சிக்கனம். புறாக்கூடுகளை விடவும் சற்றே பெரிதான இந்த வீடுகளைத் தேடி மனிதர்கள் வந்தபடியேதான் இருக்கிறார்கள். நெருக்கடியில் வாழப்பழகியபின் மனிதர்கள் அடிப்படைத் தேவைகளில் புகார் கொண்டிருப்பதில்லை. பெருநகரின் மையத்தில் அரசாங்கத்தின் பொறுப்பில் கட்டிக் கொடுக்கப்பட்ட இந்த குடியிருப்பின் வயது இரு தசாப்தங்களைக் கடந்துவிட்டது. சுற்றிலும் போகன் வில்லா மரங்களும் மஞ்சள் நிறக் கொன்றை மரங்களும் அடர்திருந்தாலும் ஆங்காங்கு தேங்கிய குப்பைகளால் பகலில் கூட கொசுக்கள் மொய்க்கும். கோடை காலத்தின் இறுதி நாட்களில் இந்தப் பகுதி முழுக்க உதிர்ந்து கிடக்கும் மஞ்சள் நிறக் கொன்றைகளை மனிதர்களுக்கு இயற்கை தந்த ஆறுதலெனச் சொல்லலாம். அதிகாலைகளில் அந்த மலர்களைக் காணும் ஒருவனுக்கு உலகின் மீதான அத்தனை வெறுப்புகளும் மறைந்து நித்தியமானதொரு புன்னகை முகத்தில் தோன்றும்.

ஈஸ்வரனின் வீடு முதல் தொகுப்பின் இரண்டாவது தளத்திலிருந்தது. படுக்கையறையின் ஜன்னலிலிருந்து பக்கத்து வீதியைக் காண முடியும். விசாலமாக எல்லா வசதிகளுடனும் கூடிய தனி வீடுகள். அமைதியில் ஆழந்து கிடக்கும் அந்த வீதியிலிருக்கும் வீடுகளைப் பார்க்கையில் ஈஸ்வரனுக்கு ஒரு சுவாரஸ்யமும் இருக்காது.

https://telegram.me/aedahamlibrary

ஆனால் காலை நேரங்களில் அந்த வீதியின் முனையிலிருக்கும் உடற்பயிற்சிக் கூடத்திற்கு வரும் பெண்களைப் பார்க்க பிடிக்கும். தொடர்ந்து பெண்களின் உடலை தாபத்தோடு பார்க்கும் கண்களுக்கு அளவுக்கதிகமான ஒரு திருட்டுத்தனம் வந்துவிடும் போல, ஈஸ்வரனின் கண்களில் குறுகுறுப்பும் திருட்டுத்தனமும் பெருகி வழியும். 'இந்தக் கண்ணு ஏன் ஒரு இடத்துல நிக்க மாட்டேங்குது. ஒரு நாளைக்கு எவளாச்சும் அப்டியே நோண்டி எடுத்துட்டுப் போகப் போறா பாரு.' என சாந்தி கோவமும் எரிச்சலுமாய் சொல்வதை அவன் பொருட்படுத்துவதில்லை. அவன் வாழ்வின் ஆகப்பெரிய பொழுதுபோக்கும் சந்தோசமும் அதுதான். யாரிடமும் நெருங்கிச் சென்று பேசவோ இச்சையை வெளிப்படுத்தவோ துணிச்சலில்லை என்பதோடு தன்னை மற்றவர்கள் நல்லவனாய்ப் பார்க்க வேண்டுமென்பதில் கவனமாய் இருப்பான். அதனாலேயே மனதில் தோன்றுவதை பிறரிடம் வெளிப்படுத்துவதில்லை. ஜன்னலுக்கு அருகாக நின்று தெருவை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனிடம் 'ஏங்க, ஊர்ல இருந்து மாமா வாராரு. எக்மோர் போயி கூட்டிட்டு வாங்க." என சலனப்படுத்தினாள். 'எந்த மாமா?" என இவன் புரியாமல் கேட்க, குழந்தைக்கு சோறூட்டிக் கொண்டிருந்த கையோடு சாந்தி அவனை முறைத்தாள். "அன்பு மாமா. கோமதி அக்கா வீட்டுக்காரரு." ' அவன் எதுக்கு வர்றான்?' என தனக்குள்ளேயே முனகிக் கொண்டான். அந்த மனிதரோடு பெரிய பழக்கமோ நட்போ எதுவுமில்லை. விசேச தினங்களில் அரிதாக ஊரில் பார்த்தால் பொதுவாக பேசிக் கொள்வதோடு சரி. வேண்டாவெறுப்பாக உடையணிந்து கிளம்புகையில் வெயிலேறாத அந்த நாள் மந்தமாய்த் துவங்கியிருந்தது. மண் சாலையெங்கும் விரவிக் கிடந்த மஞ்சள் நிறக் கொன்றைகளில் எப்போதும்போல் அவன் லயிக்கவில்லை.

அவனை அழைத்து வருவதற்கு ரயில் நிலையத்திற்கு சென்றபோது மழை காலத்தில் உறங்காத நுணலின் இரைச்சலைப்போல் ஈஸ்வரனின் எண்ணங்கள் வானுக்கும் பூமிக்குமாய் குதித்துக் கொண்டிருந்தன. இதற்கு முன்பு அன்பு ஒருமுறை இங்கு வந்திருந்தபோது இரண்டு நாட்கள் தங்கியிருந்தான். சாந்தியை போ வா என ஒருமையில் அழைத்தது இவனுக்கு உறுத்தலாக இல்லை. இரண்டு பேரும் மணிக்கணக்காக ஊர்க்கதைகளை பேசிக்கொண்டிருந்த பகலில் இவன் வேலைக் களைப்பில் அயர்ந்து உறங்கிப் போயிருந்தான். அன்புவின் மீது ப்ரியங்களோ அக்கறைகளோ இருக்கும் எந்த

https://telegram.me/aedahamlibrary

சாயலையும் சாந்தியின் முகத்தில் கவனித்திருக்கவில்லை. அவன் உறங்கியெழுந்து எப்போதும் போல் வேலைக்குச் சென்றான், அடுத்த நாள் இரவு தான் வீடு திரும்பினான். அன்றிரவு இவனும் அவனும் ஒன்றாக மதுவருந்தினார்கள். ஒரு சகோதரனின் இணக்கத்தை மது நிரம்பிய வேளைகளில் அன்புவிடம் உணர்ந்திருந்தான். மது மனிதர்களுக்கு இடையிலிருக்கும் அந்தரங்க மனத்தடைகளை மிக எளிதில் உடைத்தெறிந்து விடுகிறது. அந்த இணக்கம் இன்று அவனிடத்தில் இல்லையோ என ஐயப்பட்டான். 'என்ன பங்காளி போன தடவ பாத்தப்போ லார்ஜ் சைஸ் ல இருந்தீங்க இப்ப டபுள் எக்ஸல் சைஸுக்கு ஆயிட்டீங்க' என அன்பு உரிமையோடு கேலி செய்தது தன் தோற்றத்தின் மீதான அவமானமாக இவனுக்குத் தோன்றியது. சிரித்தபடியே 'அட நீங்க வேற, சரியா தூக்கமில்லாம அலைச்சல். அதான் கொஞ்சம் வெய்ட் போட்றுச்சு. நீங்க குளிச்சிட்டு ரெஸ்ட் எடுங்க, நான் போயி கறி எடுத்துட்டு வரேன்.' என்று சமாளித்தான்.

காற்றே இல்லாத பகலின் வெக்கையை விடவும் அன்புவின் வருகை ஈஸ்வரனுக்கு எரிச்சலூட்டியது. அரசு போக்குவரத்து கழகத்தில் நீண்ட தூர பேருந்திற்கு ஓட்டுநராக பணி செய்யும் அவனுக்கு ஒருநாள் வேலை ஒருநாள் விடுமுறை என்பதாக அலுவல். இன்று வேலை நாள், இந்த மாதத்தில் முன்னமே இரண்டு நாட்கள் விடுமுறை எடுத்துவிட்டதால் அவசரமென காரணமும் சொல்ல முடியாது. ஈஸ்வரனின் பதட்டமான கண்கள் வீடெங்கும் சந்தேகத்தைத் விதைத்தபடியே இருந்தன. திருமணமான இத்தனை வருடங்களில் எத்தனையோ இரவுகள் சாந்தி தனியாக உறங்கி இருக்கிறாள். அப்பொழுது உறவினர்கள் வந்து தங்கிப் போனதில் அவன் எந்தவிதத்திலும் தொந்தரவிற்கு உள்ளானதில்லை. குழந்தைகளுக்கும் மனைவிக்குமான இடமாகவே வீட்டை அவன் நினைத்திருந்ததால் உறவினர்களின் வருகை அவனுக்கு உவகையானதே. இன்று தெரிந்த மனிதனின் வருகையால் இனம் புரியாத தொந்தரவிற்குள்ளான தனது இயலாமையை நினைத்து கழிவிரக்கம் கொண்டான்.

சாந்தியின் கண்களில் எப்போதுமிருக்கும் நிதானம். எதற்காகவும் ஏங்கி வியர்த்துப்போன கழுத்தோ அச்சத்தின் காரணமாய் நடுங்கின விரல்களோ இன்றி தனக்குப் பழக்கப்பட்ட சுவர்களுக்குள் அங்குமிங்குமாய் அலைந்து வேலை செய்து

https://telegram.me/aedahamlibrary

கொண்டிருந்தாள். எப்போதும் போலவே இருக்கிறாள். ஆனால் ஏன் தன்னால் முடியவில்லை? தன்னால் இயல்பாய் இல்லாதபோது அவளால் மட்டும் எப்படி இருக்கமுடியுமென்கிற கேள்வியும் சந்தேகங்களும் முகத்திலறைந்த ஒவ்வொரு நொடியும் அவள் கள்ளத்தனம் செய்கிறவளாகவே தெரிந்தாள். அந்த உடலின் மதர்ப்பில் கூடலுக்கான அழைப்பு அதீதமாய் வெளிப்படுவதாய் உணர்ந்தான். அது தனக்கானதாக இல்லையென யோசிக்கும் நேரமெல்லாம் வெறுப்பும் கூடவே ஓர் ரகசிய கிளர்ச்சியும் வருவதைத்தான் அவனால் புரிந்து கொள்ளமுடியவில்லை.

2

சில மாதங்களுக்குமுன் ஈஸ்வரனும் சாந்தியும் உதயம் திரையரங்கிற்கு படம் பார்க்கச் சென்றிருந்தனர். இந்த நகரில் எழுபது ரூபாய் கட்டணத்தில் படம் பார்க்க முடிகிற ஒரே இடம் இதுதான். நடுத்தர வர்க்கத்தினரின் மீதான திரையரங்கத்தினரின் இந்தக் கருணையினால், குடும்பத்தோடு படம் பார்க்க பெருவாரியான மக்கள் இங்கு வருவதுண்டு. அசோக்நகர், கே.கே.நகர், கிண்டி,ஜாஃபர்கான் பேட்டை, வடபழனி, கோடம்பாக்க பகுதி இளைஞர்களுக்கும் உதயம் தியேட்டர் முக்கியமானதொரு புகலிடம்.அதனாலேயே வார நாட்களில் கூட இங்கு கூட்டம் குறைவதில்லை. மாதத்தில் இரண்டு முறையாவது ஈஸ்வரன் அவளை இங்கு கூட்டி வந்துவிடுவான். குழைந்தகளை வெளியில் அழைத்துச் செல்வது ஒரு காரணமென்றாலும் இன்னொரு காரணமிருந்தது. பொது இடங்களில் ஈடுபடும் சின்ன சின்ன விளையாட்டிலும் சீண்டலிலும் ஒரு சுவாரஸ்யம் உண்டு. ஈஸ்வரன் அதைப் பெரிதுமே விரும்புவான். அவளும் சிரித்தபடியே அனுமதிப்பாள். இவனின் வினோதமான விருப்பங்களை திருமணமான இத்தனை வருடங்களில் பார்த்து பழகிவிட்டது. இவன் மட்டுந்தான் இப்படியா? இல்லை எல்லா ஆண்களும் இப்படித்தானா? பசி தீர தீர சாப்பிடக் குடுத்தாலும் போதாமையோடு திரும்பத் திரும்பத் தேடியலைவது. அதிலும் வெவ்வேறு நேரங்களில் வெவ்வேறு இடங்களில். வாழ்வின் சின்ன சின்ன சாகசங்களென்று அவன் இதை நம்புவதால் விருப்பமில்லாத போதும் அவள் அனுமதிப்பதுண்டு. கடற்கரை, கோவில், திரையரங்கமென இடம் எதுவாக இருந்தாலும் கூட்டத்தின் நடுவில் அவன் கைகள் திருட்டுத்தனமாய் இவளுடலில் அலையத் துவங்கிவிடும்.

https://telegram.me/aedahamlibrary

அவள் அவனின் தோள் உயரம் தான், கொஞ்சமும் தளராத மாரும் மடிப்புகளற்ற இடையும் எப்போதும் கவர்ச்சியானவளாகவே வைத்திருக்கிறது. அதுகுறித்த பெருமிதங்களும் அவளுக்கு இல்லாமல் இல்லை. திரையரங்கின் கதவுகள் திறந்து கூட்டமாய் மக்கள் நுழைகையில் ஒரு பக்கமாக குழந்தைகளை அணைத்துக் கொண்டு இன்னொருபுறம் அவளின் இடையை இறுகப்பற்றினான். அந்தக் கைகளில் இருந்த சூட்டின் காரணத்தைப் புரிந்து அவள் திரும்பி சிரித்தாள். அவர்களோடு நடந்த வந்த இளைஞர்களில் ஒருவன் யதார்த்தமாக படுவதுபோல் தனது வலது கையால் அவளின் பின்புறத்தை தடவிக் கொண்டு சென்றான். சாந்தியும் ஈஸ்வரனும் ஒரே நேரத்தில் அதனைக் கவனித்தபோதும் சூழல் கருதி கடந்து சென்றனர். திரையரங்கின் குளிர்ச்சியை மீறி இன்னும் ஈஸ்வரனுக்கு சட்டைக்குள் வியர்த்துக் கொண்டிருந்தது. காற்றில் முகம் தெரியாத அந்த இளைஞனின் கைகள் தன் முன்னால் அலைபாய்ந்தபடியே இருப்பதாக நினைத்தான். தற்காலிகமாக அந்தச் சிந்தனையிலிருந்து தன்னைத் துண்டித்துக் கொள்ள அலைபேசியை எடுத்துப் பார்த்தான். வாட்ஸப்பில் அமெரிக்காவின் ஒரு மாகானத்தில் மக்கள் சிவனை வழிபடுகிறார்கள் என்கிற செய்தி வீடியோ ஆதாரங்களுடன் வந்திருந்தது. ஆர்வமாக அதை ஓடவிட்டவனின் தோளில் சாந்தி தட்டி ‘லூசு தியேட்டர்ல வந்துட்டு எதுக்கு ஃபோன நோண்டிக்கிட்டு இருக்க.?’ எனக் கேட்டாள். ‘அமெரிக்காவோட ஆதிக் கடவுள் சிவனாம்? இப்பத்தான் வாட்ஸப் ல வந்திருக்கு.’ என முகத்தை தீவிரமாக வைத்தபடி சொன்னான். ‘நீவேற போனவாரம் ஒரு நியூஸ் வந்துச்சு சிவன் ஒரு ஏலியனாம். எவனாச்சும் லூசுக்கூதித்தனமா அனுப்பினா அப்பிடியே நம்புவியா? பேசாம படத்தப் பாரு.’ என்று சிரித்தாள். ஈஸ்வரனுக்கு சிவனைப் பற்றி யோசிப்பதா சற்றுமுன் கடந்துபோன இளைஞனைக் குறித்து யோசிப்பதாவெனக் குழப்பம். அச்சமும் தடுமாற்றமும் நிறைந்த அந்த இளைஞனின் கைகள் ஒரு பெண்ணின் அருகாமையை அறிந்திராத கைகள். மைதுனத்தைத் தவிர வேறு எந்த வகையிலும் உடலின்பத்திற்கான சாத்தியங்கள் இல்லாத இப்பெருநகரின் ஏராளமானோரில் ஒருவன். சில வருடங்களுக்கு முன் இப்படியான கூட்டங்களில் உரசிய பெண்கள் தந்த கிளர்ச்சியெல்லாம் அவன் நினைவுக்கு வந்தன. “என்ன யோசிக்கிற?” அவள் தான் அமைதியைக் களைத்தாள். திரும்பிப் பார்த்து இருளினூடாக “ம்..

https://telegram.me/aedahamlibrary

ஒன்னுமில்ல.” என சிரித்தான்.

அவனுக்கு படம் பிடிக்கவில்லை. இடைவேளையிலும் படம் முடிந்து வெளியே வந்தபோதும் அவன் கவனமெல்லாம் சாந்தியை பார்வையால் தழுவிச் செல்லும் ஆண்களின் பக்கமாகவே அலைந்தது. அந்தப் பார்வைகள் அவள் குறித்தான இவனின் கிளர்ச்சியை வேறெப்போதும் இல்லாதபடி அதிகமாக்கின. அவனின் முகபாவனைகளில் இருந்து அவனது எண்ணத்தை ஒருவாறாக புரிந்து கொண்ட சாந்தி முகத்தை இறுக்கமாகவே வைத்திருந்தாள். வழியில் இருவரும் பேசிக் கொள்ளவில்லை. சிக்னலில் அவன் ப்ரேக் அடித்து நிறுத்தியபோது இன்னும் அடங்காத வெக்கையில் உடல் வியர்த்துக் கொட்டியது. சுற்றிலும் அவனைப் போலவே வியர்த்து வடிந்த முகங்கள் . தற்செயலாக கண்களை சுழல விட்டபோது தனக்கு அருகிலிருந்த வண்டிக்காரன் திருட்டுத்தனமாய் சாந்தியைப் பார்ப்பது தெரிந்தது. அவள் சேலையை மீறி அளவாய் திமிறிக் கொண்டிருந்த இடையையும், ஜாக்கெட் மூடிய ஒரு பக்க முலையையும் கண்டு அவன் கண்கள் விரிவதைக் கவனித்தபோது சிக்னலில் பச்சை விளக்கிற்கு மாறியிருந்தது. வண்டியை வேகமாக செலுத்தினான். ஏனோ இன்று வீடு தூரமாய்த் தெரிந்தது.

குழந்தைகள் உணவருந்தச் சென்ற இடைவெளியில் வீட்டில் பதுக்கி வைத்திருந்த மதுவை எடுத்துக் குடித்தான். சில இரவுகளை நிதானமாக கடப்பதென்பது எளிதானதல்ல. ”சாப்பிட வா..” சாந்தியின் குரலில் களைப்பு மிகுந்திருந்தது. சட்டையில்லாத உடலுடன் லுங்கியை மடித்துக் கட்டிக் கொண்டு எழுந்தான். குடித்த பிராந்தி வியர்வையாய் உடலெங்கும் பூத்திருந்தன. அவள் கண்களை பார்க்க முடியாமல் பார்வையை தாழ்த்தியபடி சாப்பிடத் துவங்கினான். சாப்பிடும் போதே திரும்பி குழந்தைகள் உறங்குவதை கவனித்தான். ”ரொம்ப நேரமா என்ன யோசிச்சுட்டு இருக்க?” அவன் கள்ளத்தனம் செய்வது தெரிந்து கேட்டாள். ‘அதுவா, அது ஒன்னுமில்ல வுடு.” சோற்றைப் பிசைந்து சாப்பிடத் துவங்கினான். “ம்ஹூம், என்னவோ இருக்கு. ஒழுங்கா சொல்லிடு.” சாப்பிட்டுக் கொண்டிருந்தவனின் கையைப் பிடித்து நிறுத்தினாள். அவனுக்கு சொல்வதா தவிர்ப்பதாவென்று குழப்பம். ஆனால் இப்போது சொல்லாமல் போனால் இன்னும் கொஞ்ச நேரத்திற்குப் பிறகான போதையில் வேறு மாதிரியாக உளறிவிடுவோமென்கிற பயம். தயங்கியபடியே “சொல்லுவேன்

https://telegram.me/aedahamlibrary

திட்டக் கூடாது.” என்றான். ‘ம்ம்ம்’ என தலையசைத்தாள். ”தியேட்டர்ல அந்தப் பையன் உன்னத் தடவினான் ல அத யோசிச்சு பாத்தேன். பாவம் ல.” முகத்தை அப்பாவியாகக் கேட்டான். அவம் போதையில் உளறவில்லை, தெளிவாக நீண்ட நேரம் யோசித்துதான் இதைச் சொல்கிறானெனத் தெரிந்துகொண்ட சாந்தியின் முகம் மாறியது. அவள் முகத்தின் கோணலைக் கண்டதும் ஈஸ்வரன் அசட்டுத்தனமாய் சிரித்தான். “த்தூ, நீயெல்லாம் ஒரு ஆம்பள. வயசு ஆக ஆக உனக்கு மூள மங்கிப் போகுமா?” இவன் தலையைத் தூக்கி அவளைப் பார்த்து சிரித்தான். “வெக்கமில்லாம சிரிக்கிற. தாயோலி அவன இழுத்து நாலு அறவிடாம, பாவமாம்.” எனத் திட்டியபடியே கோவமாக எழுந்து கொண்டாள். “நா என்னடி தப்பா சொல்லிட்டேன். எவ்வளவு பேர் உன்னய பாக்கறாங்க தெரியுமா?” அவனுக்கு சாப்பாட்டிலிருந்து ஆர்வம் இவள் பக்கமாய்த் திரும்பியது. “அதுக்கு?” முறைப்போடு அவனைப் பார்த்தாள். தடுமாறி நின்ற வார்த்தைகளை கேட்க துணிவில்லாமல் நான்கைந்து பருக்கைகளாய் எடுத்துச் சாப்பிட்டான். “வேணாம் விடு, சொன்னா கோவப்படுவ.” என்றவாறே சோற்றைப் பிசைந்தான். “கோவம் வரும்னு தெரியுதில்ல. அப்ப அத யோசிக்கவே கூடாது.” அவளிடம் முன்னளவிற்கு கடுமையில்லை. “யோசிக்க வேணாம்னு தான் இருந்தேன். ஆனா இது நம்மளுக்குள்ளதான. அதனால கேக்கறேன். கோச்சுக்காம சொல்றியா? .” அவள் அவனுக்கு பதில் செல்ல விரும்பாதவளாய் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

சாப்பிட பிடிக்காமல் அவன் உணவுப் பாத்திரங்களை எல்லாம் எடுத்துவைத்துவிட்டு புகைப்பதற்காக வீட்டிற்கு வெளியில் வந்தான். பிரகாசமான சோடியம் விளக்கின் வெளிச்சத்தில் அந்தப் பகுதியிலிருந்த வீடுகள் துர் சம்பவம் நடந்து முடிந்த இடமாய்க் காட்சியளித்தன. காமத்தைத் தொடர்ந்து வரும் பேராசையின் வினோதங்களை எல்லாம் முதல் முறையாய் எதிர்கொண்ட படபடப்பு அவனிடம். நரம்புகளில் புதுவிதமான ஆர்வங்கள் பரவியோடிக் கொண்டிருந்ததால் புகைத்தல் ஆசுவாசமாகவும் களிப்பாகவும் தோன்றியது. சாந்தியின் வனப்பையும் ஸ்பரிசத்தையும் தன்னுடல் தீவிரமாய் எதிர்பார்ப்பதை உணர்ந்து கொண்டவன் பாதியிலேயே சிகரெட்டைத் தூக்கிப் போட்டுவிட்டு உள்ளே சென்றான். துருப்பிடித்த தாழ்ப்பாள் கதவை சாத்த விடாமல் சிரமம் கொடுக்க எரிச்சலோடு முழங்காலால் நகர்த்தி தாழிட்டான். வீடு முழுக்கவே இரவு விளக்கின் மங்கலான வெளிச்சத்தில் ஆழ்ந்திருக்க,

https://telegram.me/aedahamlibrary

நைட்டிக்கு மாறியிருந்த சாந்தி குழந்தைகளிடமிருந்து விலகி விரிக்கப்பட்டிருந்த பாயில் படுத்திருந்தாள்.

கொடியில் தொங்கிக் கொண்டிருந்த துண்டால் உடல் வியர்வையைத் துடைத்துக் கொண்டவன் சிகரெட் வாடை தெரியக் கூடாதென்பதற்காக வாயைக் கொப்பளித்தபின் படுக்கையறைக்குள் நுழைந்தான். அவள் உறங்கியிருக்கவில்லை. வெறுமனே தனது அலைபேசியில் நோண்டிக் கொண்டிருந்தாள். லுங்கியைத் தளர்த்தியபடி அவளருகில் படுத்தவன் தன் பக்கமாய் இழுத்தணைத்தபடியே அவளது அலைபேசியைப் பார்த்தான். முகநூலில் எப்போதோ அவள் மாற்றியிருந்த ஒரு புகைப்படத்திற்கு சிலர் பின்னூட்டமிட்டிருந்தார்கள். அவளுடலெங்கும் தடவியவனைத் திரும்பி பார்த்தவள் “தூக்கம் வரலையா?” என சிரித்தாள். மூக்கிற்கும் இதழ்களுக்கும் நடுவில் அவளுக்கு வியர்த்திருந்தது. ஈஸ்வரன் அவளின் கழுத்துக்குள் முகம் புதைத்து முத்தமிட்டபடியே கீழிறங்க அவளும் அலைபேசியைக் கீழே வைத்துவிட்டு அவனோடு ஒத்துழைத்தாள். தனக்குக் கீழிருந்தவள் வெவ்வெறு பெண்களாய் மாறினாள், நினைவில் சேகரித்திருந்த அத்தனை பெண்களின் உடல்களையும் ஒருசேர நினைத்தபடி சீரான வேகத்தில் முயங்கினான். நான்கு நாட்களுக்குப் பிறகு நிகழும் இந்த புணர்ச்சியில் அவனிடம் வெளிப்பட்ட புதிய ஆர்வங்களால் திக்குமுக்காடிப் போனாள். திருமணமான நாட்களில் இருந்த உற்சாகத்தை திரும்பவும் வெளிப்படுத்துகிறான். நீண்ட கலவிக்குப் பிறகு எழுந்து கொள்ள மனமில்லாமல் களைத்துப் போய் படுத்திருந்தார்கள்.

கண்கள் திறந்த நிலையிலேயே சாந்தி விட்டத்தைப் பார்த்து மெல்லிய ஒலியில் சிரித்தாள். அவன் ஆழ்ந்த மூச்சை இழுத்துக் கொண்டிருந்தான். ”எதுக்கு சிரிக்கிற?” சாந்தி எதுவும் சொல்லாமல் தொடர்ந்து சிரித்தாள். எழுந்து உடலின் வியர்வையைத் துடைத்துக் கொண்டு அவளைத் தன்பக்கம் இழுத்தபடி திரும்பவும் அதே கேள்வியைக் கேட்டான். ‘எதுக்கு லூசு சிரிக்கிற?” தன் சிரிப்பு உறங்கிக் கொண்டிருக்கும் குழந்தைகளை எழுப்பிவிடக் கூடாதென்கிற கவனத்தோடு சாந்தி சன்னமான குரலில் “உண்மையச் சொல்லு எவள நினைச்சிட்டு இவ்ளோ நேரம் செஞ்ச?” எனக் கேட்டாள். நேரடியான அந்தக் கேள்வியில் ஒருநொடி துணுக்குற்றாலும் அதுதான் உண்மை என்பதை சொல்லாமல் சிரித்து மழுப்பினான். “மழுப்பாம உணமையச்

https://telegram.me/aedahamlibrary

சொல்லு.” விடாப்பிடியாய் திரும்பவும் கேட்டாள். “இன்னிக்கி பாத்த படத்துல ஹீரோயினுக்கு அக்காவா ஒருத்தி நடிச்சிருந்தாளே பொசு பொசுன்னு..” அந்த நடிகையின் பெயரை யோசித்தான் தெரியவில்லை, அவளுக்கும் தெரியவில்லை. ஆனால் ஆச்சர்யப்பட்டு . “அவளையா?” எனக் கேட்டாள். “ஆமா ஆரம்பிக்கும் போது அவ, அப்பறம் மதியானம் புஹாரில சாப்பிடும் போது பக்கத்து டேபிள் ல பாத்தமே ஒரு பொண்ணு.” சாந்திக்கு அந்த இன்னொரு பெண்ணின் முகம் நினைவிற்கு வரவில்லை. “ரெண்டு பேர நெனச்சுட்டா எங்கூட இருந்த?” அவளின் முகம் சுருங்கியது. “இல்லடி கடைசியா முடிக்கும் போது…” என அவன் இழுத்தான். “ஓ ஒரு நேரத்துல மூணு பேர் கேக்குதா உனக்கு? சரி மூணாவது யாருன்னு சொல்லு.” அவன் தயங்கினான். “முழுங்காம சொல்லிடு.” அவள் அதட்டும் தொனியில் கேட்க, “நம்ம எதிர்வீட்ல இருக்கால்ல கீதா. அவ.” என சிரித்தான். அவ்வளவு நேரமும் பொறுமையாக படுத்திருந்த சாந்தி ஓங்கி அவன் வயிற்றில் உதைத்தாள். “த்தூ. தாயோலி, எந்திரிச்சுப் போடா.” அவள் ஆத்திரமாகக் கத்தியதைப் பார்த்ததும் பயந்து போய் ஈஸ்வரன் “நீதான கேட்ட அதான் சொன்னேன். அதுக்கு ஏன் திட்டற?” என்றான். “உனக்கெல்லாம் வெக்கமா இல்ல, அவள மூஞ்சிக்கு நேராப் பாக்கறப்பல்லாம் தங்கச்சி தொங்கச்சிங்கறது… ராத்திரி எங்கூட படுக்கறப்போ அவள நெனச்சுட்டு படுக்கறது… நீயெல்லாம் மனுஷனா. வெளில போ மொதல்ல.” படுத்திருந்தவள் தலையை வாரிச் சுருட்டிக் கொண்டு வேகமாக எழுந்து கொண்டாள். எளிதில் தன்னை அவள் வீழ்த்திவிட்டாளோ என்ற இயலாமையும் கோவமும் சேர, “ஏன் நீ மட்டும் என்னவாம் தியேட்டர்ல உன்னத் தடவுன பையன நெனச்சுட்டுதான இவ்ளோ நேரம் படுத்திருந்த.” என்றான். ”அடச்சை. உன்னமாதிரி சில்ற புத்தி இல்ல எனக்கு. எவன் கூடயாச்சும் படுக்கனும்னா நேரா போயி அவன்கூட படுப்பேன். அவன நெனச்சுக்கிட்டு உங்கூட படுக்க மாட்டேன். நீயெல்லாம் ஒரு ஆம்பளன்னு. போடா வெளிய.”. அவளை எதிர்கொள்ளத் துணிவின்றி அந்த அறையிலிருந்து வெளியேறிய நொடியில் படுக்கையறையின் கதவுகளை இறுக சாத்தி தாளிட்டாள்.

3.

இரண்டு நாட்களுக்கு முன் திருவண்ணாமலையிலிருந்து திரும்பி வருகையில் பேருந்தில் நல்ல கூட்டம். பௌர்ணமி நாளில் கிரிவலம்

https://telegram.me/aedahamlibrary

செல்வதற்காக வந்த பக்தர்கள். நான்கு பேருந்துகளில் ஏற வேண்டியவர்களை ஒரே பேருந்துக்குள் அடைத்தது போல் இடைவெளியில்லாமல் மனிதர்கள். எல்லா பௌர்ணமியிலும் அப்படித்தான். ஓட்டுநர் இறுக்கையைத் தவிர்த்து கிடைக்கிற இடத்திலெல்லாம் ஆட்கள் உட்கார்ந்தும் நின்றும் வருவார்கள். ஈஸ்வரனுக்கு அண்ணாமலையாரின் மீது அலாதியானதொரு பக்தியுண்டு. சரியான வயதில் வேலை கிடைத்து திருமணம் குழந்தைகளென தன் வாழ்க்கை ஆரோக்கியமாய் அமைந்தது அண்ணாமலையார் தந்த வரமென நம்புவான். அதனாலேயே இந்த வழித்தடத்தில் ஓட்டுநராய் இருப்பது அவனுக்கு எப்போதும் உற்சாகமானதொன்றாக இருக்கும். நெடுஞ்சாலையின் இரவு நேரங்களில் வாகனம் ஓட்டும் மனிதர்கள் ஒருவிதத்தில் ஆசிர்வதிக்கப்பட்டவர்கள். யாரோடும் பேசத் தேவையில்லாமல் விழித்திருக்கக் கூடிய நீண்ட இரவுகள் கிடைக்கப்பெற்றவர்கள். இவன் நடத்துநரோடுகூட அதிகம் பேசுவதில்லை. சன்னமான ஒலியில் ரேடியோவில் பாடலை ஒலிக்கவிட்டு சாலையை வேடிக்கை பார்த்தபடியே வண்டியை ஓட்டுவதில்தான் உற்சாகம்.

அன்று வண்டியக் கிளப்புவதற்கு முன்பாகவே கவனித்திருந்தான் முன் இருக்கையில் ஒரு பெண் தன் குழந்தையோடு அமர்ந்திருந்தாள். சரியாக இவனின் இருக்கைக்கு எதிர் இருக்கை. காலையிலிருந்து விரதமிருந்தது, அண்ணாமலையாரின் மீதிருந்த பக்தியெல்லாம் காணாமல்போய் அந்தப் பெண்ணையே மேய்ந்து கொண்டிருந்தான். யாரோ தன்னை நீண்ட நேரமாக கண்கானிப்பதுபோன்ற அச்சமெழ திரும்பிப் பார்த்தான். இருளில் திருவண்ணாமலையின் வெக்கை நிரம்பிய மலையின் கண்கள் இவனைப் பார்த்துக் கொண்டிருந்தன. மனதின் பதட்டங்களைக் காட்டிக் கொள்ளாமல் தனது இறுக்கையில் ஏறி அமர்ந்துகொண்டான். பின்னால் வரும் வாகனங்களைப் பார்க்க கண்ணாடியைப் பார்க்க வேண்டுமென்றால் அவளையும் பார்த்துதான் ஆக வேண்டும். பேருந்து கிளம்பியதிலிருந்து சாலையைக் கவனிக்கும் பாவனையில் அவளைக் கவனித்தபடி வந்தான். அருகில் பேருந்தின் இந்த மங்கலான வெளிச்சத்தில் அவள் அசாத்தியமான உயரமும் இடுங்கிய கண்களும் கொண்டவளாய்த் தெரிந்தாள். போதையூட்டும் அத்தனை அம்சங்களும் மிகுந்து கிடந்தவள் அவனை முதல் தடவையாய்ப் பார்த்தபோது

https://telegram.me/aedahamlibrary

இயல்பாய்ச் சிரித்தாள். பேருந்துச் சூட்டில் தாமதமில்லாமல் அவன் குறி விரைத்தது. இந்தப் பசிதான் எத்தனை வக்கிரமானது, கொடுமையானது. எல்லாமிருந்தும் எதுவுமில்லாத தவிப்பை ஒரே நொடியில் உருவாக்கி மனம் பதைபதைக்க வைத்துவிடுகிறது. நாவினடியிலும் விரல்களிலும் மாதுளையின் சுவையையும் கொதித்த பாலின் சூட்டையும் உணர்ந்தான். மாதுளையின் சுவை அவனை வண்டி ஓட்டவிடாமல் சூழ்ந்து தொந்தரவு செய்தது. பசியில் கால்கள் நடுங்கின. அரை போத்தல் நீர் குடித்தான். பசி வியர்வையாய் வெளியானதே தவிர குறைந்திருக்கவில்லை. ஸ்டியரிங்கைப் பிடித்திருந்த கைகள் உதறலெடுக்க, அவளைப் பார்ப்பதைத் தவிர்த்தான். வாகன நெரிசலில் ஊரைத் தாண்டவே இரண்டு மணி நேரங்கள் ஆகிவிட்டிருந்தது. பேருந்துக்குள் பயணிகள் புழுக்கம் தாளாமல் புலம்பினர். ஒவ்வொரு நான்கடி நகர்வதற்கும் சில நிமிடங்கள் ஆனதால் தன்னையும் மீறி அவளைப் பார்த்தான். அந்தப் பார்வையின் குறுகுறுப்பு அவளுக்கு எரிச்சலூட்டினாலும் எழுந்து வேறு இடம் செல்ல வழியில்லாமல் அப்படியே உட்கார்ந்திருந்தாள். பொறுத்துப் பார்த்து முடியாமல் அந்தப் பெண் இரண்டு முறை ஜன்னலுக்கு வெளியே காறித் துப்பிவிட்டு இவனைப் பார்த்தாள். இவனுக்கு அவமானமாய்ப் போனது. ‘என்ன கருமம் இது, சற்றைக்கு முன்னர் வரை இந்த தலையில் எந்த சிந்தனையுமில்லை. அருணாச்சலேஸ்வரனை தரிசித்த நிம்மதியில் பூரிப்பில் வேலையைத் துவங்கினால் இப்போது இந்த மனமும் உடலும் ஏன் முன்பின் தெரியாத ஒரு பெண்ணுக்காக இப்படி அலைந்து அவமானப்படுகிறது? அந்த உணர்ச்சியிலிருந்து தன்னைத் துண்டித்துக் கொள்ள வேண்டுமென நினைத்து தோற்றுப் போனான். அவன் மனம் கட்டளைகளை ஏற்க மறுத்தது.

தேநீருக்காக நெடுஞ்சாலையோர தேநீர்க்கடையில் பேருந்தை நிறுத்திய போது சிறுநீர் கழிக்கச் சென்றவனை மறித்து நிறுத்திய அந்தப் பெண் ‘பாத்தா டீசண்ட்டா இருக்க, பொம்பளையவே பாக்காத மாதிரி இப்பிடி பாக்கற. வெக்கமா இல்லியா உனக்கு?’ என்று கேட்டாள். அப்போதும் கூட அவள் சொல்வதை விடுத்து அவன் மனம் அவன் உடலையே யோசித்துக் கொண்டிருந்தது. பிரச்சனையை வளர்க்க விரும்பாமல், ‘தெரியாம தொந்தரவு பண்ணிட்டேம்மா. மன்னிச்சுக்கோ’ என்று சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்துவிட்டான். திரும்ப பேருந்தைக் கிளப்பிய போது வலிய வரவழைத்துக் கொண்ட

https://telegram.me/aedahamlibrary

உற்சாகத்தோடு நடத்துநரிடம் பேசியபடியும் பாடல்களைக் கேட்டபடியும் அவள் மீது தன் கவனம் திரும்பாமல் பார்த்துக் கொண்டான். உடல் ஒன்றைத் திட்டமிட்டுச் செய்தாலும் மனம் அனிச்சையாய் ஒன்றை செய்து கொண்டுதான் இருந்தது.

புத்தியை மீறின இச்சையை முற்றிலுமாகத் துறக்க நினைத்தான். ஒருவேளை உணவை மட்டுமே தினமும் எடுத்துக் கொண்டான். ஆனால் பசி இச்சையை அதிகமாக்கியது. இது வலிந்து உருவாக்கிய பசி. அதனால் மனதின் குரூரங்களையே துப்ப முனைந்தது. ஐயப்பன் கோவிலுக்கு மாலை போட்டால் மனம் சமாதானமாகுமெனத் தோன்றியது. ஆனால் இது கார்த்திகை மாதமில்லை. இதிலிருந்து விடுபட என்ன வழி? காமத்தின் பிடிக்குள் உழல்வதை வெறுத்தான். ஒவ்வொரு நாளும் அதன் பிடி இறுகி இவனை அச்சுறுத்தியது. அவனின் போக்குகளை கண்டும் காணாமல் சாந்தியும் அமைதியாக இருந்தாள். மனிதன் ஆக இறுதியில் தன் இச்சைகளிடம் தோற்றுவிடும் இயற்கையின் நியதியே இறுதியில் வென்றது. ஒரு வாரகால போராட்டத்திற்குப் பெண் சாந்தியை சமாதானம் செய்துவிடலாமென அவளிடமே சரணடந்தான். பெண்களிடம் தன் தோல்வியை ஒப்புக் கொள்வதுபோல் சரணடையும் ஆண்கள் சாதுர்யமாக காரியம் சாதிக்கத் தெரிந்தவர்களாய் இருக்கிறார்கள். அன்று அவள் அனுமதித்த போது கூடலில் மட்டுமே கவனமாய் இருந்தான். அவளுக்கு அவனை நினைக்க ஆச்சர்யமாகவும் ஆயாசமாகவுமிருந்தது. ஒரு பள்ளிக்கூட மாணவன் பொறுப்போடு தேர்வெழுதும் கவனத்தோடு அவளுடலில் கரைந்திருந்ததால் முடியும்வரை எதும் சொல்லக்கூடாதென பொறுமையாய் ஒத்துழைத்தாள். நீண்ட கலவிக்குப் பிறகெல்லாம் பெருங்கடலை நீந்திக் கடந்துவிட்ட முக பாவனைகளோடு அவன் ஒதுங்கி படுப்பதை இன்றும் கவனித்தாள். ‘இந்தா, என்ன வயசாவுது உனக்கு. இன்னும் இடுப்புக்கு கீழதான் உலகம்னு இருந்துட்டு இருக்க. வேற நெனப்பே இருக்காதா?” உடைகளை சரி செய்துகொண்டபடி கேட்டாள். கடந்த சில நாட்களாக நடந்த மனப்போராட்டத்தை அவளிடம் சொல்லலாமா? வீண். அவன் யோசித்துப் பார்த்தான். அவள் சொல்வதில் உண்மையில்லாமல் இல்லை. ஆனால் எதை நினைக்க? இந்த வீட்டிற்கு வெளியிலான அவன் உலகம் அவன் ஓட்டுகிற பேருந்தும், பனிமனையும்தான். பத்து வருடங்களுக்கும் மேலாக சென்னையிலிருந்து திருவண்ணாமலை

https://telegram.me/aedahamlibrary

செல்லும் ஒரே வழிப்பாதை. பார்த்து பழகிப்போன அதே சாலை அதே மனிதர்கள். நாற்பது வயதுகளில் வாழ்க்கை எத்தனை சலிப்பாகிறதென்பதை இவளுக்கு எந்த விதத்தில் சொல்லி புரியவைப்பது? தன் கற்பனைகள் சந்தோசங்கள் சாகசங்கள் எல்லாவற்றையும் அவளிடம் மட்டுமே முயற்சித்து பார்க்க முடியும். ”வேற எதடி நான் நெனைக்கிறது? வேலைக்கிப் போறேன். சம்பளம் குடுக்கறாங்க. புள்ளைங்கள நீ பாத்துக்கற. இந்த வீடு, நீ, டிப்போ இவ்வளவுதான் எனக்கு உலகம். யோசிக்கிறதுக்கு எனக்கு வேற என்ன இருக்கு? நாலு நாளைக்கி ஒருதடவ படுக்கற இந்த சந்தோசமும் இல்லன்னா என்ன மாதிரி உலகம் தெரியாம வாழ்றவனெல்லாம் பைத்தியக்காரனா போயிருவான்.” தன்னைப் பற்றியான மரியாதைக்குரிய அபிப்பிராயங்கள் நிச்சயமாக அவளுக்கு வந்திருக்ககூடுமென நினைத்து சிரித்தான். “இப்பயும் நீ பைத்தியக்காரந்தான். அன்னிக்கி அவ்வளவும் செஞ்சுட்டு திரும்பவும் எதிர் வீட்டுக்காரிய தங்கச்சின்னு கூப்டற” பாதுகாப்பான இடத்திற்கு நகர்ந்துவிட்டோமென நினைத்த அடுத்த நொடியே மீண்டும் எளிதாக அவனை வீழ்த்தினாள். கோவப்படுவதால் எந்தப் பலனுமில்லை என்பதைத் தெளிவாக தெரிந்து வைத்திருந்த ஈஸ்வரன் சரணடையும் தனது யுக்தியையே மீண்டும் பயன்படுத்தினான். ”ஊர்ல பாதிப்பேர் இப்பிடித்தான் இருக்காங்க. ஆனா வெளில தெரியறதில்ல. பொண்டாட்டி இல்லாம மத்த பொம்பளைங்க மேல ஆசப்படாம வாழ்றதுக்கு மனுஷன் ஒன்னும் கல்லு இல்ல. நாலு பேருக்குத் தெரிஞ்சா அசிங்கமேங்கற காரணத்துக்காகத்தான் 90 சதவிகிதம் பேர் அத வெளில சொல்லாம இருக்கான். உங்கிட்ட எதையும் மறைக்கக் கூடாது உனக்கு உண்மையா இருக்கனும்னு நெனைக்கிறன் ல நீ இதும் கேப்ப இன்னமும் கேப்ப.” என தழு தழுத்த குரலில் அவன் சொல்வதை அமைதியாகக் கேட்டாள். மனைவியின் முகத்தைப் பார்க்க முடியாமல் அறையிலிருந்து வெளியேறி சமயலறை விளக்கைப் போட்டான். நைட்டியின் திறந்த ஸிப்போடு சாந்தியும் அவனுக்குப் பின்னால் சென்றாள். பின்னிரவுகளில் அவன் மதுவருந்தினாலோ பால் கலக்காத கருந்தேநீர் அருந்தினாலோ அந்த இரவிற்கான அவன் பசி அடங்கவில்லையென்பதை அவள் நன்றாகவே அறிவாள். “டீ எனக்கும் சேத்து வெய்யி.” கலைந்த தன் கூந்தலை அள்ளி முடிந்து கொண்டாள். கைகளைத் தூக்கும் போது களைப்பை மீறின அவள் முகத்திலும்

https://telegram.me/aedahamlibrary

உடலிலும் இரவின் மகத்துவங்கள் நிரம்பிக்கிடந்தன. அமைதியாய் தேநீரில் ஏலக்காயும் இஞ்சியும் தட்டிப்போட்டவனைப் பார்க்க அவளுக்கு சிரிப்பு வந்தது. இந்தத் தேநீர் அவனுக்கானதல்ல, இவளுக்கானது. சமாதான காலங்களில் அவன் இதுபோல் ஏராளமான ஆயுதங்களைப் பயன்படுத்துவதுண்டு. ஆண்கள் சமையல் செய்யக் கற்றுக்கொள்வதற்குப் பின்னால் தான் எத்தனை சுயநலங்கள் மிகுந்திருக்கின்றன?

அவன் தந்த தேநீரை உறிஞ்சியபடியே தனது அலைபேசியில் முகநூலை நோண்டிக் கொண்டிருந்தாள். அந்தப் பின்னிரவிலும் உறக்கம் வராத சிலர் கடமையுணர்ச்சியோடு அவள் உள்பெட்டியில் செய்தி அனுப்பிக் கொண்டிருந்தார்கள். அலட்சியமாக எதையும் திறந்து பார்க்காமல் செய்திகளைக் கடந்தவளின் பின்னாலிருந்து அணைத்தபடி ஈஸ்வரனும் அவளின் முகநூலைப் பார்த்தான். வரிசையாக வந்த உள்பெட்டி செய்திகளையும் அவளையும் பார்த்தவன் "மேலமெனக்கெட்டு இத்தன பேர் உனக்கு மெசேஜ் அனுப்பறானுங்க ல திறந்து படிக்கவாச்சும் செய்யேன்." உள்பெட்டியில் வந்திருக்கும் செய்திகளை வாசிக்க அவன் ஆர்வமாய் இருந்ததைப் புரிந்து கொண்டு தனது அலைபேசியை அவனிடமே கொடுத்தவள், "நீயே படி, நான் போறேன். எல்லாமே ஒரே மாதிரிதான். ஹாய்.. தூங்கலையா... ஹலோ.. இருக்கீங்களா? ... செக்ஸியா இருக்கிங்க. உங்க வாட்ஸப் நம்பர் கெடைக்குமா?" இவ்ளோதான் இவனுகளுக்குத் தெரியும். என்னவோ இப்ப நான் வாட்ஸப் நம்பர் குடுத்துட்டா மட்டும் நேரா என் வீட்ல வந்து நிக்கப் போற மாதிரி. பைத்தியக்காரனுங்க." அலட்சியமாக அவன் கைகளில் அலைபேசியைக் கொடுத்துவிட்டு செல்ல மெசஞ்சரை திறந்து பார்த்தான். அவள் சொன்னது சரிதான். கற்பனையில் மட்டுமே பெண்ணுடலின் அருகாமையைப் பார்த்து ஏங்கிப் போனவர்களின் அதே வழக்கமான செய்திகள். அவனுக்கு சிரிப்பாகவும் பரிதாபமாகவும் இருந்தது. இதற்குமுன் முகநூலில் தன் படங்களுக்கு வரும் பின்னூட்டங்களை இவனிடம் காட்டிச் சிரிப்பாள். ஆனால் எவருக்கும் நன்றி சொல்லிக்கூட பின்னூட்டமிடமாட்டாள். ஒருமுறை ஈஸ்வரனின் பிறந்த நாளுக்கு வாழ்த்துச் சொல்லி ஒரு டப்மாஷ் போட்டிருந்தாள். முகபாவனையோ நடிப்போ எதுவும் சிறப்பாக இல்லாத போதும் அதற்கு நானூறுக்கும் அதிகமான பின்னூட்டங்களும் ஆயிரம் வரை விருப்பக்குறிகளும் வந்திருந்ததை இவன் நம்பமுடியாமல் பார்த்தான்.

https://telegram.me/aedahamlibrary

பாதி குடிக்காமல் விட்டிருந்த தேநீர் ஆறிப்போயிருந்தது. சாந்தியின் புகைப்படங்களில் இருந்த பின்னூட்டங்களையும் மெசஞ்சரில் அவளுக்கு வந்து செய்திகளையும் தன்னை மறந்து வாசித்துக் கொண்டிருந்தான். 'இவனுக்கு என்னதான் பிரச்சனையென புரியாமலேயே அவளும் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். மற்றவர்கள் சாந்தியைக் குறித்து எழுதியவை ஒரே நேரத்தில் இவனுக்கு கோவத்தையும் கிளுகிளுப்பையும் எரிச்சலையும் உருவாக்கியிருந்தது. தன்னை அவள் கவனித்துக் கொண்டிருக்கிறாள் என்பது உரைக்க தேநீர்க் கோப்பையை கழுவி வைத்துவிட்டு மீண்டும் அவளுக்கு அருகில் சென்று படுத்துக் கொண்டான்.

அவளை இப்போது நெருங்குகையில் முகம் தெரியாத பெண்களிடம் முகம் தெரியாத ஆண்கள் கொள்ளும் கூட்டுக் கலவியைப் போல் சுவாரஸ்யம் தரக்கூடியதாய் அவனுக்குத் தோன்ற அவளின் அபூர்வத் தளங்களில் விரல்களை அலையவிட்டான். "நீயும் தூங்க மாட்ட, என்னியும் தூங்க விடமாட்ட." சாந்தி சிரித்தாள். பேசுவதில் ஆர்வமில்லாமல் அவளுடலோடு வேகமாக தன்னைப் பிணைத்துக் கொள்ளத் துவங்கினான். அவனின் சமீபத்திய நடவடிக்கைகளுக்கான காரணங்களைப் அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. தன்னுடலை அவனுடைய விருப்பங்களுக்கு ஏற்றதுபோல் பயன்படுத்திக் கொள்ள நினைப்பதை அனுமதிக்க அவள் மனம் மறுத்தது. எதிலெல்லாம் கிளர்ச்சியும் சந்தோசமும் காண்கிறானோ அதையெல்லாம் சீண்டி அவனை பலவீனப்படுத்த நினைத்தாள். 'இவ்ளோ பேர் உன் அழக புகழ்றாங்க. உனக்கு ஒருத்தன் மேல கூட ஆச வரலியாடி?' என அவளின் காதுகளுக்குள் கேட்டான். 'ஏன் வராம நிறைய பேர் மேல வருமே. நீ ஊர்ல இருக்கவள லாம் நெனச்சுக்கிட்டு எங்கிட்ட படுப்ப. நான் மட்டும் புருஷனே பொக்கிஷம்னு நெனைக்கனுமா? என்றாள். தனது முகநூல் பக்கத்தை பார்த்துவிட்டு அவன் எதையெல்லாம் யோசிக்கக் கூடுமென ஓரளவு யூகித்திருந்ததால் எப்போதும் இல்லாதபடி சத்தமாக முனகினாள். உணர்ச்சி மிக்க ஒலிகளை போலியாக எழுப்பினாள். அவள் தன்னை சீண்டுகிறாள் என்பது புரிந்து அவள் மீதான ஆர்வத்தை இழந்தவன் பாதிக்கு மேல் என்ன செய்வதெனத் தெரியாமல் அப்படியே அவள் மேல் படுத்திருந்தான். அவள் இப்பொழுதும் ஒலி எழுப்புவதை நிறுத்துவதில்லை. காமம் தலையிலிருந்து இறங்கியதால் விலகிப் படுத்தான். மனம் வேகமாய்

https://telegram.me/aedahamlibrary

அடித்துக் கொண்டது. ‘ஒத்தா அவுசாரி முண்ட. வேணும்னே செய்றா.’ உதடுகள் சத்தமே இல்லாமல் முனுமுனுத்தன. உடைகள் களைய விட்டத்தைப் பார்த்தபடி கால்களை விரித்த நிலையில் சாந்தி இப்பொழுதும் காமத்தின் வினோத ஒலிகளை எழுப்பியபடி இருந்தாள். அருகில் கிடந்த அவன் கைகளை எடுத்து தன் மீது போட்டுக் கொள்ள அவன் வேகமாய் விலக்கினான். ”யார நெனச்சுட்டு எங்கூட படுக்கற சொல்லு.” பொறுமையை மீறி வார்த்தைகள் கொப்பளிக்க அவள் நிதானமாக நைட்டியை சரி செய்து கொண்டு எழுந்து அமர்ந்தாள். ‘எதுக்கு இப்ப கோவப்படற? நான் முன்னயே உங்கிட்ட சொல்லிட்டேன். எவன்கூடயாச்சும் போகனும்னா நேரா அவங்கிட்ட போவேன். உங்கிட்ட சொல்லனும்னு கூட எனக்கு அவசியம் இல்ல. ஆனா இன்னொருத்தன நெனச்சுக்கிட்டு உங்கூட படுக்க மாட்டேன்.” அவள் சிரிப்பும் பார்வையும் அவனுக்குள்ளிருந்த ஆத்திரத்தை மிகுதியாக்கியது. ஆனால் அவள் யாரோ ஒருவனை அல்லது சிலரை மனதில் நினைக்காமல் இதைச் சொல்லமுடியாதென உறுதியாய் நம்பினான். யாராய் இருக்கும்? பதில் தெரிந்து கொள்ளாமல் அவனால் இயல்பாக முடியாது. “சரி அப்பிடி போறதுன்னா யார்கிட்ட போவ?” விடாப்பிடியாய்த் திரும்பவும் கேட்டவனைப் பார்க்க இவளுக்கு பாவமாக இருந்தது. அவனைப் பார்க்க பிடிக்காமல் தண்ணீர் குடித்தவள் ‘நம்ம குவார்ட்டர்ஸ் வாசல்ல இஸ்திரி கட போட்றுக்காரே முத்து. அவருதான் முதல் சாய்ஸ்.’ என்றாள். ‘அடச்சீ போயும் போயும் அவனா?’ தலையில் அடித்துக் கொண்டான். அவனின் இந்தக் கோலத்தை வீடியோ எடுக்கலாமாவென குதர்க்கமாக ஒரு நொடி யோசித்தாலும் பிழைத்துப் போகட்டுமென விட்டவள், ‘ஏன் நீ எதிர்வீட்டுக்காரி கிட்ட என்னத்தக் கண்டன்னு அவள நெனச்சு எங்கூட படுத்த? அவனுக்கென்ன உயரமா ஒல்லியா நல்லாத்தான் இருக்கான்.” அவள் குரலில் இருந்த கேலியில் ஈஸ்வரன் மொத்தமாக வீழ்ந்து போனான். அவளோடிருக்க பிடிக்காமல் அவன் வெளியேற, சாந்தி நிம்மதியாக உறங்கினாள்.

4

தோற்றத்தை மாற்றிக் கொள்வதன் வழியாய் மனம் தன்னைத் தானே மாற்றிக் கொள்ளுமென தொலைக்காட்சியில் ஒரு ஞானி சொல்வதை கேட்டு அடுத்தநாளே முடிவெட்டி சவரம் செய்துகொண்டு

https://telegram.me/aedahamlibrary

தோற்றத்தை மாற்ற த் துவங்கினான். ஒரு மனிதனின் தோற்றமென்பது என்ன தின்று கொழுத்த உடலும் அவன் உடையுமா? மனம் சிந்திப்பதை தேடுவதை வெளிப்படுத்துவதுதானே. அவன் சிந்திப்பதற்கும் வெளிப்படுத்துவதற்குமான இடைவெளியை அவனைத் தவிர எல்லோரும் கண்டுகொண்டனர். புதிதாக அலைபேசி வாங்கினான். தனக்கு முகநூல் கணக்கு துவங்குவதை விடவும் சாந்தியின் முகநூல் கணக்கைத் தொடர்வது அவனுக்கு முக்கியமானதய் இருந்தது. அவனே அவளின் புதிய புகைப்படங்களை மாற்றினான். நகைச்சுவைத் துணுக்குகள், சாய்பாபா படம், சினிமா செய்திகள் போதாக்குறைக்கு தனக்கு பின்னூட்டமிட்டவர்களுக்கெல்லாம் பதில் பின்னூட்டமிடுவதென நாளின் பெரும்பகுதியை அதில் செலவிட்டான். எரிச்சலான சாந்தி 'ஏ எரும உனக்கு ஏதாச்சும் செய்யனும்னு அரிப்பு இருந்தா உன் பேர்ல ஐடி ஆரம்பிச்சு செய்யி. எதுக்கு என் பேர்ல செய்ற?' என ஏசினாள். ' சரி சரி இனிமே எதும் போஸ்ட் பண்ணல.' என அவளுக்கு சமாதானம் சொல்லிவிட்டாலும் அவனால் அமைதி காக்க முடியவில்லை.

பண்டிகை நாள். திறந்து கிடந்த எதிர்வீட்டிற்குள் உற்சாகமாக கீதாவின் குடும்பத்தினர் கொண்டாடிக் கொண்டிருந்தனர். வேலைகளுக்கு நடுவே ஈஸ்வரனின் கண்கள் அவ்வப்போது கீதாவைத் தேடின. சாந்தி இரண்டொருமுறை பார்த்துவிட்டு 'ஏ லூசு, தலைல எண்ண வெச்சு முக்கா மணி நேரம் ஆச்சு, போயி குளிச்சுட்டு வா. பண்டிக முடிஞ்சிரப் போகுது' என அடுப்படியிலிருந்து கத்தினாள். ஈஸ்வரன் அவசரமாக குளியலறைக்குள் நுழைந்தான். எண்ணையில் ஊறிய உடலில் வெதுவெதுப்பான தண்ணீர் படுவது இதமாக இருந்தது.

நேற்றைய தினம் காலையில் வேலை முடிந்து திரும்புகையில் கீதா ரகசியமான ஒலியில் சாந்தியிடம் பேசுவதைக் கவனித்தான். தன்னைப் பற்றிதான் இருக்குமோ என நினைத்தபடியே அவளைப் பார்த்து சிரித்தான். 'என்னண்ணா இப்பத்தான் வாரீங்களா?' என கீதா எப்போதும் போல் விசாரித்தாள். 'ஆமா தங்கச்சி' என பதிலுறைத்த நொடியில் திரும்பி சாந்தியைப் பார்த்தான். அவள் முகத்திலிருந்தது அருவருப்பா? கோவமா? கூடுதலாக எதுவும் பேசாமல் வீட்டிற்குள் சென்றான். ஆனாலும் மனதை அரித்த குறுகுறுப்பு அடங்கவில்லை. மாலை அவளோடு சேர்ந்து சமையல் செய்யும் போது 'அப்பிடி என்ன குசுகுசுன்னு பேசிட்டு இருந்தீங்க.?" என்று கேட்டான். "பொம்பளைங்க

https://telegram.me/aedahamlibrary

என்னமோ பேசிக்கிறோம், நீ எதுக்கு அதையெல்லாம் கேக்கற?" என கடுகடுப்பாக சொன்னாள். "அவ ரொம்ப நெருக்கம் தான உனக்கு. எனக்காக பேசிப் பாக்கலாம்ல?" அசட்டு தைரியத்தில் கேட்டதுமில்லாமல் அவள் அதற்கு சம்மதிப்பானென்றும் நம்பியவனின் மீது ஆத்திரத்தோடு கையிலிருந்த அரிசிப் பாத்திரத்தை தூக்கி எறிந்தாள். 'உனக்கு அரிப்பு எடுத்தா நீ போயி கேளு. துப்பில்லன்னா மூடிக்கிட்டு இரு. என்னய எதுக்கு மாமி வேல பாக்க சொல்ற. எந்திரிச்சு போடா மொதல்ல." என எரிச்சலோடு கத்தினாள். ஒவ்வொரு முறையும் இப்படி எதாவது ஒன்று நினைத்து அதற்கு நேரெதிராய் நடப்பதில் நொந்து போனான். அவள் அத்தோடு விடவில்லை. 'சைக்கோ தாயோலி குடிச்சு குடிச்சு நீ சைக்கோவா மாறப்போற. பேசாமப் போயி நல்ல டாக்டராப் பாரு.' என்றபோது அவனுக்கு கோவத்தில் உடல் துடித்தாலும் அவளிடம் வெளிப்படுத்த முடியவில்லை. அடித்தால் வாங்கிக் கொண்டு அடங்கிப் போகிறவள் இல்லை அவள். திரும்ப அடிக்க முடியாவிட்டாலும் தான் எத்தனை அருவருப்பானவன் என்பதை ஊரைக் கூட்டிச் சொல்வாள். அந்த ஒன்று போதும் இவனைக் குத்திக் கிழிக்க. பணிந்துபோவதுதான் புத்திசாலித்தனமென ஆறாம் அறிவு உணர்த்தியது.

இத்தனை பிரச்சனைகளுக்குப் பிறகும் அவள் தன்மீது கோவப்படுகிறாளே தவிர, ஒதுக்கி வைப்பதில்லை. சாந்திக்கு தன் மீது இருப்பது அன்பா, அல்லது இரக்கமா அல்லது சகித்துக் கொள்கிறாளா? தன்னையே புரிந்து கொள்ளத் துப்பில்லாதவனால் அவளை எப்படி புரிந்து கொள்ள முடியும். 'சாந்தியக்கா இன்னும் பூஜ பண்ணலியா?' என கதவுக்கு வெளியே கீதாவின் குரல் கேட்டதும் அவளைப் பார்க்கும் ஆர்வத்தில் அவசர அவசரமாக குளியலை முடித்தான். ஈரம் சொட்டும் உடலோடு வெளியில் வந்தவனின் பார்வை கீதாவை மேய்வதை சாந்தியும் கவனித்தாள். அவளின் பார்வையிலிருந்த அருவருப்பு ஈஸ்வரனுக்குள்ளிருந்த உணர்ச்சிகளை சடாரென உடைத்துப் போட்டது. கீதா கிளம்பும் வரை அவன் படுக்கையறையிலிருந்து வெளியேறியிருக்கவில்லை.

5

வீட்டிலிருந்து கிளம்பியதிலிருந்தே அவன் மனம் இயல்பிலில்லை. எதையெல்லாம் சுவாரஸ்யமென்றும் தவறில்லையென்றும் இத்தனை நாட்கள் யோசித்திருந்தானோ

https://telegram.me/aedahamlibrary

அதுவெல்லாம் அச்சங்களாய் மாறியிருந்தன. இதற்குமுன் கிளர்ச்சியடைந்த தன்னால் ஏன் இந்த நாளை இய்ல்பாய்க் கடக்க முடியவில்லை. எல்லாவற்றுக்கும் அப்பால் உடல் தானே. அவள் தன்னை எத்தனை நேசிக்கிறாள் என்பது தெரிந்தும் சமாதானமாக முடியாமல் புழுங்கி நோவதற்கு காரணம் யார்? நானே தானே. எந்தவொன்றிலும் கவனம் செலுத்த முடியாமல் பனிமனையில் இங்கும் அங்குமாய் நடந்து கொண்டிருந்தான். பணி துவங்க முக்கால் மணி நேரமிருந்தது. வந்ததிலிருந்து குடித்திருந்த இரண்டு மூன்று தேநீரால் நா முழுக்க பித்தச் சுவை. வாட்டர் சர்வீஸ் முடிந்து டீசல் அடிப்பதற்கு ஒரு பேருந்து நகர்ந்து செல்வதைக் கவனித்துக் கொண்டிருந்தவனை யாரோ தோளில் தட்டிக் கூப்பிட திரும்பிப் பார்த்தான். மெக்கானிக் முருகன். 'என்னய்யா இப்பிடி உக்காந்திருக்க, உடம்பு சரி இல்லயா?" கேட்டவாறு அமர்ந்தான். உடலுக்கென்ன எப்போதும் போல்தான் இருக்கிறது. ஆனால் இந்த மனசு... இதை எப்படி அவனிடம் சொல்வது? 'ஆமாய்யா தலவலிக்கிது. கண்ணெல்லாம் எரியுது.' என்றான். முருகன் சிரித்தபடி. 'டூட்டி முடிஞ்சு வீட்ல போய் ரெஸ்ட் எடுக்காம அங்கியும் டபுள் டூட்டி பாத்தா இப்பிடித்தான்.' என்றான். 'அட ஏன்யா நீ வேற. வீட்டுக்கு ஒறமொற வந்திருக்காங்க. அதான் வேல. சரியா தூக்கமில்ல.' என்று சமாளித்தான். 'அப்ப பேசாம ரெஸ்ட்ட போட்டுட்டு காலை வந்து டூட்டி எடுக்க வேண்டிதான?' முருகன் சொல்லியபடியே பணி நேரத்திற்கான பதிவேட்டை எடுத்துப் பார்த்தான். ஈஸ்வரனுக்கும் அதுவே சரியென்றே தோன்றினாலும் இப்போது வீட்டிற்குச் சென்றால் சாந்தி என்ன நினைப்பாளென சங்கடமாய் இருந்தது. இத்தனை வருடங்களில் ஒருபோதும் பணிக்கு வந்து பாதியில் திரும்பியதில்லை. இன்று பாதியில் திரும்புவதற்கான காரணம் இருவருக்குமே அப்பட்டமாய்த் தெரியுமென்றாலும் அவள் மீதான இத்தனையாண்டு கால நம்பிக்கையையும் தானே பொய்யாக்கியதாகிவிடுமே என்று யோசித்தான். வீட்டிற்குமில்லாமல் வேலைக்கும் போகாமல் எங்காவது சென்றுவிட்டால் என்ன? தன் மீது அவள் வைத்திருக்கும் அன்பிற்கும் நம்பிக்கைக்கும் தான் தகுதியானவனில்லை என்கிற குற்றவுணர்ச்சி அவனை பைத்தியம் பிடிக்க வைத்தது. ஒரே மனதாக விடுப்பு எடுத்துக் கொண்டு, பனிமனையிலிருந்து கிளம்பினான்.

பிரபா ஒயின்ஸின் வெள்ளிக்கிழமைக் கூட்டம். போர் நிலத்தின் மனிதக் கழிவுகளுக்கு நடுவில் மேசைகளைப் போட்டதைப்

https://telegram.me/aedahamlibrary

போல் அருவருப்பாய் இருந்தது அந்த மதுக்கூடம். இதுபோன்ற மதுக்கூடங்களில் தனித்து மது அருந்துகிறவனின் நிலை துயரமானது. தனக்கென இடத்தைத் தேடி கண்டடைவது சிரமம். அப்படியே இடம் கிடைத்தாலும் அந்த இடத்தில் அமைதியாக அமர்ந்து குடிக்க முடியாது. அதனாலேயே அவன் பெரும்பாலும் வெளியில் குடிப்பதில்லை. இன்று வேறு மார்க்கமில்லை என்பதால் சகித்துக் கொண்டான். வழக்கமாக மதுவருந்துகையில் இருக்கும் உற்சாகமில்லை. மனதின் போராட்டத்திலிருந்து ஓய்வெடுக்க ஒரு இடைவெளியாய் குடியை தேர்வு செய்தான். குடிக்கத் துவங்கிய சில நிமிடங்களிலேயே மழை வலுத்துப் பெய்யத் துவங்கியது. முக்கால் வாசிப்பேர் அங்கிருந்து கிளம்பிவிட்டார்கள். சிலர் ஒதுங்கி ஒரு தகரக் கூரையின் கீழ் குடித்தார்கள். கடை அடைத்தபிறகும் பரிசாரகனிடம் கூடுதலாக செலவிற்கு பணம் குடுத்துவிட்டு அங்கு நின்றபடியே குடித்தான். போதை அமைதிக்குப் பதிலாக போராட்டத்தையே கொண்டு வந்தது. குழப்பமான நாட்களில் குடிக்கும் மனிதன் போதையின் உச்சத்தில் மிருகமாகிறான். அவனுக்குள்ளிருந்த மிருகமும் விழித்துக் கொண்டது. நேசம் அன்பு எல்லாம் ஒழிந்து போய் இனம் புரியாததொரு வன்மம் வெகுண்டெழுந்தது. அதிகம் நேசிகும் மனிதர்களிடம் மட்டுமே வரக்கூடிய வெறுப்பது. ஒவ்வொரு மனிதனுக்குள்ளுமே ஒளிந்து கிடக்கும் அந்த மிருகம் இப்பொழுது அவனுக்குள் விழித்துக் கொள்ள தன்னை அவள் உதாசீனப்படுத்திய தருணங்கள் அவ்வளவையும் நினைத்துப் பார்த்தான். நிச்சயமாக அவள் கள்ளத்தனம் செய்கிறாள் தான். அவளே சொன்னது போல் யாரிடமாவது படுக்கையைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமானால் சொல்லாமலே தானே போயிருப்பாள். இன்றும் கூட அவளின் உறவினன் வந்திருப்பது அதற்காகத்தான் இருக்கக் கூடும். தான் நம்பும் எல்லாமே உண்மை அதுமட்டுமே நியாயமென உறுதியாய் இருந்தவனின் தலைக்கு மேல் இடியும் மின்னலுமாய் மழை இன்னும் ஓயாமல் வலுத்துப் பெய்து கொண்டிருந்தது.

மழையில் நனைந்த தெருநாய்கள் பெரிய குடியிருப்புகளின் வாயில்களில் உடலைக் குன்னி படுத்துக் கிடந்தன. வீட்டிற்கு செல்லும் சாலைகளுக்கு பழக்கப்பட்ட கால்கள் தானாகவே வேகவேகமாய் நடந்தன. எதையும் எதிர்கொள்ளும் முரட்டு தைரியத்தோடு வீட்டின் கதவைத் தட்டினான். ஒரு நொடி கூட பொறுமையில்லாமல் திரும்ப

https://telegram.me/aedahamlibrary

திரும்ப தட்டிக் கொண்டிருந்தான். திறக்கப்பட்ட கதவுகளுக்குப் பின்னால் அன்பு லுங்கி பனியனோடும் தூக்க கலக்கத்தோடும் நின்றிருந்தார். ‘என்னாச்சு பங்காளி டூட்டிக்குப் போகலியா?’ எனக் கேட்டவரைத் தாண்டி ஈஸ்வரன் அவசரமாக வீட்டிற்குள் சென்றான். படுக்கையறையில் சாந்தி குழந்தைகளோடு உறங்கிக் கொண்டிருந்தாள். முன்னறையில் ஈஸ்வரனின் நின்ற இடத்தில் அவன் காலுக்கடியில் அன்புவின் படுக்கை விரிக்கப்பட்டிருந்தது. ஈஸ்வரனுக்கு தலை சுற்றியது போதையிலா, அல்லது யதார்த்தம் என்னவென்பதைப் புரிந்து கொள்ளாமல் போனதிலா என்று தெரியவில்லை. தடுமாறியபடியே சாந்தியைப் பார்த்தான். ‘உடம்பு கிடம்பு சரி இல்லியா பங்காளி. சாந்திய எழுப்பட்டுமா?” எனக் கேட்டபடியே அன்பு அவனுக்கு தலையை துவட்டிக் கொள்ள துண்டை எடுத்துக் கொடுத்தார். ஈஸ்வரனின் கைகள் நடுங்கின. வாங்கி தலையைத் துவட்டிக் கொண்டவன், ‘ஒடம்புக்கு ஒன்னுமில்லண்ணே. நல்லாத்தான் இருக்கேன். நீங்க படுங்க.’ என எங்கோ பார்த்தபடி சொல்லிவிட்டு உடை மாற்றிக் கொள்ள படுக்கையறைக்குள் நுழைந்துகொண்டான்.